
தர்மசக்கரம்









துன்மதி ஞு மார்கழி மீ சக்கரம் 30 ஆரம் 12

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

தர்ம சக்கரம் தை மாத இதழ்முதல் அடுத்த மார்கழி மாத இதழ்வரை பன்னிரண்டு இதழ்களும் ஒரு சக்கரமாகக் கணக்கிடப்படுகிறது.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் செய்தித் தாள்களில் உள்ளவை போன்று தற்காலிகமானவைகளாக இல்லாமல் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சியாக இருக்கின்றன. சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் திரும்பவும் வாசிக்கும் ஒரு நூலாக அமைகிறது. ஆதலால் ஒரு ஆண்டுக்கான பொருளடக்கத்தை அச்சாக்கி மார்கழி மாத இதழுடன் வைத்து அனுப்புகிறோம். தை முதல் மார்கழி முடிய பன்னிரண்டு மாத தர்ம சக்கர இதழ்களையும் அப்பொருளடக்கத்தை வைத்துப் பைண்டு செய்துகொண்டால் ஒரு நல்ல புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும் மற்றவர்களுக்குப் படிக்கத் தருதற்கும் வசதியாக இருக்கும்.

தங்களுக்கு வரும் தர்ம சக்கர இதழ்களைப் பலரும் படித்துப் பயனடைவதற்கு ஆவன செய்யக்கோருகிறோம்.

ஆதலால் தர்ம சக்கரத்தில் புதிய சந்தாதாரர்கள் சேரும்போது தை இதழ் முதலே சந்தாதாரராய் சேர்ந்துகொண்டு பயன்பெறக்கோருகிறோம். அன்பர்கள் முயன்று தை மாத இதழ் முதலே புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தி பலரையும் ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடச்செய்யக் கோருகிறோம். ஆண்டுச் சந்தா விபரம் பொருளடக்கத்தின் கீழ் தரப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அளவே அச்சாக்கப்படுவதால் கூடிய விரைவில் தை மாதம் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய பழைய சந்தாதாரர்களும் உடன் புதுப்பித்துக்கொண்டு மற்றும் பலரையும் புதிய சந்தாதாரர்களாக அறிமுகம் செய்யக் கோருகிறோம்.

17.12.8

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30	துன்மதி ஹு மார்கழி மீ	ஆரம் 12

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்குமட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலாதவர்கள் ரூபாய் எட்டு மட்டும் அனுப்பலாம். பாக்கி நான்கு ரூபாயைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யி னின்று ஈடு செய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

வெளிநாடு சந்தா: நாங்கள் ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வந்த இதழ்களுக்கு 80 பைசா ஸ்டாம்பு ஒட்டி அனுப்பிக்கொண்டு இருந்தோம். 1–7—1981 முதல் வெளிநாடு தபால் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. ஆதலால் இதழ் ஒன்றுக்கு ரூ. 1-40 பைசாவுக்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டியுள்ளது. எனவே இனி வெளிநாடு ஆண்டு சந்தா ரூ. 35/-ஐ அனுப்பி வைத்து சந்தா பதிந்து கொள்ளக்கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 12-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

வடஆர்காடு ஜில்லா—வேலூரில் 20—12—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : யதீஸ்வரி அம்பிகாப்ரியாம்பா

மதுரை ஜில்லா—தேனியில் 23—12—81 புதன்கிழமை

இடம் : ஸ்ரீ கணேச கந்தபெருமாள் ஆலயம

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

உணவு வசதி : நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

தென்ஆர்காடு ஜில்லா—அவலூர்பேட்டையில் 27—12—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : அகத்தீஸ்வரர் ஆலயம்

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தென்ஆர்காடு ஜில்லா—ஆவணிப்பூரில் 28—12—81 திங்கட்கிழமை

இடம் : அரசினர் உயர்நிலைப்பள்ளி

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சேரன்மகாதேவியில் 3—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : பாரத்வாஜ ஆச்ரமம்

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி : நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 3—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : பெரியகாளியம்மன்கோவில்

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 10—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : விவேகானந்த கல்லூரி

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி : நேரில் பகல் உணவுககு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருச்சி ஜில்லா—துறையூரில் 10—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ கன்னிகா பரமேசுவரி அம்மன் கல்யாண மண்டபம்

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தர்ம சக்கரம்

சக்கரம் 30 ரௌத்திரி ஹு தை — துன்மதி ஹு மார்கழி

1981

प्रज्ञानं ब्रह्म

எழுமின் விழிமின் செந்நெறி சார்மின்

ஆசிரியர்

சுவாமி நித்தியானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை — 639 115 திருச்சி ஜில்லா

பொருளடக்கம்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30	துன்மதி ௵ மார்கழி ௴	ஆரம் 12

பிரார்த்தனை

नमस्ते पुंडरीकाक्ष नमस्ते पुरुषोत्तम ।
नमस्ते सर्वलोकात्मन् नमस्ते तिग्मचक्रिणे ॥

— विष्णु पुराणं

நமஸ்தே புண்டரீகாக்ஷ நமஸ்தே புருஷோத்தம ।
நமஸ்தே ஸர்வலோகாத்மன் நமஸ்தே திக்மசக்ரிணே ॥

— விஷ்ணு புராணம்

கமலக்கண்ண உனக்கு வணக்கம். புருஷோத்தமனே உன்னைப் போற்றுகிறேன். அனைத்துக்கும் அந்தராத்மனே, உன்னை வணங்குகிறேன். கூர்மையான சக்கராயுதத்தை உடையவனே, உன்னைச் சரணடைகிறேன்.

கார்த்தண் கமலக் கண்ணென்னும் நெடுங் கயிறு படுத்தி என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரோ?

— ஆண்டாள்

அருள் விருந்து

அருளை மறைப்பது ஆசை.

மேலான மனநிலை மறுபிறப்புக்கு நிகர்.

எண்ணமும், மொழியும் இணைபிரியாதவைகள்.

மூர்த்தி உபாசனை மனதைப் பண்படுத்துகிறது.

அறநெறியில் ஊறியிருப்பவன் இன்புற்று இருக்கிறான்.

பிறரைக் கீழ்மைப்படுத்துபவன் தானே கீழ்மையுறுகிறான்.

மனிதன் பூணுகிற ஆசைகள் யாவும் நிறைவேற மாட்டா.

மரணத்தோடு உறவு கொள்ளுமளவு அச்சம் அகலுகிறது.

வாழ்க்கைச் சுமையினின்று மனிதனை விடுவிப்பது நன்னெறி.

பிறரை மேன்மைப் படுத்துபவன் தானே மேன்மையுறுகிறான்.

தூய மனம் படைத்திருப்பவனுக்கு வாழ்க்கைப் பிரச்னை ஏதுமில்லை.

பேரன்பு ஓங்குதற்கேற்பச் சமுதாய நலன் தானாக வந்து அமைகிறது.

வரம்புகடந்த பற்றுதல் பிறகு வரம்புகடந்த வெறுப்பாக வடிவெடுக்கும்.

பேரன்பு படைத்திருப்பவன் பிறரைத் தன் வழிக்குத்திருப்ப முயலுவதில்லை.

உறுதியான மனம் படைத்திருப்பவனே பெருவாழ்வுக்குத் தகுதியுடையவனாகிறான்.

பண்பாடடையாது வெறுமனே மதம் மாறுபவன் இறைவனை ஏளனம் பண்ணுகிறான்.

உள்ளத்தினுள் விவேகம் என்னும் விளக்கேற்றி வைத்திருப்பவன் பிழை பண்ணுவதில்லை.

பழைய கொள்கைகள் யாவுமே பெருநெறி ஆகமாட்டா; புதிய கொள்கைகளிலும் புனிதம் பொலிவதுண்டு.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

1885 மார்ச் மாதம் 7ஆம் தேதி சனிக் கிழமைப் பிற்பகல் 3 மணிக்குப் பரமஹம்ச தேவர் தக்ஷிணேசுவர ஆலயத்தில் தமது அறையில் அமர்ந்துகொண்டு பக்தர்களோடு இனிது உரையாடிக்கொண்டிருந்தார். இளைய பாபுராம், நரேந்திரன், பல்த்து, ஹரிபதா மோஹினி மோகன் முதலாயினோர் ஆங்குக் குழுமியிருந்தனர். கடந்த சில நாட்களாகத் தக்ஷிணேசுவர ஆலயத்தில் வதிந்து வந்த பிராமண இளைஞன் ஒருவனும் ஆங்கு இருந் தனன்.

அப்பொழுது தக்ஷிணேசுவர ஆலயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருடைய வாழ்க்கைத் துணை ஸ்ரீ சாரதா தேவியாரும் அங்குள்ள நகபத்கானாவில் வசித்து வந்தார். பரமஹம்ச தேவருக்குத் தேவையாயிருந்தவைகளை அவ ருக்கு எடுத்து வழங்குதல் பொருட்டுச் சில வேளைகளில் சாரதா தேவியார்பரமஹம்சதேவ ரின் அறைக்குவருவதுண்டு. மோஹினிமோகன் தன்னுடைய மனைவியையும் நவீனனுடைய தாயாரையும் கல்கத்தாவினின்று தக்ஷிணே சுவர ஆலயத்துக்கு அப்பொழுது அழைத்து வந்திருந்தான். அப்படி வந்திருந்த தாய்மார் கள் அன்னை சாரதா தேவியாரோடு கூடியிருந் தனர். ஆடவர்கள் பரமஹம்ச தேவருடைய அறையினின்று வெளியே சென்றிருந்த சமயம் பார்த்து அவரை வந்து தரிசிப்பதற்காகக் காத்து இருந்தனர்.

பரமஹம்சதேவர் தம் அறையிலிருந்த சிறிய கட்டிலின் மீது அமர்ந்திருந்தார். ஆங் குக் குழுமியிருந்த பக்தர்களைப் பார்த்து அவர் அகமகிழ்வு எய்தினர்.

அப்பொழுது தக்ஷிணேசுவர ஆலயத்தில் பரமஹம்சதேவரோடு ராக்கால் வசித்திருக்க வில்லை. பிருந்தாவனத்திலிருந்து திரும்பி வந்த பிறகு அவன் தனது உற்றாரோடு தன் வீட்டில் தங்கியிருந்தான்.

பரமஹம்சதேவர் : (புன்னகை பூத்தவராக) "ராக்கால் இப்பொழுது உபகாரச் சம்பளம் பெற்றவருடைய பாங்கில் வாழ்ந்து வருகிறான். பிருந்தாவனத்திலிருந்து திரும்பி வந்தான பிறகு தன் வீட்டிலேயே அவன் இப்பொழுது வசித்து வருகிறான். அப்பொழுது அவனுடைய மனைவியும் அவ்வீட்டில் வசித்துவந்தாள். ஆயி ரம் ரூபாய் சம்பளம் வருவதாயிருந்தாலும் தான் உத்தியோகம் எதையும் ஏற்றுக்கொள் ளத் தனக்கு எண்ணமில்லை என்பதை அவன் எனக்குத் தெரிவித்தான்.

"ராக்கால் இங்கே வசித்திருந்தபொழுது இந்த அறையில் படுத்துக்கொண்டு என் னோடு வாழ்ந்திருப்பதைப் பற்றியும் தனக்குக் கவலையில்லை என்பதைத் தெரிவித்தான். அப் போது அவனுடைய மனம் மகோன்னத நிலை யிலிருந்தது.

"பவநாதன் மணம் புரிந்திருக்கிறான். ஆயி னும் இரவெல்லாம் அவன் தன் மனைவியோடு பாரமார்த்திக விஷயங்களைப்பற்றிப் பேசுவதி லேயே நேரத்தைப் போக்கி வருகிறான். கண வன் மனைவியாகிய அவர்கள் இருவரின் மனப் பான்மை பாராட்டுதற்குரியதாம். பகவத்விஷ யங்களைப் பற்றியே உரையாடி, அவர்கள் காலத்தைப் போக்கினர். இடையிடையே உன் மனைவியோடு உலக விஷயங்களைப்பற்றி யும் உரையாடிக்கொண்டிரு" என்று நான் அவ னுக்கு எடுத்து இயம்பினேன். சிறிது மனத் தாங்கலுடன் அவன் விடுத்தவிடையாவது:

'என்ன நான் உலக விஷயங்களில் எனது மனதைச் செலுத்துவது?'

இப்பொழுது பரமஹம்சதேவர் நரேந்திர னைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

பக்தர்களிடம் அவர் பகர்ந்ததாவது : "இந்த ஆலயத்துக்கு இரண்டு நரேந்திரர்கள் இடை யிடையே வருகிறார்கள். அவர்களுள் மூத்த நரேந்திரனைப் பற்றி நான் பூண்டுள்ள ஆர்வம் மிக அதிகம். இளைய நரேந்திரனைப் பற்றி யாது காரணத்தாலோ ஆழ்ந்த ஆர்வம் பூணு வதில்லை."

(ஹரிபதனைப் பார்த்து) "கிரீஷ்கோஷினு டைய வீட்டுக்கு நீ போவதுண்டா?"

ஹரிபதன் : "ஆம் ஐயனே. நான் அடிக்கடி

அங்குப் போகிறேன். அவர் எங்களுக்கு அயலான் ஆகிறார்."

பரமஹம்சதேவர் : "நரேந்திரனும் ஆங்குச் செல்லுகிறானா?"

ஹரிபதன் : "ஆம் ஐயனே, சிற்சில வேளைகளில் நான் அவனை ஆங்குக் காண்கிறேன்."

பரமஹம்சதேவர் : "கிரீஷின் பேச்சுக்கு நரேந்திரன் பகரும் விடையாதோ?"

கிரீஷ் சந்திரகோஷ் ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரை ஓர் அவதார மூர்த்தியென்று விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்.

ஹரிபதன் : "இது விஷயத்தில் நரேந்திரனுக்கும் கிரீஷ் கோஷருக்குமிடையில் இடையிடையே விவாதம் நடைபெறும். அந்த விவாதத்திலே நரேந்திரன் பெரும்பாலும் தோல்வியுறுவான்."

பரமஹம்சதேவர் : "அப்படியன்று. நரேந்திரன் என்னிடத்தில் இயம்பியதாவது : கிரீஷ் கோஷருக்கு இது விஷயத்தில் ஆழ்ந்த நம்பிக்கையிருக்கிறது. அவர் அங்ஙனம் நம்பிக்கை கொண்டிருக்கட்டும். அவர் நம்பிக்கைக்கு நான் தடைபோடுவானேன்?"

அனுகூல முகோபாத்தியாயர் என்பவர் ஒரு நியாயாதிபதி. அந்த நியாயாதிபதியின் மாப்பிள்ளையின் சகோதரன் பரமஹம்ச தேவருடைய அறைக்கு வந்திருந்தான். "நரேந்திரனை நீ அறிவாயா?" என்று பரமஹம்சதேவர் அவனிடம் கேட்டார். "ஆம் ஐயனே, அவன் நுண்ணறிவாளனாகிய ஓர் இளைஞன்" என்று அவன் விடைவிடுத்தான்.

பரமஹம்சதேவர் (பக்தர்களிடம்) : "இப்பேர்வழி நரேந்திரனைப் பாராட்டிப் பேசுவதால் இவனிடத்து நல்லியல்பு அமைந்திருப்பதாகத் தென்படுகிறது. அன்றொரு நாள் நரேந்திரன் இங்கு வந்திருந்தான். அப்பொழுது அவன் திரைலோக்ய சந்யாலுடன் கூடிப் பாடினான். அன்று அவன் பாடியது என் உள்ளத்தை வழக்கம் போன்று கவரவில்லை. அதற்குக் காரணம் அவனுடைய குடும்பத் தொல்லைகள் அவனை வாட்டுவதாக ஒருவேளை இருக்கலாம்."

பாபுராம் என்னும் இளைஞன் பரமஹம்சதேவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தான். மகேந்திரநாதர் ஆசிரியராக உத்தியோகம் பார்த்து வந்த பள்ளிக்கூடத்திலே பாபுராம் புகுமுக வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான்.

பரமஹம்சதேவர் (பாபுராமைப் பார்த்து): "உன்னுடைய புஸ்தகங்கள் எங்கே? உன்னுடைய பாடங்களைக் கருத்தோடு நீ படித்து வருகின்றாயா? (மகேந்திரரைப் பார்த்து) இந்த இளைஞன் பள்ளிக்குச் சென்று பாடங்களைக் கற்று வருகின்றான். அதோடு நின்றுவிடாது அவன் இங்கு வந்து பக்தி மார்க்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறான்.

"இலௌகீகப் படிப்பு" பாரமார்த்திகப் பயிற்சி இரண்டையும் இணைத்து வைத்துக் கல்வி பயிலுதல் மிகவும் கடினம். பகவத் விஷயங்களை அரைகுறையாக ஆராய்ச்சி பண்ணுவதால் ஆகின்ற பயன்தான் யாது? வசிஷ்டர் ஒரு மகாமுனியாக விளங்கினர். அவருடைய புதல்வர்கள் மடிந்துபட்டுப்போன பொழுது அவர் பெருந்துயரத்துக்கு ஆளானர். அக்காட்சியைத் தம்பி லக்ஷ்மணன் கவனித்தான். அவர் அப்படி வருந்தியதற்குக் காரணம் யாதோவென்று மூத்தவனாகிய ராமனிடம் அவன் கேட்டான். ராமன் கொடுத்த விடையாவது: 'தம்பி! அதிசயிப்பதற்கு யாது உளது?

"யாரிடம் லௌகீக ஞானம் இருக்கிறதோ அன்னவனிடம் அக்ஞானமும் சேர்ந்தே அமைந்திருக்கிறது. ஆதலால் இளையோய், இப்பிரபஞ்ச சம்பந்தமான ஞான அக்ஞானத்தைக் கடந்து பரஞானத்தில் நிலைத்திருத்தல் வேண்டும்.

"உன் காலில் முள் தைக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்படித் தைத்த முள்ளைக் களைதல் பொருட்டு மற்றொரு முள்ளை எடுக்க வேண்டும். அதை எடுத்தான பிறகு இரண்டு முட்களும் ஒருங்கே ஒதுக்கப்படுகின்றன. அதே விதத்தில் ஆத்ம சாதகன் ஒருவன் ஞானம் என்னும் முள்ளைக்கொண்டு அக்ஞானம் என்னும் முள்ளை அகற்றுதல் வேண்டும்; பிறகு இப்பிரபஞ்ச சம்பந்தமான ஞானம் அக்ஞானம் ஆகிய இரண்டு கூறுகளும் ஒதுக்கப்படுகின்றன. ஆத்ம சாதகன் பிரபஞ்சத்துக்கு அப்பாலுள்ள பரம்பொருளில் ஒன்றுபடுகிறான்".

பாபுராம் (புன்னகை பூத்தவனாக) "நான் வேண்டுவதும் அதுவே."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "ஆனால், அருமைச் செல்வா, இம்மையைப் பிடித்துக்கொண்டிருக்கிறபொழுது பரத்தைப் பெறுவது சாத்தியப்படுமா? பரத்தைப் பெற நீ விரும்புவாயாகில் இகலோக சம்பந்தமான யாவையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு இங்கே வருவாயாக."

பாபுராம் (புன்னகை பூத்தவனாக): "இவ்வையக வாழ்வினின்று என்னைப்பிரித்தெடுத்து உங்கள் மயம் ஆக்கிக்கொள்வீராக."

பரமஹம்சதேவர் (மகேந்திரரைப் பார்த்து): "ராக்கால் என்னோடு வாழ்ந்திருந்தான். ஆனால் அதற்கேற்ற சூழ்நிலை மற்றொரு பாங்குடையதாய் இருந்தது. அவன் ஈண்டு என்னோடு வசித்திருக்க அவன் தந்தை அனுமதிகொடுத்தார். அவன் செய்தது போன்று ஏனைய இளைஞர்கள் செய்தால் அதனால் இடைஞ்சல்கள் பல வடிவெடுக்கும்.

(பாபுராமைப் பார்த்து) "உனக்கு மன உறுதி போதாது. நீ உறுதிப்பாடே வடிவெடுத்தவனாயிருத்தல் வேண்டும். இளைய நரேந்திரன் என்ன இயம்புகிறான் என்பதை எண்ணிப்பார். 'ஒரே போக்காக நான் இங்கு வந்துவிடுவேன் என்கின்றான்.'"

தாம் அமர்ந்திருந்த சிறிய கட்டிலினின்று பரமஹம்சதேவர் கீழே இறங்கி வந்து தரையின்மீது இளைஞர்களோடு அமர்ந்துகொண்டார். அவருக்கு அருகில் மகேந்திரரும் அமர்ந்துகொண்டார்.

பரமஹம்சதேவர் (மகேந்திரரைப் பார்த்து): "காமத்தையும் காசு ஆசையையும் அறவே துறந்துள்ள ஆத்மசாதகன் ஒருவனை நான் தேடிக்கொண்டிருக்கிறேன். இளைஞன் ஒருவனை நான் சந்திக்கிறபொழுது இவன் ஒருவேளை என்னோடு வந்து வாழ்ந்திருக்க இணங்குவானா என்று எண்ணுகிறேன்; அதனால் வந்த பயன் யாது? ஒவ்வொருவனும் தனக்கேற்பட்டுள்ள ஏதோ இடைஞ்சலை எடுத்துரைக்கிறான்.

"பேய் ஒன்றுக்குக் கூட்டாளி ஒருவன் தேவையாயிருந்தது. சனிக்கிழமையன்றோ செவ்வாய்க்கிழமையன்றோ சாகிறவன் பேய் ஆகிறான் என்னும் நம்பிக்கை மக்களுக்கிடையில் இருக்கிறது. ஆதலால் தனக்குத் துணைவன் ஒருவனைத் தேடிக்கொண்டிருந்த பேய் ஆனது இந்த இரண்டு நாட்களில் மானுடன் யாராவது ஒருவன் வழியில் தடுக்கிக் கீழே வீழ்ந்தால் அல்லது மயங்கிக் கீழே விழுந்தால் அவன் செத்துப்போவான் என்றும் பேய் ஆகித் தனக்குத் தோழனாக வந்து வாய்ப்பான் என்றும் எண்ணிக்கொண்டு அங்ஙனம் விபத்துக்கள் நேர்ந்த இடங்களுக்கெல்லாம் அது ஓடிப்போய் பார்த்தது. ஆனால் அச்சிறு விபத்துக்களுக்கு ஆள் ஆனவர்கள் எல்லாரும் எப்படியோ தப்பித்துக்கொண்டார்கள். யாருமே சாகவில்லை. கூட்டாளியை நாடி அலைந்து திரிந்த பேயின் தெளர்பாக்ய வசத்தால் அதற்குத் தோழன் யாரும் வாய்க்கவில்லை.

"சற்று எண்ணிப் பாருங்கள். ராக்கால், இங்கு வந்து என்னோடு வசித்திருக்கவேண்டுமென்று வேண்டினால் அவன் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லுகிறான். தன் மனைவியைக் கவனித்துக்கொள்ள வேண்டிய நெருக்கடியில் இருப்பதாகவும் சிற்சில வேளைகளில் சொல்லுகிறான்.

"நரேந்திரனுடைய நெஞ்சை நான் ஒரு தடவை தொட்டேன். அதன் விளைவாக இவ்வுலக உணர்வு அவன் உள்ளத்தினின்று அகன்று போயிற்று. அவன் உள்ளம் சமாதி நிலைக்குப் போய்விட்டது. அந்த அதீத நிலையினின்று அவன் இவ்வுலக ஞாபகத்துக்குத் திரும்பி வந்தபொழுது அவன் இயம்பியதாவது : 'ஓ ஐயனே! எனக்கு நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்? என் அப்பாவும் அம்மாவும் வீட்டிலிருக்கிறார்கள் என்பதைத் தாங்கள் அறிந்துகொள்ளவில்லையா?'

"அன்னை பராசக்தி ஏன் என்னை இந்நிலையில் கொண்டு வந்து வைத்திருக்கிறாள்? கிருஷ்ண சைதன்யர் உலக வாழ்வை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சந்நியாசியானார். சந்நியாசிகளின் பாதங்களைத் தொட்டு வணங்குவது உலகத்தவர்களுடைய பழக்கவழக்கமாகும். கிருஷ்ண சைதன்யரோ ஓர் அவதார மூர்த்தி. அவர் போன்றவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கும் வாய்ப்பு எல்லார்க்கும் கிடைப்பது அரிதாகும்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

6-9. ஆங்காரம் என்னும்மத யானைவா யில்கரும்பாய்
ஏங்காமல் எந்தைஅருள் எய்துநாள் எந்நாளோ.

அகங்காரம் என்னும் சொல் ஈண்டு ஆங்காரம் எனத் திரிவுபடுத்தி இயம்பப்பட்டுள்ளது. அகங்காரத்தில் இரண்டு விதம் உண்டு ஆத்ம சாதகன் ஒருவன் தன்னைத் தெய்வத்தின் பக்தன் என அகங்கரிப்பானாகில் அதில் தோஷம் ஏதுமில்லை. மற்று உலக சம்பத்துக்களோடு தன்னை இணைத்து வைத்துக்கொண்டு மானுடன் ஒருவன் தன்னைப் பணக்காரன் என்றோ, புகழையும், பதவியையும் படைக்கப்பட்டவன் என்றோ அகங்கரிப்பானாயின் அது அவனுக்குப் பெரிய கேட்டை விளைவிக்கும். யானை ஒன்று கரும்பைப் பிரியமாகப் புசிக்கிறது. அந்த யானைக்குப் பருவத்தில் வருகிற மதம் பிடித்திருக்குமாகில் அதன் செயல்கள் அச்சத்துக்குரியனவாகின்றன. அப்படி மதம் பிடித்திருக்கிறபொழுது யானைப் பாகனையும் அது பொருள்படுத்தாது. இவ்வுலக அந்தஸ்துகளிலே உழலுகிற மானுடன் ஒருவனுக்கு வருகிற அகங்காரம் மதம் பிடித்துள்ள யானைக்கு நிகராக மிகக் கொடியது. சான்றோர்கள் அத்தகையவனை விட்டு ஒதுங்கியிருப்பது உசிதமாகிறது. தற்செயலாய் அன்னவனோடு இணக்கம் கொள்ள நேர்ந்தால் மற்றவனுக்கு அது பெருந்துன்பத்தை விளைவிக்கும். ஆத்ம சாதகன் ஒருவன் யாருடன் இணங்கியிருத்தல் என்னும் விஷயத்தில் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஆத்ம சாதகன் ஒருவன் யாண்டும் பரமனுடையே அருளையே சார்ந்திருக்கின்றான். அதன் விளைவாக அவனுக்குக் கேடு ஏதும் வாராது. தாயின் மடியிலிருக்கும் சேய்க்கு நிகராகப் பரமனைச் சார்ந்திருக்கும் பக்தன் பரமானந்தத்தை அனுபவிக்கிறான். அன்னவனுக்குக் கேடு ஏதும் தற்செயலாயும் வந்து அமைவதில்லை. அத்தகைய பெருநிலையிலேயே நான் உறுதி பெற்று இருப்பேனாக என்பது இக்கண்ணியிலடங்கியுள்ள கருத்தாம்.

6-10. சித்தம்எனும் பௌவத் திரைக்கடலில் [வாழ்துரும்பாய்
நித்தம்அலை யாதுஅருளில் நிற்குநாள் [எந்நாளோ.

பௌவத் திரைக்கடலில்-நுரையும் அலையும் உள்ள கடலில்

கடலின் பாங்கும் மனதின் பாங்கும் ஒன்றை ஒன்று ஒத்திருக்கின்றன. அலையும் நுரையும் உடையதாகக் கடல் யாண்டும் விளங்கிக் கொண்டிருக்கிறது எண்ணம், உணர்வு என்னும் விருத்திகளை உடையதாக மனது யாண்டும் இருந்து வருகிறது. கடலிலே கிடக்கும் துரும்பு ஒன்று ஓயாது அலக்கழிக்கப்பட்டு வருகிறது. அதற்கு ஓய்வு என்பது இல்லவேயில்லை. அதே விதத்தில் மனதோடு இணைக்கப்பட்டிருக்கும் ஜீவாத்மன் யாண்டும் தொல்லைக்கு உட்பட்டவனாகவே திண்டாடிக்கொண்டிருக்கிறான். இயற்கையில் புறத்தே உள்ள கூறு ஆகும் கடல். மனிதனுடைய அகத்திலிருக்கும் கூறு ஆகும் சித்தம் அல்லது மனது. கடலைக் கட்டியாள மனிதனுக்கு இயலாது. ஆனால் கட்டிலடங்காத மனதைக் கட்டியாள வல்லவன் மனிதன். அதன்பொருட்டு அவன் செய்து சாதிக்கவேண்டிய அரிய செயல்ஒன்று உளது. பரமனைச் சாருமளவு மனிதன் மனதை வெல்ல வல்லவனாகிறான். பரமனைச் சாருதல் எங்ஙனம் என்னும் கேள்வி அடுத்தபடியாக வருகிறது. அக்கேள்விக்கு விடை சிவனாரிடமிருந்து வருகிறது. சிவபெருமான் தம் இடக்கரம் ஒன்றில் மானை ஏந்தியிருக்கிறார். அந்த மானோ அவருடைய முகத்தைப் பார்த்த வண்ணமாயிருக்கிறது. அந்த மான் மனதுக்குப் புறச்சின்னமாகிறது. காட்டில் வாழும் மான் அமைதியாக ஓரிடத்தில் இருப்பதில்லை. வனமெங்கும் அது சஞ்சரிக்கிறது. அதற்கு நிகராக மனதும் விஷயங்கள் செறிந்துள்ள புறவுலகில் அலைந்து திரிகிறது. சிவனார் கையில் ஏந்தியிருக்கும் மான் புறத்தில் இருக்கும் எதையும் பார்ப்பதில்லை. அவருடைய முகவிலாசத்தையே பார்த்த வண்ணமாய் அது இருக்கிறது. இங்குமங்கும் திரிகிற மனதை மனிதன் சிவனார் சந்நிதியில் செலுத்துவானாகில் அது அமைதியுறுகிறது.

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்னும் பொய்யாமொழி இக்கோட்பாட்டை விளக்குகிறது. ஏதேனும் ஒன்றில் பற்று வைத்து அலைந்து திரிவது மனிதன் போக்கு. பற்றைத் தெய்வப் பற்ருக மாற்றுவது மனிதனுக்குச் சாத்தியம். தெய்வப் பற்று ஓங்க ஓங்க ஏனைய பற்றுக்களெல்லாம் தாமாகவே அழிந்து பட்டுப்போகின்றன. ஏனைய பற்றுக்களெல்லாம் துன்பத்துக்கு ஏதுவானவைகளாகவிருக்கின்றன. தெய்வப் பற்று ஒன்றே துன்பம் கலவாத இன்பமாக இலங்குகிறது. தெய்வச் சாந்நித்தியத்தைச் சாருமளவு அந்த மனதின் வேகமும் தளர்கிறது. ஓய்வு தானுக வந்து அமைகிறது. ஓய்ந்த மனது மனிதன் பெற்றுள்ள பேறுகளில் எல்லாம் மிகப் பெரியதாம். மனது ஓய்வடைவதற்கேற்பப் பரமானந்தம் தன்னைத்தானே விளக்குகிறது. அப்பெரு நிலையில் அதிவிரைவில் நாம் உறுதிபெற்று இருக்க வேண்டும் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

6-11. வித்தியா தத்துவங்கள் ஏழும் வெருண்டு ஓடச்
சுத்தபர போகத்தைத் துய்க்குநாள்
[எந்நாளோ.

துய்த்தல்—அனுபவித்தல்.

பிரபஞ்ச சம்பந்தமான அறிவுகளனைத்தும் வித்தியா தத்துவங்கள் ஆகின்றன. இந்திரியங்கள் ஐந்து இருக்கின்றன. ஒவ்வோர் இந்திரியத்தினிடத்தும் ஏழுவிதமான அனுபவங்கள் அமைந்திருக்கின்றன. கண்ணால் சூரியவெளிச்சத்தைக் காண்கின்ருேம். அச்சூரிய வெளிச்சம் மேகம் ஒன்றின் வாயிலாகப் பாயும் பொழுது அது ஏழு நிறங்களாகச் சிதறடைகிறது. அந்தப் பாங்கில் வானவில் அமைகிறது. காதால் கேட்கும் ஓசை சப்தஸ்வரங்களாக விரிவடைகிறது. சரிகமபதநி என்னும் ஏழு ஸ்வரங்கள் இன்னிசை முழுதும் அமைந்திருக்கின்றன. நாவால் சுவைக்கும் உணவு அறுசுவையோடு கூடிச் சுவையற்ற நீரும் சேர்ந்து ஏழு சுவையாகின்றன. தொட்டு உணரும் ஊறு உணர்ச்சியைக்கொண்டு சப்த தாதுக்கள் அல்லது ஏழுவித நாடிகள் உணரப்படுகின்றன. முக்கால் நுகரும் மோப்பத்தில் ஏழு பிரிவுகள் இருக்கின்றன. அவைகளை நுகரும் வல்லமை நாய்க்கு இருப்பதுபோன்று மனிதனுக்கு அமையவில்லை. அதை முன்னிட்டு அவனுக்கு இடைஞ்சல் ஏதும் வாராது இருப்பது அண்ணலின் அருளாம். இந்த ஏழுவித வித்தியா தத்துவங்களோடு மனது கலந்து கொள்ளுகின்ற பொழுது அது பிரபஞ்ச நுகர்ச்சியாக அமைகிறது. பிரபஞ்ச நுகர்ச்சியோ இன்ப துன்பமயமானது. துன்பம் கலவாத இன்பம் இவ்வையக வாழ்வில் மனிதனுக்கு வாய்க்காது. துன்பமாக வடிவெடுக்கும் இன்பத்தை அனுபவித்துச் சலித்துப்போன பிறகு மனிதனுக்கு அதில் வெறுப்புத் தட்டுகிறது. வைராக்யம் அல்லது பற்றற்ற நிலை தானுக வந்து அமைகிறது. பரிபக்குவம் அடைந்துள்ள அந்த மனதைப் பரபோகத்தில் திருப்புவது மிக எளிதாகிறது. பரபோகமோ யாண்டும் பேரானந்தமாயிருப்பதால் சுத்த பரபோகம் எனச் சொல்லப்படுகிறது. இப்பெருநிலையை அடையப் பெற்ற ஜீவன் மறுபடியும் பிரபஞ்ச நாட்டத்தில் மனதைச் செலுத்துவதில்லை. யாண்டும் பரத்திலேயே நிலைபெற்றவனுக அன்னவன் அமர்ந்திருக்கிருன். அப்பெருநிலையை நான் பெறும் நாள் அதிவிரைவில் வந்து அமைவதாகுக என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

6-12. சுத்தவித்தை யேமுதலாத் தோன்றும் ஓர் ஐந்து
[வகைத்
தத்துவத்தை நீங்கிஅருள் சாருநாள் எந்நாளோ?

பிரபஞ்சம் ஐந்து தத்துவங்களாக இலங்கிக் கொண்டிருக்கிறது. அவையாவன: ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி. இந்தப் பூதங்களைக்கொண்டே உடலும், உலகும் அமைந்திருக்கின்றன. பிரபஞ்ச வாழ்வுக்கு இவை இன்றியமையாதவைகளாம். பரமாத்ம சொருபமோ பிரபஞ்சத்தின் நடைமுறைக்கு ஆதாரமாயிருப்பினும் இம்மை என்றும் இகம் என்றும் இயற்கை என்றும் பகரப்பெற்றுள்ள பிரகிருதிக்கு அப்பாற்பட்டதாம். அபரவித்தை என இயம்பப் பெறும் இவ்வுலக சம்பந்தமான ஞானங்களனைத்தும் வியவகாரத்துக்குரியவைகளாம். பரவித்தையோ சுத்தமானது. அதை அடையப் பெறுகிறவன் மௌனத்தில் ஒன்றுபடுகிருன். அத்தகைய சுத்தவித்தையே உய்வு அடைவதற்கு உற்றதாம். அந்தச் சுத்த வித்தையை விரைவில் பெறவேண்டும்,

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

31. மாறுபடும் இரண்டு தலைவர்களுக்கு ஒரு தொண்டன் ஊழியம் செய்ய முடியாது. இருவருள் ஒருவரை நேசிக்கவும் மற்றவரை வெறுக்கவும் செய்வான்; அல்லது இருவருள் ஒருவருக்கு ஏவல் செய்து மற்றவரைப் புறக்கணிப்பான். ஆகையால் நீங்கள் கடவுளுக்கும் உலகப்பொருளுக்கும் ஏககாலத்தில் கைங்கரியம் செய்ய முடியாது.

"ராமன் உள்ள இடத்தில் காமம் இல்லை; காமம் உள்ள இடத்தில் ராமன் இல்லை" என்பதன் கருத்தும் இயேசுநாதருடைய இவ்வுபதேசத்தின் கருத்தும் ஒத்திருக்கின்றன. கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்று சொல்லுவார்கள். ஏதாவது ஒன்றை விட்டால்தான் மற்றொன்றைப் பெற்று அனுபவிக்கலாம் என்பது அதனுடைய கருத்து. போகத்தையும், யோகத்தையும் சேர்ந்து அனுபவிக்க முடியாது. போகம் வேண்டுபவர்கள் யோகத்தை விட்டாகவேண்டும். யோகம் வேண்டுபவர்கள் போகத்தைத் துறந்தாகவேண்டும். ஏக காலத்தில் யோகத்தையும் போகத்தையும் அனுபவிக்க முடியாது. பரத்தை நாடிப் போகின்றவர்கள் உலக விஷயங்களைப் பற்றிக் கொண்டிருப்பதில்லை. உலக விஷயங்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருப்பவருடைய உள்ளம் பரநாட்டம் கொள்வதில்லை.

ஈசனைப் புகழ்ந்து அவருடைய வடிவழகிலும் குணவழகிலும் ஈடுபட்ட ஆழ்வார் ஒருவர் இந்திர பதவி கிடைத்தாலும் வேண்டுகிலேன் என்று பகர்கிறார். இறைவனுக்கு ஆட்பட்ட நாவுக்கரசர் வேறு யாருக்கும் அடிமையல்லோம் என்று பகர்கிறார். லௌகிகப் புத்திபடைத்தவர்கள் உலகத்துக்கு அடிமைகளாகக் கிடக்கின்றனர். அவர்களுடைய உள்ளம் காமத்துக்கும், காசு ஆசைக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. காமத்திலும், காசு ஆசையிலும் இருந்துவிடுபட்ட மனம் பரத்தினிடத்துச் செல்லுகிறது. காமத்துக்கும் காசு ஆசைக்கும் மனம்உட்பட்டிருக்கும் வரையிலும் அது கடவுள் நாட்டம் கொள்வதில்லை. சாதனையின் மூலம் மனதைப் பரத்தினிடம் திருப்பும்பொழுதுதான் உள்ளத்துக்கு ஆன்மீக விஷயங்கள் விளங்க ஆரம்பிக்கின்றன. ஆன்மீகத் தத்துவங்கள் உள்ளத்துக்குத் தெளிவாக விளங்கும்பொழுது உள்ளம் விஷய சுகத்திலிருந்து விடுபடுவது சாத்தியமாகிறது. அரிச்சந்திரன் சத்தியத்துக்காக நாடு நகரங்களையும், மனைவி மக்களையும், தன்னையும் துறந்தான். ஆனால் சத்தியத்தை மட்டும் அவன் தியாகம் பண்ணவில்லை. அரிச்சந்திரனுக்குச் சத்தியத்தில் பற்று இருந்தமையால் மற்றவற்றைத் துறக்க ஆயத்தமாக இருந்தான். உலகத்தைத் துறக்காது ஆன்மீக லாபம் எதையும் பெற்றுவிடமுடியாது.

'என்னிடம் வர ஒருவன் விரும்பினால் அவன் தன்னை என்னிடம் ஒப்படைத்து விட்டுச் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வரட்டும். வாழ்க்கை உய்வடைய வேண்டுமென்று விரும்புகிறவன் யாராகவிருந்தாலும் உலக சுகத்தை விட்டுவிடவேண்டும். எனக்காக எவன் உலக சுகத்தை விடுகின்றானோ அவன் உய்வடைவான். தன் சொரூபத்தை இழந்து உலக முழுவதையும் பெறுவதனால் ஒருவன் என்ன லாபம் அடையப்போகின்றான்? சொரூபத்தை அடைந்தவனுக்கு அதற்கு மேல் பெறுவதற்கு என்ன இருக்கிறது?' இங்ஙனம் இயேசுநாதர் பாரமார்த்திக வாழ்வில் ஈடுபட்டவன் அடைகின்ற பெருமையை விளக்குகின்றார்.

ஆன்மலாபம் வேண்டுகிறவர்கள் தெய்வத்துக்கென்று பணிபுரிகிறார்கள். கடவுளுக்குத் தொண்டு புரிகின்ற அளவு உள்ளம் காமத்தினின்றும், காசு ஆசையினின்றும் விடுபடுகிறது. ஈசுவரப்பணியில் அல்லும் பகலும் தன்னை அர்ப்பணிக்கின்றவர்கள் பாக்கியவான்களாகின்றார்கள். இறைபணி செய்கின்றவர்கள் உலக லாபத்தை விரும்புவதில்லை. ஞானமும் பக்தியும் தெய்வத் தொண்டர்களுக்கு வளர்ந்து வருகின்றன. உலக சம்பத்துக்காக உலகத்துக்கு அடிமைப்பட்டிருப்பவர்கள் உலகப்பற்றை வளர்க்கின்றார்கள். உள்ளத்தில் அமைதியின்மையும், குழப்பமும் அவர்களுக்கு ஏற்படுகின்றன. உலகுக்கு அடி

மையாக இருப்பவன் ஆன்ம லாபம் எதையும் அடைய முடியாது.

உலகைத் துறப்பது என்பதன் பொருள் உலகக் கடமைகளிலிருந்து தப்பித்துக்கொண்டு உலகை விட்டு ஓடிவிடுவதன்று. சுயநலத்தைத் துறப்பதே உலகைத் துறப்பதாகும். அகங்கார, மமகாரங்களின் உணர்வை ஒழித்துவிட்டு முழுமனதோடு கடவுளை நேசிப்பது உலகைத் துறப்பதாகும். விளக்கு வெளிச்சத்தில் ஈடுபட்ட விட்டில்பூச்சி மீண்டும் இருளுக்குத் திரும்புவதில்லை. சர்க்கரைக் குவியலில் நுழைந்த எறும்பு மீண்டும் திரும்பி வருவதில்லை. பிரமானந்தத்தைப் பெற விரும்புகிறவன் கடவுளிடம் பேரன்பு வைத்து அதில் தன் வாழ்க்கையை ஒப்படைக்கின்றான். பிரமானந்தத்தைத் தவிர வேறு ஒன்றிலும் அவன் விருப்பம் கொள்வதில்லை. பிரமானந்தம் அனுபவிப்பவனுக்கு உலக சுகம் சுகமாகத்தோன்றுவதில்லை. இதனை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கற்கண்டு சுவைத்தவனுக்குக் கருப்பட்டி சுவைக்குமா? என்ற உபமானத்தில் விளக்குகிறார்.

இமயமலைச்சாரலில் 'சிவோஹம், சிவோஹம்' என்னும் ஜபத்தில் மூழ்கியவர் உள்ளம் சிவானந்தத்தில் மூழ்கியது. சிவானந்தத்தில் திளைத்திருந்த அவருக்கு உடல் ஞாபகமும், உலக ஞாபகமும் போய்விட்டன. அவருடைய உடலை உணவுக்காக ஒரு புலி கவ்வியது. அதைப் பொருள்படுத்தாமல் அவர் சிவானந்தத்தில் மூழ்கியிருந்தார்.

தெய்வத்துக்குத் தொண்டுபுரிந்து தெய்வத் தொண்டர்களாக நாம் மாறி அமைகின்ற பொழுது உலகம் நம்மை அடிமைப்படுத்துவதில்லை. உலகத்துக்கு அடிமைப் பட்டிருப்பவர்கள் தெய்வத் தொண்டிலுள்ள இன்பத்தைக் காணமுடியாது. இக்கருத்தைத்தான் இயேசு நாதருடைய இவ்வுபதேசம் விளக்குகிறது.

32. மானுடர்களே! நான் உங்களுக்குச் சொல்லுவதைக் கேளுங்கள். உங்கள் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. எதை அருந்துவோம்; எதைப்பருகுவோம்; எதை அணிந்து கொள்வோம் என்றெல்லாம் கவலைப்பட வேண்டாம். உணவினும் மேலானது உயிரன்றோ? உடையினும் மிக்கது உடலேயன்றோ?

மானுட உயிர்களுக்குக் கீழ் நிலையிலிருக்கும் உயிர்கள் உடல் வாழ்வில் கட்டுப்பட்டு இருக்கின்றன. உண்பதும், உறங்குவதும், இனப்பெருக்கம் செய்வதும் அவைகள் உயிர் வாழ்க்கையில் செய்துவரும் செயல்களாகும். அதற்கு மேல் அறிவை வளர்ப்பதும், ஆன்மீக நாட்டம் பெறுவதும் அவைகளுக்குக் குறிக்கோள்களாக அமையவில்லை.

மனித வாழ்வு அறிவை வளர்ப்பதிலும், ஆன்மீக நாட்டம் கொள்வதிலும் தீவிரமாகச் செலுத்தப்பட வேண்டும். இன்றைக்கு உயிர் வாழ்வதே மக்களுக்குப் பெரும் பிரச்னையாக இருக்கிறது. உடல் வாழ்வுக்குக் காற்று, நீர், உணவு போதுமானவை. அறிவு வளர்ச்சியும், ஆன்மீக நாட்டமும் கொண்டிருந்த மக்களுக்கு இயற்கையிலிருந்து வேண்டிய அளவு காற்றும்,நீரும், உணவும் கிடைத்தன. எனவே, அவர்கள் உடல் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படாது அறிவு வளர்ச்சியிலும், ஆன்மீக நாட்டத்திலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். இன்றைய மக்களுக்கு உடல் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. இயற்கையான காற்றுக்குப் பதில் செயற்கையான காற்றை உண்டு பண்ணுவதற்கு மின் விசிறி போன்றவை தேவைப்படுகின்றன. நீரைக் குளிர வைத்துப் பருகுவதற்குக் குளிர் சாதனங்கள் தேவைப்படுகின்றன. காபி, டீ, மது போன்ற பான வகைகள் ஏராளமாக இருக்கின்றன. 'உடுப்பது நான்கு முழம்' என்ற கோட்பாடு இந்தக் காலத்துக்குப் பொருந்தாது. உடை விஷயத்தில் ஏராளமான பணத்தைச் செலவழிக்கிறார்கள். உடலுக்கு வாசனைத் திரவியங்கள் பூசுவதற்குப் பணம் தேவைப்படுகிறது. உல்லாசமாகக் காலங்கழிப்பதற்குச் சினிமாவுக்குப் போவதற்கும் உல்லாசப்பயணம் போவதற்கும் பணம் தேவைப்படுகிறது. டிரான்ஸிஸ்டர் இல்லாது யாரும் காலம் கழிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் உடலை அலங்கரிப்பதற்கு விலை உயர்ந்த பொருள்கள் என்னென்னவோ தேவைப்படுகின்றன. இங்ஙனம் உடல் வாழ்க்கை வாழ்வதற்குப் பணம் தேடுவதில் மக்கள் வாழ்வின் பெரும்பாலான காலத்தைப் போக்குகிறார்கள். நாள் முழுவதும் உழைத்துச் சம்பா

திக்கின்ற பொருள் உடல் வாழ்க்கையை நடத்துவதற்கே போதுமானதாக இருப்ப தில்லை. இந்நிலையில் அறிவை வளர்ப்ப திலும், ஆன்மிக நாட்டத்திலும் இன்றைய மக்கள் கருத்தைச் செலுத்துவது எங்ஙனம்?

உடல் வாழ்வுக்குத் தேவையான பொருள் களைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதால் அவைகளைப் பெறுவதிலேயே காலம் எல் லாம் கழிந்து கொண்டிருக்கும். எதை அருந்து வோம்; எதைப் பருகுவோம்; எதை அணிந்து கொள்வோம் என்ற கவலையை ஒழித்துவிட்டு அறிவு வளர்ச்சியிலும், ஆன்மபோத வளர்ச்சி யிலும் முழுமனதையும் ஈடுபடுத்துகின்றவர் களுக்கு உடல் வாழ்க்கைக்கு அத்தியாவசிய மானவை அவர்கள் தேடாமலேயே வந்து கொண்டிருக்கும்.

ஸ்ரீ விவேகானந்தர் கையில் காசைத் தொடாது இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்க்கத்திட்டம் போட்டார். உணவு தம்மைத் தேடிவந்தால் உண்பதாகவும், உணவைத் தேடித் தாம் போவதில்லை என்றும் தீர்மானம் செய்தார். தெய்வச் சிந்தனை செய்துகொண்டு இத்தகைய தீர்மானத்துடன் இந்திய யாத் திரையை மேற்கொண்டார். அவர் உடல் வாழ்க்கைக்குத் தேவையானவை தாமாக வந்துகொண்டிருந்தன. உயர்ந்த லட்சியத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உடல் வாழ்க்கைக் குத் தேவையானதைப்பற்றிச் சிந்திக்க நேர மில்லை. உயர்ந்த லட்சியத்தில் மனதை ஈடு படுத்துகின்றவர்களுக்குச் சாதாரணத் தேவை கள் பூர்த்தியாகி விடுகின்றன வென்பது இயேசுவின் இவ்வுபதேசத்தின் கருத்துஆகும்.

33. வானத்தில் பறக்கும் பறவைகளைப் பாருங் கள். அவைகள் விதைப்பதும் இல்லை; அறுவடை செய்வதும் இல்லை; களஞ்சியங்களில் தானியத்தைச் சேர்த்துவைப்பதும் இல்லை. ஆயினும் அவைகளைப் படைத்த பரமன் அவைகளுக்கு உணவு ஊட்டிவரு கிறார். பரமனுடைய படைப்பில் அவைகளைக்காட் டிலும் நீங்கள் மேலானவர்கள் அல்லரோ?

உயிர்கள் மேல்நிலைக்கு வரவர அவைகளுக் குப் பாதுகாப்பு அதிகம் தேவைப்படுகிறது. தாவர வகைகளை எடுத்துக்கொண்டால் காட் டுச் செடிகளும், முட்செடிகளும் பொட்டல் நிலத்திலும் வளர்கின்றன. அவைகளுக்கு யாரும் நீர் பாய்ச்சுவதும் இல்லை; களைகொத்து வதும் இல்லை; உரம் போடுவதும் இல்லை. ஆனால் நெல் பயிர் அப்படி வளர்வதில்லை. நிலத்தை உழுது பண்படுத்தி அதில் நெல்லை விதைத்தால்தான் அது நன்கு முளைத்து வரும். பிறகு நெல்லுக்கு நீர் பாய்ச்சி, களை எடுத்து, உரம்போட்டு, ஆடுமாடுகள் அதை அழித்து விடாது தடுத்து, நோய்க்கிருமிகளிட மிருந்து பாதுகாத்து வந்தால்தான் அது விளைவு கொடுக்கும். அஃதேபோன்று உயர்ந்த ரகப்பிராணிகள் வளர்வதற்குத் தக்க பாதுகாப் புத் தேவைப்படுகிறது.

இறைவனுடைய படைப்பில் மனிதன் மேலாம் உயிர்வகையைச் சேர்ந்தவனாகின்றான். பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் பாதுகாப் புத் தந்து வளர்த்துவரும் பரமன் மனிதனைமட் டும் புறக்கணித்துவிடுவாரா?

மனிதனுக்கு உலகப்பற்று உண்டாகும் பொழுது அவன் தெய்வத்தை மறந்துவிடு கின்றான். தெய்வம் தனக்கு யாண்டும் உதவி புரிந்து வருவதையும் அவன் அறிவதில்லை. அஞ்ஞானத்தினால் மனிதன் தன்னைத் தெய் வத்தினிடமிருந்து பிரித்துக்கொள்கின்றான். சோம்பேறி தன்முயற்சி இல்லாது தெய்வம் காப்பாற்றும் என்று தன்னைத்தானே ஏமாற் றிக்கொள்கின்றான். உழைப்பாளி தன் உழைப்பால்தான் எல்லாம் கிடைக்கின்றன வென்று அகங்காரம் படைத்தவனாகத்தெய்வத் தைப் புறக்கணிக்கின்றான். ஞானிதான் அவ ரவர் தகுதிக்கேற்றதை இறைவன் வகுத்தளித் துக்கொண்டிருக்கின்றார் என்பதை அறிகின் றார். எனவே ஞானி கருவிகரணங்களை நன்கு பயன்படுத்தி உலகுக்கும் தனக்கும் நலம் தேடிக்கொள்கின்றார். அஞ்ஞானியோ இறை வன் திட்டத்தை அறியாது சோம்பலுக்கும், செருக்குக்கும் இடம் தந்து தனக்கும் உல குக்கும் துன்பத்தை வரவழைத்துக்கொள் கின்றான். உண்மையாதெனில் எல்லா உயிர் களையும் காப்பாற்றி வருகிறவர் இறை வன் ஆகின்றார். உண்மையை அறிந்து பரம் பொருள் நம்மையும் காப்பாற்றுவார் என்று அவரிடத்து நம்மை ஒப்படைத்துவிட வேண் டும். இயேசுநாதருடைய இவ்வுபதேசம் இக் கருத்தை விளக்குகிறது.

நற்பண்புகள்

(416ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன் எண்குணத்தான் என்று இயம்பப்படுகின்ருர். அவ்வெண்குணங்களும் நற்குணங்களாகின்றன. அவர் அழிவுக்கு அப்பாற்பட்டவர்; அறிவு சொருபமானவர்; ஆனந்த மயமானவர்; விருப்பு, வெறுப்புக்களுக்கப் பாற்பட்டவர்; நல்வினை, தீவினைகளாகிய இரண்டையும் கடந்தவர்; இந்திரியங்களுக்கு அதிபதி; எல்லாவற்றுக்கும் மேலானபொருள்; கருணூமூர்த்தி. இந்த எட்டுப் பண்புகளும் இறைவனுக்குரிய பண்புகளாகின்றன. இவ்வெட்டுப் பண்புகளையும் பெறுகின்றவர்கள் தங்களை உயர்த்திக்கொள்கின்ருர்கள்.

இறைவன் அழிவில்லாதவரென்று சொல்லப்பட்டது. வடிவெடுத்தவைகளெல்லாம் ஒரு காலத்தில் வடிவை இழந்தாக வேண்டும். உடல் அழிவுக்கு உட்பட்டது. உடல் பற்று உடையவர் உடல் அழிவினை முன்னிட்டுத் தாங்களே அழிந்துபோவதாக எண்ணுகின்ருர்கள். உடலுக்கு அப்பால் 'இருக்கிறேன்' என்ற பிரக்ஞை இருக்கிறது. அப்பிரக்ஞை தான் ஆத்ம சொரூபம். அது ஒரு நாளும் அழிவதில்லை. ஆத்ம சொருபத்தில் மனதை ஒடுக்குகின்றவர்கள் தங்களுக்கு அழிவில்லை என்பதை உணர்கின்ருர்கள். தாங்கள் அழிவற்றவர்கள் என்ற உண்மையை உணர்கின்ற அளவு பண்பாட்டில் ஓங்குகின்ருர்கள்.

புலன்கள் மூலம் மனம் பொருந்தி நாம் பெறுகின்ற உலகியல் அறிவுக்குச் சிற்றறிவு என்று பெயர். அவ்வறிவைக்கொண்டு நமக்கு வரும் துன்பத்தைத் துடைத்துவிட முடியாது. அவ்வறிவைக்கொண்டு நாம் பெறுகிற சுகமும் நிலைத்த சுகமாகாது. எதை அறிந்தால் துன்பத்திலிருந்து அறவே விடுபட்டிருக்க முடியுமோ அந்த அறிவுக்குத்தான் ஞானம் அல்லது வாலறிவு என்று பெயர். வாலறிவை நூல்கள் மூலம் பெற்றுவிடமுடியாது. மனத்திலுள்ள மாசுகளெல்லாம் அகன்று மனம் தூய்மையடைய அடைய நமக்கு ஞானம் உண்டாகிறது. அந்த ஞானம் வருகிறபொழுது ஓதாது அனைத்தையும் நாம் அறிய முடிகிறது. பாமரனுக இருந்த ஒருவர் ராமநாமத்தை உச்சரித்து மகாமேதாவியானுர். அவர்தாம் வால்மீகி மகரிஷியாவார். விவேகம் அல்லது நல்லறிவைப் பெறுகின்ற மனிதன் விரைவில் பண்பாட்டில் மேல்நிலைக்கு வருகின்ருன்.

அன்பு வரையறைக்கு உட்பட்டிருக்கும் பொழுது அது பாசம் எனப்படுகிறது. உலகத்தவருடைய அன்பு உடல் உறவிலும் உடல் சம்பந்தத்திலும் ஏற்பட்டுள்ளது. எனவே அந்த அன்புக்குப்பாசம் என்பது பெயர். அன்பு விரிவடைந்து எல்லா உயிர்களையும் நேசிக்கவும், இறைவனை நேசிக்கவும் இயலுமானல் அந்த அன்புக்குப் பேரன்பு என்று பெயர்.

"அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே"

என்று தாயுமானவர் பகர்கிருர். தங்களைப் பேரன்பு மயமாக மாற்றியமைப்பவர்கள் பண்பில் மிக உயர்ந்தநிலை எய்துகிருர்கள்.

இறைவன் நிராசை மயமாக இருக்கின்ருர். உலகம் சுகம் தருவதற்காக அமைந்திருக்கிறதென்று எண்ணி அதனேடு இணக்கம் வைப்போமானல் நம் உள்ளத்தில் அது ஆசையை வளர்க்கிறது. நம்மை நாம் பண்படுத்திக் கொள்வதற்காகவும், ஞானத்தைப் பெறுவதற்காகவும் இவ்வுலகம் அமைந்திருக்கிறது என்று எண்ணி அதனேடு இணக்கம் வைப்போமானல் ஆசையை வெல்லுகின்ருேம். ஆசை உள்ள அளவு வேண்டும் என்ற விருப்பமும், வேண்டாம் என்ற வெறுப்பும் நம் உள்ளத்தில் இடம்பெறுகின்றன. விருப்பும் வெறுப்பும் அற்ற நிலையே நிராசை நிலையாகும். உலகம் சுகம் தருவதற்கு அமைந்ததன்று; நமக்கு அறிவையும், பண்பையும் வளர்ப்பதற்காக அமைந்திருக்கிறதென்று அறிகின்றபொழுதுதான் நம் உள்ளம் தூய்மையாகிறது. சுயநலமற்ற பணிவிடை உள்ளத்தை விருப்பு வெறுப்பற்ற நிலைக்கு ஆயத்தப்படுத்துகிறது. உலகத்தில் நாம் செய்கின்ற செயல்களால் உயிர்களிடத்து அன்பை வளர்க்க வேண்டும். செயல்கள் மூலம் நாம் ஆசையை வளர்த்துக் கொண்டே போகக்கூடாது. விருப்பு வெறுப்பற்ற நிலையில் செயல்புரிந்து உள்ளத்தைப்

பண்படுத்துகிறவர்கள் சிறந்த பண்பாளர்களாகிறார்கள்.

காலில் தைத்த முள்ளை மற்றொரு முள்ளைக் கொண்டு களைகின்றோம். முள்ளைக் களைந்தானபிறகு முள்ளைக் களைவதற்குப் பயன்பட்ட முள்ளையும் எறிந்துவிடுகின்றோம். காலில் தைத்த முள் தீவினையாகும். முள்ளைக்களைவதற்குப் பயன்பட்ட முள் நல்வினையாகும். தீவினை துன்பத்தையும், நல்வினை சுகத்தையும் தருகின்றன. இவ்விரு வினைப்பயன்களையும் துறந்தவர்களுக்குத்தான் உலக பந்தம் நீங்குகிறது. இவ்விரு வினைப்பயன்களையும் துறந்து இறைவன் மகிமைக்காகவென்று வாழ்கின்ற பொழுது மருள் நிலையிலிருந்து விடுபட்டு அருள் நிலைக்குச் செல்லுகின்றோம். தீவினையை இரும்பு விலங்கு என்று வைத்துக் கொண்டால் நல்வினையைப் பொன் விலங்கு என்று சொல்லலாம். தீவினையை அகற்றுவதற்கு நல்வினை பயன்படுகிறது. நல்வினைப் பயனிலுள்ள பற்றுதலையும் ஒழித்தாக வேண்டும். நல்வினையைச் செய்கின்ற அளவு தீவினையினுடைய வேகம் குறைகிறது. பிறகு நல்வினை நமக்கு ஞானத்தை நல்குகிறது. ஞானம் வரும்பொழுது நல்வினைப்பயனிலுள்ள பற்றுதலும் ஒழிகிறது. இங்ஙனம் இருவினைப் பற்றுதல்களையும் ஒழித்துப் பிரபஞ்ச அதீதத்துக்குச் செல்லவேண்டும். வினையை வளர்ப்பதற்காக நாம் இவ்வுலகத்துக்கு வந்தவர்கள் அல்லர். வினையை ஒழிப்பதற்காகத்தான் இவ்வுலகத்துக்கு வந்திருக்கின்றோம். தீவினையை ஒழிப்பதற்கு நல்வினையில் பற்று வைத்து அதைச்செய்து வரவேண்டும். தீவினை அறவே ஒழிந்துபோனபிறகு நல்வினையிலுள்ள பற்றும் ஒழியவேண்டும். நல்வினை நம்மைத் தெய்வத்தின்பால் திருப்புகிறது. தெய்வப்பற்று வளரும்பொழுது நல்வினையிலுள்ள பற்றும் அறுபட்டுப் போகிறது. நல்வினைப்பற்றை நாம் ஒழிக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அது தானாகவே நம் உள்ளத்தை விட்டு நீங்கிவிடுகிறது. வெள்ளரிக் கொடியில் ஒட்டிக்கொண்டிருக்கும் பிஞ்சு வெள்ளரிக் கொடியிலிருந்து சாரத்தைப்பெற்றுப்பழமாகமாறி அமைந்துகொண்டிருக்கிறது. வெள்ளரிக்கொடியைப் பற்றிப் பிடித்திருந்து முற்றிலும் பழமானபின் வெள்ளரிக்கொடியை விட்டுத் தானே அது பிரிந்துவிடுகிறது. நலத்தைப்பற்றிக் கொண்டிருந்து கேட்டிலிருந்து விடுபடவேண்டும். கேட்டை விட்டு நாம் பிரிந்தானபிறகு நலத்தைவிட்டுப்பிரிவது தானாகவே நிகழ்ந்து விடும். நலம், கேடு என்ற இருவினைகளையும் ஒழித்துத்தள்ளுவதற்கு இப்பிரபஞ்ச வாழ்க்கையைப் பயன்படுத்தவேண்டும். பயன் கருதாது பணிவிடை செய்து பேரானந்தத்தில் இருக்கும் பண்பே உயர்ந்த பண்பாகிறது.

ஐம்பொறிகளையும் உலகச் சுகத்துக்கென்று பயன்படுத்துகிறவர்கள் நெறிவழுவிப் போய் விடுகிறார்கள். மனம் பொறிகளின் வழியாகப் புறத்தே சென்று உலகச் சுகத்தை அனுபவிக்கின்ற அளவு அது மாசு படிந்ததாகிறது. மாசு படிந்த உள்ளத்தில் காமம் தலையெடுக்கிறது. அக்காமந்தான் துன்பத்துக்குக் காரணமாகும். பொறிகள் வழியாக மனம் புறத்தே செல்வதைத் தடுத்துப் பரத்தின்பால் திருப்புதல் வேண்டும். பொறிகள் மூலம் செல்லும் மனத்தைப் பரத்தின்பால் திருப்பும் பொழுதுதான் பொறிகளை அடக்குவது சுலபமாகும். இந்திரியங்கள் மூலமாக மனத்துக்கு வரும் விருத்தி தெய்வீக விருத்தியாக இருக்குமாகில் மூர்க்கத்தனம் வாய்ந்த மனது அம் மூர்க்கத் தனத்தை ஒழித்துவிட்டு நம் அறிவாற்றலுக்கு உட்படுகிறது. அறிவு நல்லதென்று நமக்குத் தெரிவிக்கும் விஷயத்தில் அடங்காத மனத்தைச் செலுத்துவது கஷ்டமாகும். அறிவு நல்லதென்று புகட்டும் விஷயத்தில் அடங்கிய மனத்தைச் செலுத்துவது சுலபம். அடங்கிய மனதைப் பெற்றிருக்கிறவர்கள் வைராக்கிய புருஷர்களாக இருக்கிறார்கள். சத் விஷயங்களில் மனத்துக்கு இடைவிடாது பயிற்சி தருவது நல்ல அப்பியாசமாகிறது. 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பது கோட்பாடு. மனவடக்கம் என்னும் பண்பைப் பெற்றிருப்பவர்கள் பாரமார்த்திகப் பண்புடையவர்கள் ஆகிறார்கள்.

இறைவன் ஒருவனே ஒப்பற்ற பொருள். உள்ளத்தளவில் மனிதன் உயர்நிலையை அடையவேண்டும். உள்ளம் உயர்நிலையை அடையாதவர்கள் உயர்ந்தவர்களாகமாட்டார்கள். 'மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு'

என்னும் கோட்பாடு அவ்வுண்மையை நமக்கு விளக்குகிறது. வெறும் விஷயங்களை மூளையில் திணித்து வைத்துக்கொண்டு உள்ளத்தைக் கீழ்மையில் உழலவிட்டுக் கொண்டிருப்பவர்கள் உயர்ந்தவர்களாகமாட்டார்கள். இவ்வுண்மையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் விளக்குவதாவது: "சாஸ்திர அறிவுடைய பண்டிதர்கள் சாஸ்திரங்களிலுள்ள உயர்ந்த உண்மைகளைச் சரளமாகப் பேசுவார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளம் காமத்துக்கும் காசு ஆசைக்கும் வசப்பட்டுக் கிடக்கும். இத்தகைய பண்டிதர்களை வானத்தில் பறக்கும் கழுகோடு ஒப்பிடலாம். கழுகு வானத்தில் உயரப் பறந்தாலும் அதன் பார்வை நிலத்தின்மீது அழுகிய பிணம் எங்கே கிடக்கிறது என்பதைப் பார்ப்பதில் கீழ் நோக்கிப் போய்க்கொண்டிருக்கும். அங்ஙனம் பண்டிதர்கள் உயர்ந்த விஷயங்களைப் பேசினாலும் அவர்களுடைய உள்ளம் காமத்துக்கும் காசு ஆசைக்கும் ஏதுவான உலக விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும்."

உயர்ந்த பொருள்களுக்கெல்லாம் உயர்ந்த பொருள் இறைவன் ஆகின்றான். அவ்வுயர்ந்த பொருளை உள்குமளவு நம் உள்ளம் உயர்வு அடைகின்றது. உயர்ந்த பொருளை உள்குவது தான் உயர்ந்த லட்சியமாகிறது. உயர்ந்த லட்சியத்தை உடையவர்கள் கேடுகளிலிருந்து விலகியிருக்கின்றார்கள். கேடு செய்யாதவனுக்குத் துன்பம் இல்லை. எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் கேட்டிலிருந்து விலகியிருப்பவர்கள் ஒருநாளும் துன்பம் அடைவதில்லை. உள்ளத்தில் கீழ்மைக்கு இடம் தரும்பொழுது அது துன்பமாக வடிவெடுக்கிறது. உள்ளத்தில் உள்ள கீழ்மை அகலும்பொழுது நாம் துன்பத்திலிருந்து விடுபடுகின்றோம். உயர் பொருளாகிய தெய்வத்தை உள்ளத்தில் உள்கும்பொழுது எண்ணம் தூய்மையாகிறது. அதன் மூலம் மனம் தூய்மையாகிறது. மனத்தூய்மையே துன்பம் அற்ற நிலையாகும். மனம் தூய்மையடைகின்ற அளவு நாம் அந்தணர்கள் ஆகின்றோம்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்பது கோட்பாடு. மனதை மாசு அற்றதாக்குவதே அறநெறி எனப்படும். 'அந்தணர் என்போர் அறவோர்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே மனதை மாசு அற்றதாக ஆக்கும் அளவு நாம் அந்தணர் ஆகின்றோம். உயிர்களிடத்தில் அன்புசெலுத்தி அவைகளுக்குப்பணிவிடை பண்ணும்பொழுது பெறும் ஆனந்தம் ஒப்புயர்வற்றது. 'உயிர்களிடத்தில் அன்புவேண்டும்' என்று பாரதியார் பாடி இருக்கின்றார். உயிர்களிடத்தில் அன்பு செலுத்தச் செலுத்தத் தெய்வம்தான் மெய்ப்பொருள் என்ற அறிவு உண்டாகிறது. 'தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும்' என்று பாரதியார் பாடி இருக்கின்றார். உயிர்களுக்கு அன்போடு பணிவிடை செய்யும்பொழுது அவையாவும் தெய்வத்தின் தோற்றங்களென நம் அறிவுக்கு விளங்குகின்றன. அறநெறி நின்று அன்புப்பணிபுரிவது பண்பாளருடைய பாங்காகும்.

நற்பண்புடையோர் நல்லவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். நலம், கேடு ஆகிய இரண்டும் கலந்தே மனிதனிடத்து அமைந்திருக்கின்றன. முற்றும் நலமே வடிவெடுத்த மனிதனும் இல்லை. முற்றும் கேடே வடிவெடுத்த மனிதனும் இல்லை. கெட்ட பண்புகள் உடையவனைக் கெட்டவன் என்று அழைக்கின்றோம். கெட்டவனிடத்திலும் நற்பண்பு ஒன்றாவது இருக்கும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் காலத்தில் வாழ்ந்த கிரீஷ் சந்திரகோஷ் கெட்டவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அவரிடத்தில் கெட்ட குணங்களுக்கிடையில் நல்ல குணம் ஒன்றும் இருந்தது. சொன்ன சொல்லைக் காப்பாற்றுவது அவரிடத்திருந்த நல்ல குணமாகும். அந்த நல்ல குணத்தைப் பயன்படுத்தி அவரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு மஹானாக்கினார்.

கொலைகாரனாகவும், கொள்ளைக்காரனாகவும் இருந்த திருடனிடத்தில் மறைந்திருந்த அன்பை அன்பே உருவான சாரதாதேவியார் வெளிப்படுத்தினார். பிறரிடத்து உள்ள நலத்தை ஞாபகம் ஊட்டுகிறவகையில் நம் எண்ணங்களும், சொற்களும், செயல்களும் அமையுமானால் நாம் நலம் செய்தவர்கள் ஆகின்றோம். அப்படி நலன் செய்கின்ற அளவு நாமும் நல்லவர்கள் ஆகின்றோம்; பிறரையும் நல்லவர்கள் ஆக்குகின்றோம்.

'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை

ஆரிருள் உய்த்துவிடும்' என்பது குறள். நாவடக்கம், காம அடக்கம் ஆகிய இரண்டும் அடக்கத்திற்கு அவசியம் ஆகின்றன. வனவாச காலத்தில் ராமன் தண்டகாரண்யத்தில் பர்ணசாலை அமைக்கவேண்டியதாயிற்று. பர்ணசாலை அமைக்கும் முன்பு அந்த இடத்திற்குரியவரிடமிருந்து அனுமதி பெறுவதற்கு லட்சுமணனை அனுப்பி வைத்தார். லட்சுமணன் காட்டிற்குள் அலைந்து திரிந்து பார்த்தான். யாவரும் அவனுக்குத் தென்படவில்லை. ஒரு மரத்தடியில் அமர்ந்து அவன் தியானம் பண்ணியபொழுது யோகி ஒருவர் ஒரு கையைக் கௌபீனத்தின் மீது வைத்துக்கொண்டும், மற்றொரு கையால் வாயைப் பொத்திக்கொண்டும் அமர்ந்திருப்பதைத் தியானத்தில் பார்த்தான். லட்சுமணன் ராமனிடம் திரும்பிவந்து தான் யாரையும் பார்க்கவில்லையென்றும், தியானத்தில் தான் கண்ட காட்சியையும் எடுத்துக் கூறினன். "நாவடக்கமும், காம அடக்கமும் உடையவர்கள் அடக்கம் உடையவர்கள் ஆகின்றார்கள். அவர்களால்உலகிற்கு எந்தக்கேடும் உண்டாவதில்லை. எனவே அத்தகையவர்கள் நற்காரியம் செய்வதற்குத் தகுதி உடையவர்கள் ஆகின்றார்கள். அவர்களுக்குத் தெய்வமே அனுமதி வழங்கிவிடுகிறார். நம்மிடத்து நாவடக்கமும், காம அடக்கமும் இருக்கின்றன. எனவே நமக்குத் தெய்வத்திடமிருந்து அனுமதிகிடைத்துவிட்டது. இனி நீ பர்ணசாலை அமைக்கலாம்" என்றார் ராமன்.

நேர்மை கடைப்பிடிப்பது ஆர்ஜவம் எனப்படுகின்றது. ஓரம் சாராது எல்லாரிடத்தும் சமநோக்கோடு நடந்துகொள்கின்றவர்கள் நீதி நெறி நிற்பவர்கள் ஆகின்றார்கள். எவரிடத்திருந்தும் எத்தகைய உதவியும் எதிர்பாராதவர்கள் நீதி வழங்கத் தகுதி உடையவர்கள் ஆகின்றார்கள். அவர்கள் உள்ளம் உண்மையிலிருந்தோ, நேர்மையிலிருந்தோ சிறிதும் பிசகுவதில்லை. யாரிடத்துக் குற்றம் இருந்தாலும் அக்குற்றத்தைப் போக்குவதற்கு அவர்கள் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். யாருக்கும் அவர்கள் பயப்படமாட்டார்கள். கேட்டின் பக்கம் அவர்கள் சிறிதும் சாயமாட்டார்கள். கேட்டை விலக்கி நலத்திற்கு ஆதரவு கொடுப்பது அவர்களுக்குத்தான் சாத்தியமாகும். மன வலிவு உடையவர்களுக்கே அத்தகைய வல்லமை வந்து அமைகின்றது. இந்திரிய வயமயங்காது, ஐந்து இந்திரியங்கள் வாயிலாக மனம் சுகபோக நாட்டம் கொள்ளாது மனதைக் காப்பாற்றுகின்றவர்களுக்கு உள் வலிவு வந்தமைகிறது. இந்திரிய சுகத்தில் ஈடுபடுகின்றவர்களுக்கு மற்றவர்களுடைய தயவு தேவைப்படுகிறது. இந்திரிய சுகத்தை விட்டொழித்துத் தங்களிடத்துள்ள இன்பத்தில் மூழ்கியிருக்கின்றவர்களுக்கு யாருடைய தயவும் தேவை இல்லை. எனவே அவர்களுடைய உள்ளம் நடுநிலையிலிருந்து பிறழாது நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்துகொள்கிறது. புலன் வழிச் சென்று உறவினர் நண்பர் என்னும் உலக உறவை உண்டாக்கும் மனது தளர்ச்சிக்கு உட்படுகிறது. தாற்காலிகமாக உண்டு பண்ணிக்கொண்ட உலக உறவுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தர்மத்தைச் சார்ந்திருக்கும் மனது நடுநிலை பிறழாது நடந்துகொள்கிறது. உலக உறவுகளைக் கற்பிக்கும் மனது எங்ஙனம் நடந்துகொள்கிறது என்பதற்குச் சான்று எடுத்துக்கொள்வோம்.

வீரன் என்றும், வில்லாளி என்றும் போற்றப்படுகின்ற விஜயன் என்னும் அர்ஜுனன் போர்க்களத்துக்கு வந்தான். எதிரிகளாக நிற்பவர்களை உற்று நோக்கினன். தந்தைமார்களையும், பாட்டன்மார்களையும், ஆச்சாரியர்களையும் கண்டான். தர்மத்தை மறந்தான். மனத்தளர்ச்சி அடைந்தான். காண்டீபத்தைக் கீழே போட்டான். கோழை போன்று நடந்துகொண்டான். இந்நிலையில் மனக்குழப்பம் அடைந்த அர்ஜுனனுக்கு மனத் தெளிவை ஊட்டுவதற்குக் கண்ணன் கீதையைப் போதித்தார். 'கோழைத்தனத்தை உதறித் தள்ளிவிட்டு மன உறுதியோடு எழுந்திரு' என்று கூறி ஆத்ம ஞானத்தை அவனுக்குப் போதித்தார். சிறிது சிறிதாக அர்ஜுனனுக்கு உண்மை விளங்கியது; மயக்கம் தெளிந்தது; சொரூபத்தைப் பற்றிய உணர்வு எழுந்தது; காண்டீபத்தைக் கையில் எடுத்தான்; கண்ணனுக்குக் கருவியாக இருக்க முற்றும் சம்மதித்தான். இங்ஙனம் மயக்கத்தை ஒழித்துக் கடவுள் கையில் நாம் கருவியாக இருப்பதற்கு

உலக உறவுகளை ஒழித்துவிட்டு உண்மையைக் காண்பதில் உறுதிபெற்றிருக்க வேண்டும். அப்பொழுது ஆண்மை படைத்தவர்கள் ஆகின்றோம். தூய்மையும் வாய்மையும் உடையவர்கள் இவ்வுலக வாழ்விலும் பரத்துக்குரிய வாழ்விலும் வெற்றியடைகின்றார்கள். தூய்மைக்கு எவ்வளவு பலம் உண்டு என்பதை ஆசோக வனத்தில் சிறையிருந்த சீதாபிராட்டி விளக்கிக்காட்டுகின்றாள். தன்னுடைய கற்பு என்னும் தூய்மையைக் கொண்டு ராவணனிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டாள். சீதை விரும்பியிருந்தால் கற்பின் சக்தியினால் ராவணனை எரித்துச் சாம்பலாக்கியிருப்பாள். ஆனால் ராவணனை அழிப்பது ராமன் செயல் என்று எண்ணித் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குமட்டும் தூய்மையைப் பயன்படுத்திக் கொண்டாள். மனத் தூய்மை உடையவர்களுக்கே அறம் இன்னதென்று விளங்குகிறது. அவ்வறத்தினின்றும் பிசகாது ஒழுகும் வல்லமையும் அவர்களிடத்தே இருக்கிறது. முதலில் மனத்தைப் பரிசுத்தப்படுத்துகின்ற பண்பு நமக்கு வேண்டும். அந்நிலையிலிருந்து தாயுமானவர் கூறும் மனதற்ற பரிசுத்த நிலையை அடையவேண்டும்.

மனத்தை மாசுபடுத்துவது சுயநலமாகும். முயற்சியினால் தான் பெற்றதைத் தனக்கே உரியதென்றும், தானே அனுபவிக்கவேண்டுமென்றும் எண்ணுவது சுயநலமாகும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது உயர்ந்த கோட்பாடு. தான் பெற்றது மன்னுயிர்க்குரியதென்று எண்ணி மன்னுயிர்களின் நலத்துக்கு வழங்குபவன் சுயநலத் தியாகி ஆகின்றான்.

ஸ்ரீ விவேகானந்தர் தமக்கு நிர்விகல்ப சமாதி ஏற்படவேண்டுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கேட்டுக் கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவர் சிரசின்மீது கையை வைத்து அவரைச் சமாதி நிலைக்கு எடுத்துச் சென்றார். சமாதி இன்பத்தில் அவரைச் சிறிது நேரம் வைத்திருந்து மீண்டும் அவர் மனத்தைப் பிரபஞ்ச நிலைக்குக் கொண்டு வந்தார். விவேகானந்தருக்கு அப்பொழுது நரேந்திரன் என்னும் நாமம் இருந்தது. "நரேன், இப்பொழுது உனக்கு என்ன வேண்டும்?" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்டார். "சமாதி நிலையில் அனுபவித்த இன்பத்தில் நான் யாண்டும் நிலைத்திருக்க அருள்புரிவீர்களாக" என்றார். "நல்ல கனியொன்று உன்கையில் கிடைத்தால் அதை என்ன செய்வாய்?" என்று கேட்டார். "என்னுடன் இருக்கும் அனைவருடன் அதைப் பங்கிட்டுக் கொள்வேன்" என்றார். "கனியைப் பங்கிட்டுக் கொடுக்க விரும்பும் நீ ஞானத்தை ஏன் பங்கிட்டுக் கொடுக்கக்கூடாது? பரஞானத்தால் விளையும் பேரின்பத்தை நீ மட்டும் தனித்து அனுபவிக்கலாமா? இதை உலகத்தவர் அனைவர்க்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டாமா?" என்று கேட்டார். இங்ஙனம் நம்மிடத்துள்ள அனைத்தையும் உலகுக்குரியதாக்கும் சுயநலமற்ற பண்பு நமக்கு வேண்டும். நாம் உலகுக்கு எதை மனப்பூர்வமாக வழங்குகின்றோமோ அது பன்மடங்கு நம்மிடத்தில் வளர்கிறது. இவ்வுண்மையை அறிந்துகொள்ளாதவர்கள் சுயநலத்தை வளர்க்கிறார்கள். பொருள் படைத்தவர்கள் அப்பொருளை உலக நலனுக்குப் பயன்படுத்த வேண்டும். அறிவு படைத்தவர்கள் அவ் அறிவை உலகுக்கு வழங்கவேண்டும். பண்பு படைத்தவர்கள் அப்பண்பை உலகுக்குரியதாக்க வேண்டும். நம்மிடத்துள்ளதைக் கரவாது உலகுக்கு வழங்கும் பண்பாளர்களாக நாம் ஆகவேண்டும்.

நம் துன்பத்துக்குக் காரணமான மனமாசை அகற்றவேண்டும். உலகத்தில் நாம் செய்யும் செயல்கள் மனதைத் தூய்மையாக்கிக் கொண்டிருக்கவேண்டும். மனதைத் தூய்மையாக்கும் செயல்கள் புண்ணியச்செயல்கள் ஆகின்றன. மனதை மாசுபடுத்தும் செயல்கள் பாபச்செயல்கள் ஆகின்றன. உலகத்தில் பொருள்தேடும் செயலைச் செய்கின்றோம். பொருள் தேடுவதற்கிடையில் மனதைத் தூய்மையாகவும் வைத்துக் கொள்ளவேண்டும். பொருள்தேடுவதன் மூலம் மனதை மாசுபடுத்திக் கொள்ளக்கூடாது. நேர்மையான முறையில் பொருள் ஈட்டவேண்டும். கள்ளத்தனமான முறையிலும், வஞ்சகமான முறையிலும் பொருளைச் சம்பாதிப்பவர்களுக்குப் பொருள் வளர்ச்சி உண்டாகலாம். ஆனால் அம்முறையில் பொருள் தேடுபவர்களுடைய மனது மாசுடையதாகிறது. பிறர் பொருளை

வன்முறையில் அபகரிப்பதும், பிறருக்குத் தெரியாமல் அதை எடுத்துக்கொள்வதும், பொய் பேசிப் பொருள் சம்பாதிப்பதும் உள்ளத்தை மாசுபடுத்துகின்ற பதிவுகளை உண்டாக்குகின்றன. இச்செயல்களின்மூலம் வருகின்றபொருள் பெருக்கத்தைத்தான் மற்றவர்கள் பார்க்கின்றார்கள். பொருள் தேடுபவனும் தன்னிடத்தில் பொருள் வளர்வதை அறிகின்றான். ஆனால் அச்செயல்களின் மூலம் அவனிடத்தில் உண்டாகின்ற மனதை மாசுபடுத்துகின்ற பதிவுகள் பிறருக்குத் தெரிவதில்லை. சிந்தனை செய்யாது அச்செயல்களில் ஈடுபடுகிறவனுக்கும் அப்பதிவுகளைப்பற்றிய உண்மை விளங்குவதில்லை. அச்செயல்களின் மூலம் அவன் பொருள்களை வளர்ப்பதற்கிடையில் தன் உள்ளத்தை மாசுபடுத்தும் பொல்லாங்கை வளர்ப்பவனாகின்றான். மனதில் ஏற்படுகின்ற பதிவுகள் நமக்கே உரியனவாகின்றன. அவற்றை நம்மிடமிருந்து பிறர் வாங்கிக்கொள்ளவும் முடியாது; பிறர் அபகரித்துக் கொள்ளவும் முடியாது. பொருள் நொடிப்பொழுதில் நம்மை விட்டுப்போய்விடும். ஆனால் உள்ளப் பதிவு நம்மைவிட்டுச் சுலபத்தில் போகாது. எனவே உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் பதிவுகளை உண்டாக்கிக்கொள்வதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். திருடுவதால் பொருள் ஏராளமாகக் கிடைக்கலாம். பொய் பேசுவதனால் ஏராளமான லாபம் கிடைக்கலாம். அப்படி வருகின்ற பொருள் நிலைத்திருப்பதில்லை. வந்த வழியே அது போய்விடும். திருடுவதனாலும், பொய் பேசுவதனாலும் மனதில் ஏற்பட்ட பதிவுகள் மனதை மாசுபடுத்துகின்றன. அப்படி உண்டான பதிவுகள் உள்ளத்தை விட்டு எளிதில் மறைவதில்லை. அப்பதிவுகள் நம்மை ஆட்டிப் படைக்கின்றன. எனவே பொருள் ஒருவிதத்தில் வந்தது லாபகரமாகத் தோன்றினாலும் அத்திய செயல்களின் மூலம் உள்ளம் மாசுபடிந்தது நாம் அடைந்த பெரிய நஷ்டமாகும். எனவே மாசற்றமனம்படைத்தவர்களாக மாறி அமையும் பண்பை நாம் பெறுதல் வேண்டும்.

கள், காமம் ஆகிய இரண்டும் மயக்கத்தை உண்டுபண்ணுகின்றன. கள்வெறி மூளையைப் பாதித்துப் புத்தி தடுமாற்றத்தை ஏற்படுத்தும் மயக்கத்தை உண்டுபண்ணுகிறது. காமம் உள்ளத்தைப் பற்றி நின்று மனதில் ஒரு மயக்கத்தை உண்டுபண்ணுகிறது.உடல் பற்று காமம் என்றும், பொருள் பற்று காஞ்சனம் என்றும் சொல்லப்படுகின்றன. உடல் வளர்ச்சிக்கும், உலக வாழ்வுக்கும் தேவையான காமமும், காஞ்சனமும் இருக்கலாம். சரீரத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதும், சரீரத்துக்கு உணவு கொடுத்துப் போஷிப்பதும், சரீரத்துக்கு நோய் வராமல் பாதுகாப்பதும் சரீரப் பற்றுதலால் நிகழ்கிற செயல்களாகும். அந்த அளவுக்குச் சரீரப் பற்று இருப்பதில் குற்றமில்லை. சரீரத்துக்கு வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தி அலங்கரிப்பதும், அதைக் கண்ணடியில் பார்த்து மகிழ்வதும், சொகுசான ஆடைகளை அணிந்து மகிழ்வதும், உடல் சுகத்தை அனுபவிப்பதும் காமத்தை வளர்ப்பனவாகின்றன. அத்தகைய செயல்களால் ஏற்படும்பதிவுகள் மனதில் காமத்தை வளர்க்கின்றன. எனவே அத்தகைய செயல்களிலிருந்து நாம் விடுபட வேண்டும். உலக வாழ்வுக்குத் தேவையான பொருள்களை ஈட்டுகின்ற விஷயத்தில் பொருள் பற்று வைத்திருக்கலாம். ஆடம்பரச் செலவுகளுக்கும், பொருளைத் தேடி அதைப் பயன்படுத்தாது பதுக்கி வைப்பதற்கும் பொருள் தேடினால் மனதில் பொருள் பற்று வளர்கிறது. கள் வெறியினின்றும், காமத்தினின்றும் விலகியிருப்பவர்கள் சிறந்த பண்பாளர்களாகிறார்கள்.

நற்குணங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்பொழுது சீலர்களாக நாம் மாறியமைகின்றோம். சீலம் அல்லது ஒழுக்கம் மேன்மையை நல்குகிறது. எதை இழந்தாலும் சீலத்தை இழக்கக்கூடாது. "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. உடல் வளர்ச்சிக்கு நல்லுணவு எவ்வளவு அவசியமோ மனோவளர்ச்சிக்கு நற்பண்புகள் அவ்வளவு அவசியமாகின்றன. மனோவளர்ச்சியடையும் அளவுதான் மானுட வாழ்வில் மனிதன் முன்னேற்றம் அடைகின்றான். நற்பண்புகளை வளர்ப்பதன் வாயிலாக உள்ளத்தை உயர்த்துவோமாக. நற்பண்புகளை வளர்த்து நன்மை கடைப்பிடித்து நன்றுடையானை அடைவோமாக. (முற்றும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-160

914. **स्वस्था ஸ்வஸ்தா** — தன்னில் தானு யிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தியை அல்லலில் ஆழ்த்து தற்கு வேறு யாதுமில்லை. ஜீவர்களின் பாங்கோ ஏதேதோ காரணத்தை முன்னிட்டு இடையிடையே துன்பத்துக்கு ஆளாகிறார்கள். பிரபஞ்சத்தில் கட்டுண்டு இருப்பவர்களுடைய பாங்கு அத்தகையது. பிரபஞ்சமோ நலம் கேடு இரண்டும் உடையது. நலன் வந்து வாய்த்தகாலை இன்புற்றிருப்பதும் கேடு வந்து வாய்த்தகாலை துன்புற்றிருப்பதும் உயிர்களின் போக்கு. உயிர்களுக்குத் துன்பம் வாய்க்கும் பொழுது அன்னையை வழுத்துகிறார்கள். மக்கள் வழுத்துதற்கேற்ப ஓரளவு ஆறுதல் பெறுகின்றனர். அப்படி அவர்கள் துன்பத்தினின்று விடுதலை அடைவதும் இயல்பே. ஏனென்றால் துன்பத்தைத் தவிர்க்க முயலுகிறவர்களுக்குத் துன்பத்துக்கு இடம் தராத அன்னைதான் அவர்களை அச்சிறுமையிலிருந்து அகற்றவல்லவளாகிறாள். பராசக்தியைப் பொறுத்தவரையில் அவளைத் துன்புறுத்துவதற்குப் புறத்தில் ஏதுமில்லை. அவள் அகிலாண்ட நாயகி. மானுடன் ஒருவன் காற்றைத் தன் போக்கில் பாழ்படுத்தலாம். தீயை அணைக்கலாம் நீரை இடமாறி ஓடும்படி செய்யலாம். நிலத்தை மேடுபள்ளமாக மாற்றலாம். ஆனால் இந்த நான்கு பூதங்களுக்கும் இருப்பிடமாயிருக்கும் ஆகாசம் என்னும் பூதத்தை எந்த விதத்திலும் விகாரப்படுத்த முடியாது. யாண்டும் நிறைந்துள்ள சூட்சுமப்பொருள் ஆகாசம். அதற்கு நிகரான சிதாகாசமாக அம்பிகை இருப்பதால் அவளை விகாரப்படுத்தவோ துன்புறுத்தவோ புறத்தில் ஏதுமில்லை. ஆதலால் அவள் யாண்டும் இன்புற்றிருக்கிறாள்.

ஸ்வஸ்தா என்றால் தன் சொரூபத்திலேயே மாறாது திளைத்திருப்பவள் என்பது பொருள். அன்னை பராசக்தி யாண்டும் சத்சொரூபம், சித் சொரூபம், ஆனந்த சொரூபம். சூரியனிடத்தில் எங்ஙனம் இருளுக்கு இடமில்லையோ அங்ஙனம் அம்பிகையினிடத்து அவளுக்கு அன்னியமான வேறு ஏதும் இடம்பெறமாட்டாது. ஆத்ம சொரூபமும் அன்னை பராசக்தியும் யாண்டும் ஒன்றே. வாழ்க்கையிலே ஜீவர்கள் அடைதற்குக் குறிக்கோளாயிருப்பது தங்களுடைய நிஜசொரூபமாகிய ஆத்மாவேயாம். ஆத்மா பூரணப் பொருள். அது எதையும் சார்ந்திருப்பதில்லை. அதை மலினப்படுத்துவதற்கு வேறு யாதுமில்லை. அங்ஙனம் தன்மயமாயுள்ள ஆத்ம சொரூபமும் அன்னையின் சொரூபமும் ஒன்றேயாம். இது ஒப்பு உயர்வு அற்ற பெருநிலை. ஆதலால் அன்னையை வழிபடுபவர்களுக்கு அவளுடைய அருள் வாய்க்கிறது. அப்படி வழிபடுபவர்களும் அன்னையின் பெருநிலையையே அடையப் பெறுகின்றார்கள்.

கடலை வந்தடைந்த நதிகள் தாமே கடல்மயமாவதற்கு நிகராக அன்னை பராசக்தியை உபாசிக்கின்றவர்கள் தாங்களே குறையில்லா நிறைநிலை யெய்துகின்றனர் என்னும் பெரு வாய்ப்பு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

915. **स्वभावमधुरा ஸ்வபாவமதுரா** — இயல்பாகவே எல்லாராலும் விரும்பப்படுகிறவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

குழந்தை ஒன்றை மக்கள் எல்லாரும் நேசிக்கின்றனர். அதற்குக் காரணம் அக்குழந்தையின் சுபாவம் மூலநிலையைவிட்டுப் பிசகாதிருக்கிறது. பிரபஞ்ச சம்பந்தமான விகாரங்கள் ஏதும் அதன் உள்ளத்தை வந்து இன்னும் பாதிக்கவில்லை. அக்குழந்தையின் நிலையிலேயே அன்னை பராசக்தி யாண்டும் நிலைத்திருக்கிறாள். அந்நிலை எல்லார் உள்ளத்தையும் கவரவல்லதாயிருக்கிறது. காந்தக் கல் எங்ஙனம் இரும்புத் துண்டுகளனைத்தையும் தன்னிடத்துக் கவர்ந்திழுக்கின்றதோ அங்ஙனம் அன்னை பராசக்தியின் இனிய சுபாவமானது உயிர்களனைத்தையும் தன்னிடத்து இனிது கவர்ந்திழுக்கிறது. அப்படிக் கவர்ந்திழுப்பதால் உயிர்களனைத்தும் பரமானந்தமடைகின்றன.

மதுரமான அல்லது எல்லார்க்கும் மகிழ்வை ஊட்டக்கூடிய சுவபாவத்தை உடையவள். அந்தந்த உயிருக்கு அதனதன் தாய் மகிழ்வை ஊட்டவல்லவளாயிருப்பது இயற்கையின் பாங்கு. எந்த உயிராவது தான் ஈன்றெடுத்த தாயை வெறுக்கவோ புறக்கணிக்கவோ செய்வ

தில்லை. அத்தனை விதமான தாய்மார்களின் சொருபத்தில் இருப்பவள் அன்னை பராசக்தி. ஆதலால் ஜீவகோடிகளனைத்தும் அன்னை பராசக்தியிடம் இனிய இணக்கம் பூணுதலில் வியப்பு ஏதுமில்லை.

அந்தந்த ஜீவனுடைய மன அமைப்பு அவனவனுக்குரிய உபாதி என இயம்பப்படுகிறது. மக்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அத்தனை பேர்களுக்கும் அத்தனை விதமான உபாதிகள் இருக்கின்றன. தன்னுடைய உபாதியோடு ஒத்திருக்கிற மக்களை நேசிக்கவும் ஒவ்வாத மக்களை வெறுக்கவும் செய்வது உலகின் போக்கு. ஆயினும் அத்தனை பேருக்கும் ஒத்திருக்கிற நல்ல உபாதியையே அன்னை பராசக்தி படைத்திருக்கிறாள். ஆதலால் அவள் நல்லார்க்கும் பொல்லார்க்கும் பொதுவாக நலன் தரும் நல்லியல்பு படைத்தவளாகவே இலங்கி வருகின்றாள்.

அரசன் ஒருவனுக்கு மாளிகைகள் பல இருக்கின்றன. ஆயினும் ஏதேனும் ஒரு மாளிகையில் அவ்வேந்தனுக்கு விருப்பம் அதிகம் அமைகிறது. அதே விதத்தில் அன்னை பராசக்திக்கு இருப்பிடமாக க்ஷேத்ரங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் மதுரை என்னும் க்ஷேத்திரத்தில் மீனாட்சி தேவியாக அவள் எழுந்தருளியுள்ளாள். இந்த க்ஷேத்திரத்தின்கண் அவள் இப்பெயர் பெற்றிருப்பதில் சிறப்பு ஒன்று உண்டு. நீர் வாழும் மச்சம் ஒன்று அல்லும் பகலும் கண்மூடுவதில்லை. யாண்டும் விழித்துள்ள கண்பார்வையுடனேயே அந்த ஜந்து வாழ்ந்து வருகிறது. அந்தப் பாங்கை அன்னை பராசக்தியும் படைத்திருக்கிறாள். அவள் எக்காரணத்தை முன்னிட்டாவது கண் இமைப்பதில்லை. நித்திய ஜாக்ராதாவஸ்தையிலே அவள் இலங்கி வருகின்றாள். பிரளய காலத்திலும் அவள் கண் மூடுவதில்லை. அத்தகைய விழிப்பு நிலையிலிருந்துகொண்டு ஜீவகோடிகள் அனைத்தையும் அவள் காப்பாற்றி வருகிறாள். அப்படி அவைகளைக் காப்பாற்றுவதில் அவள் பரமானந்தம் அடைந்திருக்கிறாள் என்பது இந்த நாமத்தின் மற்றொரு பொருள்.

ஆத்மஞானம் ஓங்கப் பெறுகிற ஞானிகளிடத்து ஓஜஸ் அல்லது உள்ளொளி பெருக்கெடுக்கிறது. அதை உண்டுபண்ணுதலில் அவள் பெருமகிழ்வு எய்துகிறாள் என்னும் கருத்தும் இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

அன்னை பராசக்தி இனிமை ததும்புகின்ற தன்னுடைய பேரிணக்கத்தால் அருவருப்புக்குரிய ஸ்வபாவமுடையவர்களையும் நல்ல ஸ்வபாவமுடையவர்களாகத் திருத்தியமைக்கிறாள் எனவும் இந்நாமம் பொருள்படுகிறது.

பசுவானது தன்னிடம் ஓடிவருகின்ற கன்றுக்குட்டியை இனிது ஏற்றுக்கொள்வதற்கு நிகராக அன்னை பராசக்தியினிடம் பேரன்பு பூண்டவர்களாக விரைந்து வரும் பக்தர்களை மகிழ்வுடன் தனக்குச் சொந்தமானவர்களாக அவள் ஏற்றுக்கொள்கின்றாள்.

916. **धीरा** தீரா—பாண்டித்தியம் உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பாண்டித்தியத்தில் இரண்டுவிதப் பாங்குகள் உண்டு. ஊசிப் புல்போன்ற கூர்மை உடைய பாண்டித்தியம் ஒன்று. வஜ்ராயுதம்போன்று கூர்மையுடைய பாண்டித்தியம் மற்றொன்று. ஊசிப்புல்லோ கூர்மையில் பெரிதும் ஊசியை விட நுண்ணியதாயிருக்கிறது. சில நுண்ணறிவாளர்கள் ஊசிப்புல்லுக்கு நிகராக மிக மிகக் கூர்மை வாய்ந்த பண்டிதர்களாக விளங்குகின்றனர். ஊசிப்புல்லானது கூர்மையில் ஊசிக்கு மிக்கது என்றாலும் ஒரு மெல்லிய துணியையோ இலேசான காகிதத்தையோ பொத்துக்கொண்டுபோகும் உறுதிப்பாடு அதனிடத்து சிறிதும் இல்லை. அங்ஙனம் வெறும் ஏட்டுக் கல்வியாளர்கள் நுண்ணறிவு மிகப் படைத்தவர்களாகவிருக்கிறார்கள். அரிய பெரிய கருத்துக்கள் பலவற்றை அவர்கள் நூல்களிலிருந்து நுணுக்கமாகக் கற்றிருக்கிறார்கள். எனினும் வாழ்க்கையில் அக்கோட்பாடுகளை நடைமுறையில் கொண்டுவருவதற்கு அவர்களுக்கு இயலுவதில்லை. அறிவோ ஊசிப்புல்லுக்கு ஒப்பானது. ஏட்டுக் கல்வியாளர்கள் பாலில் ஊறவைத்த நெல்லுப் பொரிபோன்ற வதவத சொதசொத ஆட்களாக வெறுமனே வாழ்ந்திருக்கிறார்கள். அன்னை பராசக்தி தீரையாகவிருப்பதால் அவளுடைய பாண்டித்யம் உறுதிப்பாட்டில் வஜ்ராயுதத்திற்கு ஒப்பானது. வஜ்ராயுதமோ கூர்மையில் க்ஷவரக்கத்திக்கு ஒப்பானது. உறுதிப்பாட்டில் விறகு பிளக்கும் கோடாரிக்கு ஒப்பானது. வஜ்ராயு

தத்தை க்ஷுவரக்கத்தியாகவும், கோடாரியாக வும் மாற்றி மாற்றிப் பயன்படுத்தலாம். எல் லாக் காரியங்களுக்கும், எல்லாச் சந்தர்ப்பங் களிலும் வஜ்ராயுதம் பயன்படுவதற்கு நிகராக அன்னை பராசக்தியின் பாண்டித்தியம் கூர் மையில் க்ஷுவரக்கத்திக்கு நிகரானது. உறுதிப் பாட்டில் கோடரிக்கு நிகரானது. தீரா என்ற நாமத்தில் இந்த அரிய பெரிய கோட்பாடா கிய நுண்ணறிவும் உறுதிப்பாடும் ஒன்று சேர்ந்து அமைந்து இருக்கின்றன. அன்னை பராசக்தியை முறையாக உபாசிக்கும் பண்டி தர்கள் தாங்களே தீரர்கள் ஆகிருர்கள். வாழ்க் கையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நன்கு வினையாற்ற வல்லவர்களாகவும் சாஸ்திரங் களில் அடங்கியுள்ள மேலாம் கருத்துக்களைக் குழந்தைகளுக்கு விளங்கும்படி தெளிவுபடுத்த வல்லவர்களாகவும் அப்பண்டிதர்கள் அமை கிருர்கள். தீரையாக அமைகின்ற அன்னை பரா சக்தியின் உபாசனையினல் வந்தமையும் நலன் இதுவேயாம்.

917. धीरसमर्चिता தீரஸமர்ச்சிதா-உறு திப்பாடு படைத்துள்ள பண்டிதர்களால் நன்கு ஆராதிக்கப்படுகிறவள் என இந்நாமம் பொருள் படுகிறது.

முயற்சி எடுத்துக் கொள்கிறவர்களுள் இரண்டு தரத்தார் இருக்கின்றனர். கிணறு வெட்ட மானுடன் ஒருவன் முயலுகிருன். ஓரிடத்தில் ஐந்தடி ஆழம் கிணறு வெட்டு கிருன். பிறகு தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு மற்ருேர் இடத்தில் ஏழு அடி ஆழம் கிணறு எடுக்கிருன். இங்ஙனம் கிணறு எடுக்கும் இடத்தை அடிக்கடி மாற்றித் தன் ஆற்றலையும், காலத்தையும் அவன் வீண் ஆக்குகிருன். அத்தகையவனுக்கு நிகரா கிருன் உறுதிப்பாடில்லாத ஏட்டறிவாளி. மற்ருெருவித மனிதன் நிலத்தினுள் நீர் அகப் படும் இடத்தை ஆழ்ந்து யோசித்துப் பார்த்து அதைக்குறித்து மற்றவர்களுடைய அபிப்ரா யத்தையும் கேட்டு ஒரே இடத்தில் ஆழமாகக் கிணறு வெட்டிக்கொண்டு போகிருன். தன் முயற்சியில் இறுதியில் அவன் வெற்றியும் அடைகிருன். அத்தகைய உறுதிப்பாடு படைத்த மனிதனுக்கு நிகராகிருன் தீரனு யுள்ள பண்டிதன். 'நுண்ணிய கர்மமும் எண் ணித் துணி' என்னும் கோட்பாட்டை நன்கு கடைப்பிடிப்பவனுகிருன் அன்னவன். அன்னை யின் வழிபாட்டில் அவன் தீவிரமாக ஈடுபடு கிருன். அருளுக்குப் பாத்திரம் ஆகவில்லையே என்று எண்ணி அவன் தளர்வுறுவதில்லை. தாய் எவ்வளவுதான் பராமுகமாக இருந்தாலும் குழந்தையானது விடாப்பிடியாகத் தன் தாயை நச்சுவதற்கு நிகராகத் தீரனுகிய பண்டிதன் அன்னை பராசக்தியை விடாமுயற்சியுடன் வழிபடுகிருன். அதுமட்டுமன்று. வழிபட வேண்டிய முறைமைகளையெல்லாம் நன்கு கற்றறிந்தவனுக அவன் இருக்கின்ருன். முறை வழுவாது அவன் வழிபாடு பண்ணுகிருன். அதில் காலம் எவ்வளவு வீணுகக் கழிந்து போனது என்பதை அவன் கருத்தில் வாங்குவ தில்லை. பேருக்கத்துடனும், ஆர்வத்துடனும் ஒழுங்குப்பாட்டுடனும் வழிபாடு பண்ணுவது அவனுடைய பாங்கு ஆகும்.

பகீரதன் தன்னுடைய முன்னோர்களை உய் வித்தல் பொருட்டு ஆகாச கங்கையைப் பூலோ கத்துக்குக் கொண்டுவர முயன்ருன். ஒவ்வொரு படித்தரத்திலும் அவன் தோல்வியே அடைந் தான். தோல்வியை முன்னிட்டு அவன் மனத் தளர்வு அடையவில்லை. இடைஞ்சல்களை யெல்லாம் முறையாக மீண்டான். சிற்சில வேளைகளில் அவன் அழைத்துவந்த கங்கா தேவி மாயமாக மறைந்துபோனுள். அதைக் குறித்து அவன் ஏமாற்றமடையவில்லை; மனத் தளர்வும் அடையவில்லை. தவம் புரிந்தான். அன்னையின் அருளை நாடினுன். படாதபாடு பட்டு இறுதியில் வெற்றியுமடைந்தான். அன் னவனை அறிவில் தீரன் என்றும், விடாமுயற் சியே வடிவெடுத்தவன் என்றும், வழிபாட்டு முறையில் பிசகாதவன் என்றும் பகரலாம். அன்னையின் அருளைப் பெறுதற்கு இத்தகைய உறுதிப்பாடும், ஊக்கமும், முறைமையும் முற் றிலும் வேண்டப்படுகின்றன. முயற்சியுடை யார் இகழ்ச்சியடையார் என்னும் கோட் பாட்டை அன்னையின் அருளுக்குப் பாத்திர மாயுள்ள பக்தர்களே தங்கள் ஜீவிதத்தின் வாயிலாக விளக்கியிருக்கின்றனர். அன்னை யின் அருளுக்குப் பாத்திரமாக மன உறுதிப் பாட்டுடன் ஆராதனையில் தீவிரமாக ஈடுபடு வோமாக.

ஆத்ம போதம்

(திரு V. S. நரசிம்மன்)

बोधोऽन्यसाधनेभ्यो हि साक्षान्मोक्षैक साधनम् ।
पाकस्य वह्निवज्ज्ञानं विना मोक्षो न सिध्यति ॥

"पाकस्य (பாகஸ்ய) சமையல் செய்வதற்கு वह्निवत् (வஹ்னிவத்) நெருப்பைப் போல், अन्यः साधनेभ्यः (அன்ய: சாதனேப்ய:) ஏனைய சாதனங்களுள் बोधः हि (போத: ஹி) ஞானம் ஒன்றே साक्षात् (சாக்ஷாத்) நேரடியாக मोक्ष (மோக்ஷ) முக்திக்கு एकसाधनम् (ஏகசாதனம்) ஒரே வழியாகும். ज्ञानं विना (ஞானம் விநா) ஞானம் இல்லாது मोक्षः (மோக்ஷ:) முக்தி न सिध्यति (ந சித்யதி) அடையப்பெறுவதன்று."

"சமையல் செய்வதற்கு நெருப்பு இன்றியமையாத சாதனம். அதேபோன்று ஞானம் ஒன்றே முக்திக்கு நேரடியான சாதனம். ஞானம் இன்றேல் முக்தி அடைய முடியாது."

சமைப்பதற்குத் தண்ணீர், பாத்திரம், பொருள்கள் தேவை. ஆயினும் நெருப்பு இல்லை என்றால் காரியம் முடியாது. அதேபோன்று தவம், யாகம், தானம், கிரியை என்று பல சாதனங்கள் உரைக்கப்படுகின்றன. ஆயினும் ஞானம் இன்றேல் பயன் முழுமையாகக் கிட்டாது. ஆதிசங்கரர் காலத்தில் கர்மகாண்டமாகிய யாகம், யக்ஞம் ஆகியவை மிகவும் வலுப்பெற்று இருந்தன. 'அபூர்வம்' என்ற நியதியின் மூலம் யாகத்தின் பலனாகிய சுவர்க்கம் போன்றவை கர்த்தாவிற்குத்தடையின்றிக் கிட்டும். இத்தகைய அடிப்படையான கொள்கையைக் கொண்ட பூர்வ மீமாம்சம் முக்தி, சாதனை மற்றும் இறைவனைப் பற்றியும்கூட வலியுறுத்திப் பேசுவதில்லை. அவர்கள் ஈசுவரன் கர்மமே. (कर्म इति मीमांसकाः) பூர்வ மீமாம்ச தர்சனத்தைப் பின்பற்றிய ஜைமினி என்ற முனிவர் "வேதத்தின் நோக்கமே கர்மங்களைப் பற்றி விவரமாகக் கூறுவது ஒன்றேதான்; எனவே கர்மகாண்டத்திற்குத் தொடர்பற்ற சில கருத்துக்கள் காணப்பட்டால், அவற்றை அர்த்த வாதம்-கர்மத்தை மறைமுகமாகவோ நேரடியாகவோ சிறப்பித்துக் கூறும் புகழ் உரைகள் என்று கருதவேண்டும்." आम्नायस्त क्रिया अर्थत्वात्, आनर्थक्यम् अतदर्थनाम् । என்று தமது உரையில் அடிப்படைக் கொள்கையை அமைக்கின்றார். இங்ஙனம் கர்மத்தைச் செய்யாது சந்நியாசியாக (निरग्नि न चाक्रियः—அக்னி இன்றி, கர்மம் இன்றி) செய்வதை அவர்கள் ஏற்கவில்லை. ஆயினும் ஆதிசங்கரர் இத்தகைய தலைசிறந்த மீமாம்ச விதிகளை வாதில் வென்று, அத்வைத தரிசனத்தின் முக்கியத்துவத்தை நிலைநாட்டினர். குமாரில பட்டர் என்ற மீமாம்சவாதியின் தலைசிறந்த மாணவராகிய 'மண்டன மிச்ரர்' என்பவரைக் கண்டு பேசி, அவரை ஞான மார்க்கத்திற்குத் திருப்பினர். சிருங்கேரி மடத்தின் முதல் பீடாதிபதியாகத் திகழ்ந்தவர் இவரே.

கர்ம காண்டத்தின் மூலம் சாதகன் அடையக் கூடியது உள்ளத்தூய்மை-சித்த சுத்தி-ஒன்றுதான். அதன் மூலம் பரிபக்குவம் பெற்ற சீடனின் உள்ளத்தே அஞ்ஞானம் அகன்று, ஞானபோதம் விகசிக்கும்போது, அது மோக்ஷமாகிறது. இந்தக் கருத்தை விவேக சூடாமணியில் ஆசாரியர் விவரிக்கிறார்.

चित्तस्य शुद्धये कर्म न तु वस्तूपलब्धये ।
वस्तुसिध्दि विचारेण न किंचित् कर्म कोठिभिः ॥

(சுலோகம் : 11)

"கர்மத்தின் பலன் உள்ளத்தின் தூய்மையே. உண்மைப் பொருளை அடைவது அன்று. 'விசாரணம்' ஒன்றினால் தான் மெய்ப்பொருள் சித்திக்கின்றது. கோடிக்கணக்கான கர்மங்களைச் செய்வதால் மட்டுமே சிறிதளவும் சித்திக்காது." கர்மவினையின் பாவங்கள் விலகியவுடன் மனிதனுக்கு ஞானம் உண்டாகின்றது என்ற கருத்தும் (ஞானம் உத்பத்யதே பும்ஸாம் க்ஷயாத் பாபஸ்ய கர்மண:) ஒப்பிடத்தக்கது. பிறிது ஓரிடத்தில் (விவேக சூடாமணி : 6) இதே கருத்தை ஆசாரியர் வலியுறுத்துகின்றார்.

वदन्तु शास्त्राणि यजन्तुदेवान्
कुर्वन्तु कर्माणि भजन्तु देवताः ।
आत्मैक्यबोधेन विना विमुक्ति,
र्नसिध्यति ब्रह्मशतान्तरेपि ॥

சாஸ்திரங்களை ஓதட்டும்; தேவர்களைக் குறித்து யாகங்களைச் செய்யட்டும்; பலவிதக் கர்மங்களைச் செய்யட்டும்; அநேக தேவதை

களை வழிபடட்டும்; ஆயினும் 'ஆத்மா ஒன்று' என்ற ஐக்கிய போதம் எழாதவரை, பிரம்மாவின் நூறு வயது முடிந்த போதிலும் கூட முக்தி என்பது கிடைக்காது."

'ஞானத்திற்கு மட்டும் இவ்வளவு முக்கியத்துவம் தரவேண்டுமா?' என்று எண்ணலாம். 'பந்தம், முக்தி' என்ற சொற்களை ஆராய்ந்தால் விடை கிட்டும். அத்வைத வேதாந்தத் தத்துவப்படி 'தனது உண்மை சொரூபத்தை உணராது இருப்பதே' பந்தம். இதற்குக் காரணம்- அவித்தை (அஞ்ஞானப்) அவித்தை போக்கப்பட்டால் ஆத்ம தத்துவம் தானே விளங்கும். அது முக்தி. ஞானம் தவறான கருத்தைப் போக்குகின்றது. புதியதாக எதையும் உண்டாக்குவதில்லை. எந்த ஒரு செயலின் விளைவாகவும் ஞானம் இல்லை. நமது சாஸ்திரத்தில் கர்மத்தின் விளைவுகளை நான்காகப் பிரிக்கின்றனர்.

1) ஆப்ய கர்மம்: குறிப்பிட்ட இடத்தைச் சென்று அதன் மூலம் அடையப்படுவது (ஆத்மன் அப்படி ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் கிடைக்கும் வஸ்து அன்று)

2) உத்பாத்ய கர்மம்: காலத்தின் ஒரு கட்டத்தில் இல்லாத ஒன்றைப் புதிதாக உண்டாக்குவது (ஆத்மன் காலத்திற்கு உட்பட்டதன்று. அது இல்லாத காலம் இல்லை. எது காலத்ரயத்திலும் இருக்கின்றதோ அதுவே சத்திய வஸ்து ஆகும்.)

3) விகார்ய கர்மம்: ஒன்றை மற்றொன்றாக மாற்றுவது—பால் தயிராக மாறுவது போல். இத்தகைய பரிணமத்தில் ஆத்மன் அடங்குவதில்லை. (பரிணம வாதத்தை அத்வைதம் ஏற்பதில்லை. அது உரைப்பது விவர்த்த வாதம்—உள்ள பொருள், மாற்றம் எதுவும் அடையாமல் மாறுவதைப் போன்ற தோற்றத்தை உண்டாக்குவது-கயிறு பாம்பாவது போல்-விவர்த்த வாதம்)

4) சம்ஸ்கார்ய கர்மம்: அசுத்தத்தை நீக்கித் தூயதாக்குதல். ஆத்மாவில் அங்ஙனம் அசுத்தம் எதுவும் இல்லை. ஆத்மாவை மறைக்கும் உபாதியை நீக்கவேண்டும்.

ஆத்ம ஞானம் மேற்குறிப்பிட்ட எத்தகைய பிரிவிலும் அடங்காது. தவறான எண்ணத்தை நீக்கி, உண்மையை உணரச் செய்யும் சாதனம், ஆத்ம சாதனமேயன்றிக் கர்ம காண்டம் அன்று என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

பாடல் 3.

अविरोधितया कर्म नाविद्यां विनिवर्तयेत् ।
विद्याविद्यां निहन्त्येव तेजस्तिमिर सङ्घवत् ॥ ३ ॥

कर्म (கர்ம) கர்மம் अविरोधितया (அவிரோதிதயா) விரோதமற்ற பாங்கு உடையது அன்று; अविद्यां (அவித்யாம்) அஞ்ஞானத்தை न विनिवर्तयेत् (ந விநிவர்தயேத்) நீக்க முடியாது; विद्या (வித்யா) ஞானம் अविद्यां (அவித்யாம்) அஞ்ஞானத்தை निहन्ति एव (நிஹந்தி ஏவ) கட்டாயம் அழிக்கின்றது; तेजः (தேஜ:) ஒளி तिमिर सङ्घवत् (திமிர சங்கவத்) இருள் கூட்டத்தைப் போல.

"கர்மம் அஞ்ஞானத்திற்கு எதிரானது அன்று; எனவே அது அறியாமையைப் போக்காது. வெளிச்சம் எவ்வாறு இருளைப் போக்குகின்றதோ அதைப்போன்று ஞானம் அஞ்ஞானத்தைக் கட்டாயம் அழிக்கும்."

ஆத்மபோத நூலின் ஒவ்வொரு சுலோகத்திலும் ஒரு குறிப்பிட்ட தெரிந்த உண்மையைக் கொண்டு தத்துவத்தின் கருத்து விளக்கப் பட்டிருப்பதைக் காணலாம். பாடத்தைப் புகட்டும் முறையில் "அறிந்த ஒன்றிலிருந்து அறியாததை உணர்த்தவேண்டும்—From the known to the unknown." ஆயினும் கொடுக்கப்பட்டுள்ள உதாரணம் எல்லாவகையிலும் பொருந்தாது. எந்தக் கருத்தை வலியுறுத்த உதாரணம் கூறப்படுகின்றதோ அதை மட்டுமே நாம் ஏற்கவேண்டும்.

இருளும், வெளிச்சமும் எதிரானவை. இருட்டைப் போக்க வேறு ஓர் இருட்டைத் துணையாகக் கொள்ளக் கூடாது. அதைப் போக்க வெளிச்சம்தான் பயன்படும். "உன்னுடைய இதயம் என்னும் குகையில் அஞ்ஞானம் என்னும் அந்தகாரம் சூழ்ந்துள்ளது. ஞானம் என்னும் வெளிச்சத்தை ஏற்றி வை. அஞ்ஞானம் தானே அகன்றுவிடும்" என்பது பரமஹம்சர் உபதேசம். அந்தப் புறவுலகிலுள்ள இருளைப் போக்குவதற்கு வெளிச்சம் தேவைப் படுவதுபோன்று அகத்திலுள்ள அஞ்ஞானத்தைப் போக்க ஞானம் தேவைப்படுகின்றது. இந்தச் சுலோகம் இதே கருத்தை வலியுறுத்துகின்றது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (297) தானம் பண்ணுவது அவசியமா? அவசியம் என்றால் எத்தகைய தானம் செய்யவேண்டும்?

மானுட வர்க்கம் தனித்தனியாக வாழும் வியக்திகளைக்கொண்டது அன்று. சமுதாய வாழ்க்கையே மானுடர்க்கேற்றதாம். உலகெங்கும் சமுதாயங்கள் இக்கோட்பாட்டின்படி அமைந்திருப்பதைப் பார்க்கின்றோம். சேர்ந்து வாழ்ந்திருக்கும் மக்கள் விலங்கின் மந்தை போன்று அமைந்தவர்கள் அல்லர். விலங்குகள் சேர்ந்து வாழ்ந்திருந்தாலும் அதனதன் செயலை அது அதுவே செய்து சாதித்துக் கொள்கிறது. மக்களினம் அத்தகையதன்று. Distribution of labour அல்லது அந்தந்த மனிதனுக்கேற்ற சுவதர்மம் மக்களுக்கே உரியதாம். ஆசிரியர் பாடம் புகட்டுகிறார். டாக்டர் வைத்தியம் பண்ணுகிறார். உழவன் பயிர்த்தொழில் பண்ணுகிறான். தச்சன் மரவேலை பண்ணுகிறான். இத்தகைய தனித்தனி தொழில் மானுட சமுதாயத்திற்கே உரியதாம். சேர்ந்து வாழும் உயிர்வகைகள் இங்ஙனம் அததற்குரிய வேலையைப் பிரித்துச் செய்ய மாட்டாது.

மக்களுள் ஒரு சிலர்க்குச் சம்பாதிக்க இயலாது. அங்கஹீனர்கள், வயோதிகர்கள், நோய் வாய்ப்பட்டிருக்கிறவர்கள் ஆகியவர்களுக்கு ஏனையவர்கள் உணவு தேடித்தரக் கடமைப்பட்டிருக்கின்றனர். இங்ஙனம் மனிதன் அலாதியாகத் தனக்கென்றே வாழ்பவன் அல்லன். அவனுடைய வாழ்வு ஏனையவர்களுக்கும் பயன்பட்டாகவேண்டும். அப்படிப்பயன்படுவதே தானம் எனப்படுகிறது. சமுதாயத்தில் இருக்கும் ஒருவன் தன் உழைப்பினால் பிறர்க்குப்பயன்படலாம். இச்செயல் சிரம தானம் எனப்படுகிறது தான் சம்பாதித்துள்ளபொருளில் ஒரு சிறு பகுதியைப் பிறர் நலனுக்காக வென்று ஒதுக்கி வைக்கலாம். இது திரவிய தானம் அல்லது பொருள் தானம் எனப்படுகிறது. தான் பெற்றுள்ள கல்வியைக் கைம்மாறு கருதாது பிறர்க்கெடுத்துக் கொடுக்கலாம். இது வித்யாதானம் எனப்படுகிறது. ஏதேனும் ஒருவிதத்தில் தன்னுடைய ஜீவிதம் பிறர்க்குப் பயன்படும்படி வாழ்ந்திருப்பவனே நல்ல குடிமகன் ஆகிறான்.

பாடுபட்டுச் சம்பாதிக்க இயலாதவர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் ஸ்தலயாத்திரை போகிறவர்களுக்கும் பயன்படும்படி அன்னச் சத்திரம் அல்லது தர்மசாலை அமைத்து வைப்பது முற்றிலும் தேவை. பண்பட்டுள்ள மேன்மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு வரும்பொழுது ஆங்கு இருப்பவர்கள் அங்ஙனம் வந்தவர்களுக்கு விருந்தோம்புதல் என்னும் உபசாரம் பண்ணக் கடமைப்பட்டிருக்கின்றனர். விருந்தோம்புதல் தானத்தில் மேலானது. அப்படி வந்துள்ள பெருமக்களின் அறிவுத் திறனையும் அனுபவங்களையும் உள்ளூரார் நன்கு பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

'இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்' என்பது ஆன்றோர் வாக்கு. இக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டே பொருள் சம்பாதிக்கும் நல்ல நிலைமையில் உள்ள ஒவ்வொருவரும் ஏதேனும் ஒருவிதத்தில் சமுதாயத்திற்குப் பயன்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். பாடுபட இயலாதவர்கள் பணிவிடை பண்ணிச் சமுதாயத்திற்கு நல்ல தொண்டர்கள் ஆகலாம். வெறும் ஒட்டுண்ணிகளாக நல்லார்கள் ஒருபொழுதும் இருக்கமாட்டார்கள். இனி அன்ன சத்திரத்தில் கூன், குருடு, செவிடு ஆகிய அங்கஹீனர்களுக்கு அன்ன தானம் செய்யவேண்டும். உழைக்கும் பாங்குடைய ஒருவன் சோம்பித் திரிந்து யாசகனாக வருவானாகில் அவனை நல்வழியில் தூண்டவும் வேண்டும். அன்னம் படைக்கவும் வேண்டும். அன்னச் சத்திரங்களில் இன்னொரு போக்கில் மக்களுடைய பாங்கைத் திருத்தியமைக்கலாம். கோயில் குளத்துக்கோ, அன்னச் சத்திரத்துக்கோ, தெருக்களுக்கோ பணிவிடை பண்ணுகிறவர்களுக்கு நல்ல உணவு என்றும், பணிவிடை பண்ண மறுக்கிறவர்களுக்கு இடைத்தரமான உணவு என்றும் புகட்டி ஒரு சிலரைப் பொதுநலப் பணிவிடையில் ஈடுபடுத்தலாம். வெறும் சோம்பேறிகளுக்கு உணவு அளிப்பதைவிட இம்முறை மேலானது. அங்கஹீனர்

களும் அவரவர் போக்கில் ஏதேனும் ஒரு சிறு பணிவிடை பண்ணிப் பழகுதற்குச் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணித் தருவது சாலச் சிறந்தது. 'பாடுபட்டு உண்ணும் பாங்குடைய நான் இலவசமாக உணவு ஏற்றுக்கொள்ளமாட்டேன்' என்னும் மனப்பான்மையை யாசகர்களுக்கிடையில் ஊட்டுவது நல்ல சமுதாய சேவையாகும். ஒரு செயலும் செய்யமுடியாது மெலிந்திருப்பவர்களுக்கு முறையாக உணவு கொடுக்கச் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது. உழைக்க வல்லவனை உழைக்கும்படி தூண்டி அவன் தரத்திற்கேற்ற உழைப்பாளியாக அவனைத் திருத்தியமைக்கவும் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது.

உயிர் வாழ்ந்திருக்கும் மக்கள் எல்லாருக்கும் சமுதாயத்தில் உணவு உண்டு. ஆனால் யாருக்கு என்ன பாங்கில் உணவு படைத்தல் வேண்டும் என்னும் தீர்மானத்தை அன்னச் சத்திர நிர்வாகிகளே அமைத்தல் வேண்டும். இந்தப் பாங்கில் மானுட சேவை பண்ணப் பண்பட்டுள்ள மக்கள் எல்லாரும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

கேள்வி : (298) பிறப்பிலேயே ஒருவன் யோகி ஆக முடியுமா ?

பிறக்கும் குழந்தைகளனைத்தும் ஒரே பாங்குடன் பிறப்பெடுப்பதில்லை. அவர்களுடைய ஜீவிதமே அதற்குச் சான்று ஆகிறது. பிறந்தது முதற்கொண்டு சில குழந்தைகள் அழுது கொண்டேயிருக்கின்றன. பசியோ, பிணியோ, ஏற்பட்டால் மட்டும் அழுகிற குழந்தைகள் இருக்கின்றன. பசியையும், பிணியையும் சகித்துக் கொண்டு நெடுநேரம் அழாதிருக்கும் குழந்தைகளுமிருக்கின்றன. விளையாட்டுப் பருவத்தில் நன்கு ஓடியாடி விளையாடும் குழந்தைகளிருக்கின்றன. ஆற்றல் சிறிதுமில்லாது விளையாடவும் தெரியாது வெறுமனே கிடக்கும் குழந்தைகளும் இருக்கின்றன. பிறகு பள்ளிக்குப் போகும் பருவம் வருகிறபொழுது மகிழ்வுடன் அச்செயலில் ஈடுபடும் சிறுவர்கள் இருக்கிறார்கள். தயங்கிக்கொண்டு பள்ளிக்குப் போகிறவர்களிருக்கிறார்கள். பள்ளிக்குப் போக அறவே மறுக்கிறவர்களும் இருக்கிறார்கள். பள்ளியில் விரைவில் ஊக்கத்துடன் கல்வி கற்கும் சிறார்கள் இருக்கிறார்கள். சிரமப்பட்டுக் கற்கும் சிறுவர்களும் இருக்கிறார்கள். கல்வி சிறிதேனும் கற்க முடியாத கடைமாணக்கர்களும் இருக்கிறார்கள். மக்களாகப் பிறந்திருக்கிறவர்களுக்கிடையில் இத்தனைவித வித்தியாசங்கள் எங்கிருந்து எப்படி வந்தன ? பூர்வ ஜன்மத்தின் தொடர்வாக இப்பொழுது எடுத்துள்ள ஜன்மம் வந்தமைகிறது. இந்த ஜன்மத்தில் முந்தியநாளின் பயிற்சியே அடுத்த நாளுக்குப் பயன்படுவதற்கு நிகராகப் பூர்வ ஜன்மத்தில் பெற்றுள்ள பயிற்சி தொடர்ந்து அடுத்த ஜன்மத்தில் வருகிறது. இதை விட்ட குறை தொட்ட குறை என்பார்கள்.

இதே கோட்பாடு யோகிக்கும் உரியதாகிறது. யோகசாதனத்தைப் பூர்த்தி பண்ணாது மரணமடைபவனை யோகப் பிரஷ்டன் என்கின்றனர். ஒரு ஜன்மத்தில் பெற்ற யோக சாதனப் பயிற்சி அடுத்த ஜன்மத்தில் பயன்படுகிறது. அங்ஙனம் சின்னஞ்சிறு வயதிலிருந்தே யோக சாதனத்தில் ஈடுபடும் சிறுவர்களும் இடையிடையே இம்மண்ணுலகில் வந்து பிறக்கின்றனர். ஞானசம்பந்தர் பிறப்பிலேயே யோகியாக இருந்தார்.

விவேகானந்த சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் நரேந்திரன் என்பதாம். நரேந்திரனை பிறப்பிலேயே யோகியாக வாழ்ந்தவர் எனலாம். சிறுபிள்ளைகள் பூர்வ ஜன்ம வாசனைகளைத் தங்கள் விளையாட்டின்வாயிலாக வெளிப்படுத்துகின்றனர். தியானம் பண்ணுவது நரேந்திரனுக்கு விளையாட்டாக அமைந்தது. அவர் விளையாட்டாகப் பண்ணிய தியானத்தைப் பல யோகிகள் மிகச் சிரமப்பட்டும், பண்ண முடியாதவர்களாகவும் இருந்தார்கள். நெடுநேரம் நரேந்திரன் உடல் உணர்வைத் தாண்டி ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்தார். நரேந்திரன் நித்திரை போனது மற்ற சிறுவர்களுடைய நித்திரை போன்றது அன்று. அவர் ஒரு ஜோதியில் மூழ்கி யோக நித்திரையில் திளைத்திருந்தார். பிறவியிலிருந்தே அவர் ஒரு யோகி என்பதற்கு இச்செயல்கள் சான்றுகளாக வந்தமைகின்றன.

17—12—81 அன்று ஸ்ரீ சாரதாதேவியார் ஜன்ம தினமாகும்.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

17. ஆமையும் ஆத்மசாதகனும்

ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் நிலம் வாழ் முதுகெலும்புள்ள விலங்குகளாகும். இவற்றில் நீர் ஆமைகள், முதலைகள், கடற்பாம்புகள் போன்ற சில நீரில் வாழ்கின்றன. இவை குளிர் ரத்தப் பிராணிகளாகும். உடல் தோல் ஈரமற்றது. இவற்றின் தோல் செதில்களால் மூடப்பட்டுள்ளது. இச்செதில்கள் வெளித்தோலிலிருந்து தோன்றியவை. இவற்றின் கால்களில் கூர்மையான நகமுடைய விரல்கள் உள்ளன. கால்கள் நிலத்தில் ஓடுவதற்குப் பயன்படுகின்றன. இவ்விலங்குகளின் கழுத்து தெளிவாகத் தெரிவதில்லை. தலையில் வாய், கண்கள், செவிப்பறை முதலியன காணப்படுகின்றன. உடலில் முன்னங்கால்களும் பின்னங்கால்களும் காணப்படுகின்றன. இவை காற்றிலுள்ள பிராணவாயுவை நுரையீரல் மூலமாகச் சுவாசிக்கின்றன. ஊர்வன இனத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான பிராணிகள் முட்டையிடும் தன்மையுள்ளவை. சில குட்டி போடும் தன்மையுள்ளவை. ஓணன், பல்லி, உடும்பு, பாம்பு, முதலை, ஆமை, முதலியன ஊர்வன இனத்தைச் சேர்ந்த விலங்குகளாகும்.

ஊர்வன இனத்தைச் சேர்ந்த ஆமைக்கு ஒரு தலையும் நான்கு கால்களும் உண்டு. இதன் முதுகுப் பகுதி உறுதியான ஓடாலாகியது. தனக்கு ஏதேனும் ஆபத்து வருகிறது என்று உணர்ந்தால் ஆமை தன் நான்குகால்கள், தலை ஆகிய ஐந்து அவயவங்களையும் ஓட்டுக்குள் இழுத்துக்கொள்ளும். பிறகு எவ்வளவுதான் நாம் முயன்றாலும் அது தன் அவயவங்களை வெளியில் நீட்டாது. அதுபோன்று நாமும் நம் மனத்தைப் பொறிவாயில்களில் போய்ப் பாழ் படாமல் நம்மிடத்திலேயே இருத்திவைக்கப் பழகவேண்டும். இப்பயிற்சியே ராஜ யோகத்தில் பிரத்தியாஹாரம் என அழைக்கப்படுகிறது. பிரத்தியாஹாரம் பழகியவனுக்கே தியானம் நன்கு கைகூடுகிறது.

நல்லறிவில் நிலைத்திருப்பவன் யார் என்பது கேள்வி. இதற்குப் பகவான் தரும் பதிலாவது: "ஆமை தன் அவயவங்களை அடக்கிக்கொள்வது போன்று பொருள்களிடத்திருந்து பொறிகளை முழுதும் உள்ளிழுக்க வல்லவனுக்கே நிறைஞானம் நிலைபெறுகிறது."—கீதை II-58.

பொறிகள் பொருள்கள்மீது செல்வதைத் தடுத்து வைப்பவனுக்குப் பொருள்களின் அனுபவம் இல்லை. ஆனால் பொருள்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைமட்டும் மனதில் இருந்துகொண்டே இருக்கும். பொறிகள் பொருட்களோடு தொடர்பு வைப்பதால் துவக்கத்தில் சிறிதளவு இன்பம் கிடைப்பது போன்று தோன்றுகிறது. ஆனால் அதன்பின் பெருமளவு துன்பம் அனுபவிக்க வேண்டி வருகிறது. சாதகனிடத்தில் இந்த நல்லறிவு உதயமானவுடன் அவன் மனதிலுள்ள ஆசையும் அழிகிறது. அதுவரை சாதகன் மிகப் பொறுமையுடன் புலனடக்கம் பழகவேண்டும். புலனடக்கம் பழகியவனுக்கே இவ்வுலகம் சொர்க்க பூமியாகக் காட்சி கொடுக்கும்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து

என்று இதனையே வள்ளுவர் இயம்புகின்றார்.

நன்னெறியில் உறுதியாக நிலைபெற்றிருக்க விரும்பும் ஒரு நல்லறிஞனுடைய மனதையும் கொந்தளிப்புள்ள இந்திரியங்கள் தத்தளிக்கச் செய்துவிடுகின்றன. ஆகவே ஆத்மசாதகனொருவன் புலனடக்கம் பழகுவதில் விழிப்புடனும் விடாப்பிடியுடனும் இருக்கவேண்டும். உள்ளம் இடையறாது இறைவனுடைய திருநாமத்தையே சிந்தித்துக்கொண்டிருக்குமானால் புலனடக்கம் எவ்விதச் சிரமமுமின்றி இயல்பாகவே வந்து வாய்க்கின்றது. கட்டுக்கடங்காத மனதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குக் கடவுள் நாமம் உற்றதுணையாகிறது. கரைகாணாத் துன்பக்கடலில் கிடந்து உழல்பவர்க்குஇறைவனதுதிருநாமம் மரக்கலம் போன்று உதவி முக்தியாம் கரை சேர்க்கிறது. இறைவனருளால் நாமும் நம் பொறிகளை அடக்கியாள வல்லவர்களாவோமாக.

"அப்பியாசத்தை இடையறாது செய்து வந்தால் மன அடக்கம் உண்டாகிறது. மனவடக்கம் பழகியவன் ஆமைக்கு ஒப்பாகிறான்." —ஸ்ரீராமகிருஷ்ணர்

இந்திய முன்னேற்றப் பணிக்கான திட்டம்

(1895 ஆம் ஆண்டில் சிகாகோவிலிருந்து நீதிமன்றத் தலைவர் திரு. சுப்ரமணிய அய்யருக்குச் சுவாமி விவேகானந்தர் எழுதிய கடிதம்)

நிறைந்த அன்பும், நன்றியுணர்வும், நம்பிக்கையும் கூடிய உள்ளத்துடன் உங்களுக்கு இக் கடிதத்தை எழுதுகின்றேன். என் வாழ்க்கையில் உறுதியான கொள்கையுடையவர்கள் சிலரைச் சந்தித்திருக்கிறேன். அவர்களுள் நீங்களும் ஒருவர் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அன்பும் அறிவும் சேர்ந்தே உங்களிடத்து அமைந்திருப்பன போற்றத் தக்கன. எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்த கொள்கைகளை அனுபவத்துக்குக் கொண்டு வரும் செயல் வீரராக நீங்கள் இருக்கிறீர்கள். ஆகையால் நான் உங்களிடம் என்னுடைய சில கருத்துக்களை ஒப்படைக்கிறேன்.

இந்தியாவில் நல்லமுறையில் பணி ஆரம்பித்துள்ளது. அது சீராகக் கொண்டுசெலுத்தப் படுவதோடு, மிக்க பலத்துடன் முன்னேற்றப் படவேண்டும். இப்பொழுதே அதற்கான வேலைகளைச் செய்யவேண்டும். நான் தீர ஆலோசனை செய்து பின்வரும் திட்டத்தில் என் மனதை ஒருமுகப்படுத்தி இருக்கிறேன். முதலாவதாகச் சென்னையில் ஆன்மீக ஆராய்ச்சிக்குரிய கல்லூரி ஒன்றை அமைக்கவேண்டும். அதைப் படிப்படியாக விரிவடையச் செய்ய வேண்டும். வேதங்களிலும் வேதங்களை விரித்து எழுதியுள்ள பாஷ்யங்களிலும் இளைஞர்களுக்கு முழு அறிவைத் தரவேண்டும். ஆங்கிலத்திலும், தாய்மொழியிலும் இரு பத்திரிகைகள் கல்லூரியின் சார்பில் ஆரம்பிக்க வேண்டும்.

இது செய்ய வேண்டிய பணியில் முதல் கட்டமாகும். இச்சிறு செயலிலிருந்து பெரிய செயல்கள் உருவாக ஆரம்பிக்கும். பண்டைக் கால வாழ்க்கை முறையையும் நவீன வாழ்க்கை முறையையும் போற்றுகின்ற ஒரு சிறந்த வாழ்க்கை முறையைச் சென்னை மக்கள் இப்பொழுது பின்பற்ற ஆரம்பித்துள்ளார்கள்.

சமுதாயத்திலுள்ள சீர்கேடுகளை நன்கு ஆராய்ந்து சீர்திருத்தி அமைக்கவேண்டுமென்று இந்தியாவிலுள்ள கல்விமான்கள் கருதுகிறார்கள். நான் அக்கருத்தை முற்றும் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் எப்படிச் செய்யவேண்டும் என்பதுதான் கேள்வி. சீர்திருத்தக்காரர்களுடைய அழிவை விளைவிக்கும் திட்டங்கள் நிறைவேறாமல் போயின. என் திட்டம் வருமாறு: சென்ற காலத்தில் நாம் நன்றாகவே செயல்பட்டுள்ளோம். கேடு எதையும் செய்துவிடவில்லை. நம் சமூகம் நல்ல சமூகமே. அதை இன்னும் நல்ல சமூகமாக்கவே நான் விரும்புகின்றேன். தவறிலிருந்து உண்மைக்கோ, கேட்டிலிருந்து நன்மைக்கோ நாம் சமுதாயத்தை எடுத்துச்செல்லவில்லை. உண்மையினின்று மேலானதோர் உண்மைக்கோ, நலத்தினின்று மேலானதொரு நன்மைக்கோ அதனின்றும் மிக உயர்ந்த நன்மைக்கோ நாம் விரைந்து போகவேண்டும். என் நாட்டு மக்களுக்கு நான் சொல்வதாவது: அவர்கள் இதுவரையிலும் நற்பணிகளே ஆற்றி வந்துள்ளார்கள். இன்னும் சிறந்த பணியை அவர்கள் செய்வதற்குரிய காலம் இதுவாகும்.

இப்பொழுது குலத்தைப்பற்றி எடுத்துக் கொள்வோம். சம்ஸ்கிருதத்தில் குலத்தை ஜாதி என்று குறிப்பிடுகின்றோம். ஜாதி என்பது இனத்தைக் குறிக்கிறது. சிருஷ்டி ஏற்படும்பொழுது வெவ்வேறு இனங்களும் உண்டாகின்றன. சிருஷ்டி என்றாலே வேற்றுமை என்பதுதான் பொருள். "நான் ஒருவன்; பல பொருள்களாக ஆகியிருக்கின்றேன்"—இக்கருத்து வேதங்களில் பல இடங்களில் வருகின்றது. சிருஷ்டிக்கு முன்பு ஒரு பொருள்தான் இருந்தது. அது பலவாக ஆனதே சிருஷ்டியாகும். ஒரு இனம் வீரியத்தோடு செயல்படுகின்ற வரையிலும், அது பல வேற்றுமைகளை உண்டுபண்ணிக் கொண்டேயிருக்கும். வேற்றுமைகளாக விரிவடைவதைத் தடுத்து நிறுத்தினால் அவ்வினம் அழிந்தே போகும். ஒரு ஜீவன் தன்னுடைய இயல்பை அல்லது குணத்தை அல்லது குலத்தை விளக்குவதே ஜாதி என்று ஆரம்பத்

தில் கருதி வந்தார்கள். பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஜாதி என்பதற்கு இது தான் பொருளாக இருந்தது. சமீபகாலத்தில் வந்த நூல்களில் சமபந்திபோஜனம் தடுக்கப் படவில்லை; கலப்பு மணமும் தடுக்கப்படவில்லை. இந்தியாவினுடைய வீழ்ச்சிக்குக்காரணம் என்ன என்பதைப் பார்க்கும்போது ஜாதி என்பதற்கு இருந்த இந்தக் கருத்தை மறந்ததேயாகும். குலநாசம் ஏற்படுமானல் உலகமே அழிந்துபோய்விடும் என்று கீதை பகர்கிறது. இப்பொழுது காணப்படும் வேற்றுமைகள் அகன்றுபோனல் உலகம் அழிந்து விடும்போல் இருக்கிறதன்றே? இப்பொழுதுள்ள ஜாதி உண்மையான ஜாதி அன்று. இந்த ஜாதி சமுதாய வளர்ச்சிக்குப் பெருந் தடையாக இருக்கிறது. இது ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள இயல்பைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்றது. வாழ்க்கைமயமாகவோ, பாரம்பரியமாகவோ, உரிமையாகவோ வடிவெடுத்தவொன்று நம்முடைய பூரண வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துவிடுகின்றது. எப்பொழுதெல்லாம் ஒருநாடு பலதுறைகளில் முன்னேறுவதை நிறுத்தி விடுகின்றதோ அப்பொழுது அது அழிந்துவிடுகின்றது. ஆகையால் என் தாய்நாட்டு மக்களே, இந்தியாவின் ஆத்மீக இயல்பு வளர்வதைத் தடுத்து நீங்கள் அழித்துவிட்டதால் இந்தியா வீழ்ச்சியடைந்தது என்பதை உங்களுக்குச் சொல்கின்றேன். ஆட்சி செலுத்துபவர்களும், வேத உரிமை கொண்டாடுபவர்களும் இந்திய இயல்பு வளரத் தடையாக இருக்கிறர்கள். அவர்கள் இந்திய இயல்பை வளர்ப்பவர்களாக இல்லை. இந்தியப் பண்பை அதன்போக்கில் வளர்ச்சியடைய விட்டுவிடுங்கள். இப்பண்பு வளர்ச்சிக்குத் தடையாகவிருக்கும் ஒவ்வொன்றையும் தகர்த்தெறியுங்கள். அப்பொழுதுதான் இந்தியா எழுச்சியடையும். ஐரோப்பா நாட்டைப் பாருங்கள். அது தன் இயல்பை வளர்ப்பதற்குத் தடையாகவிருந்த ஒவ்வொன்றையும் தகர்த்தெறிந்தது. அது தன் இயல்பை வளர்ப்பதில் சுதந்திரம் பெற்றது. ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தன் இயல்பை வளர்ப்பதற்குச் சுதந்திரம் பெற்றிருந்தான். அதனல் அது எழுச்சியடைந்தது. அமெரிக்காவில் ஒவ்வொருவரும் தங்கள் இயல்பை வளர்க்க வாய்ப்புப் பெற்றிருக்கிறர்கள். ஆகையால் அவர்கள் சிறப்புற்று விளங்குகிறர்கள். ஒவ்வொரு ஜீவனும் எத்தகைய இயல்புடன் பிறந்திருக்கிறது என்பதை ஜோதிடம் கணிப்பதின் மூலம் இந்தியர்கள் அறிந்து வருகிறர்கள். குழந்தை பிறந்ததும் அதன் இயல்பை அறிந்து அதன் இயல்புக்கேற்ப வளர்வதற்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டும். அப்படி வளர்ச்சியடைய அனுமதிப்பது சமத்துவமின்மைக்கு அனுமதி தந்ததாகாது. அது ஒவ்வொருவருடைய சிறப்பியல்பையும் வளர்ப்பதற்குத் துணைபுரிந்ததாகிறது.

இதுதான் என்னுடைய திட்டம். இந்துக்களாகிய நீங்கள் பழங்கால வாழ்க்கை முறை எதையும் விட்டுவிட வேண்டாம். நம் முன்னைய முனிவர்கள் வகுத்த திட்டத்தைப் பின்பற்றிச் செல்வோமாக. பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டு வாழ்ந்திருந்ததன் விளைவாக ஏற்பட்ட தமோகுண விருத்தியை உதறித்தள்ள வேண்டும். முகமதிய மன்னர்களின் கொடுங்கோலாட்சியின்போது நம் முன்னேற்றம் தடைப்பட்டது. முகலாயர் ஆட்சி காலத்தில் முன்னேற்றத்தைப் பற்றிய பிரச்சினை இல்லை. அப்பொழுது உயிர் வாழ்வதா? மடிந்து போவதா? என்ற பிரச்னைதான் இந்துக்களுக்கு இருந்தது. இப்பொழுது நாம் அத்தகைய நெருக்கடியில் இல்லை. நாம் முன்னேறியாக வேண்டும். நமக்கேற்ற மார்க்கத்தில் நாம் முன்னேற முயலவேண்டும். மதமாற்றம் செய்துகொண்டிருப்பவர்களும், பாதிரிமார்களும் காட்டுகின்ற அழிவுப் பாதையில் நாம் செல்லக்கூடாது. கட்டடம் கட்டி முடிப்பதற்கு முன்பு ஆரம்ப நிலையில் பார்த்தால் அது கவர்ச்சிகரமாக இருக்காது. அதுபோன்று நம்முடைய சமயப்பணி ஆரம்பநிலையில் இருக்கிறது. நாம் அன்னிய ஆட்சியினல் அமுக்கப்பட்டிருந்தபொழுது பல நூற்றாண்டுகள் நம்முடைய பணியை நிறுத்தவேண்டியதாயிற்று. இப்பொழுது நம் பணியைப் பூர்த்தி செய்வோம். அதன்பிறகு எல்லாம் மிகவும் ரம்மியமாக

இருக்கும். நம்பணியைப் பூர்த்தி செய்வது தான் என்னுடைய திட்டம். பூர்த்தி செய்வோம் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு நாடும் முன்னேறுவதற்கு மார்க்கம் இருக்கிறது. நம்நாடு முன்னேறுவதற்குச் சமயத்துறைதான் பொருந்தும். சமயத்தை உறுதிப்படுத்துவீர்களாக! சமயத்தை அடிப்படையாகக் கொண்டு மற்ற எல்லாத் துறைகளிலும் இந்தியா முன்னேற வேண்டும். என்னுடைய சிந்தனையின் ஒருபகுதியை வெளியிட்டுள்ளேன். காலம் வரும்பொழுது என் மனதிலுள்ள எல்லாவற்றையும் செயலுக்குக் கொண்டுவரமுடியும் என்று நம்புகின்றேன். இப்பொழுது அமெரிக்காவிலும் எனக்குப் பணி இருப்பதாக உணர்கின்றேன். இந்த நாட்டிலிருந்துதான் நமக்கு வேண்டிய உதவி கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கிறேன். ஆனால் நான் இதுவரையிலும் என்னுடைய கருத்துக்களைப் பரப்புவதைத்தவிர வேறொன்றும் செய்யவில்லை. இந்தியாவில் இதுபோன்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

நான் இந்தியாவிற்கு எப்பொழுது திரும்புவேன் என்று சொல்ல முடியாது. இறைவனுடைய திட்டப்படி நான் நடந்துகொள்ள ஆயத்தமாக இருக்கின்றேன். நான் இறைவனுடைய கையில் கருவியாகமட்டும் இருக்கின்றேன்.

"பணம் தேடி அலையும் இவ்வுலகில் விலை மதிக்க முடியாத மாணிக்கம் ஒன்று எனக்குக் கிடைத்துள்ளது. நீதான் அம்மாணிக்கம் ஆவாய். நான் என்னை உன்னிடத்தில் அர்ப்பணம் செய்துவிட்டேன். என் அன்புக்குப் பாத்திரமான ஒரு பொருளைத் தேடி அலைந்ததில் நீதான் என் அன்புக்குரியவன் என்பதை அறிந்தேன். என்னை நான் உனக்கே அர்ப்பணித்து விட்டேன்." இங்ஙனம் யஜுர் வேத சம்ஹிதை பகர்கிறது. யஜுர் வேத சம்ஹிதையில் கூறியுள்ளபடி நம்மை நாம் தெய்வத்திடம் ஒப்படைத்து விடுவோமாக! யாண்டும் உங்கள் அனைவருக்கும் இறைவன் அருள் புரிவாராக!

இங்ஙனம்

விவேகானந்த

சந்நியாச வாழ்வுக்கு உள்ளத் திட்பமும், தன்னம்பிக்கையும் அவசியமானவை. "தன்னைத்தானே உயர்த்திக்கொள்ள வேண்டும். தன்னைத்தானே தாழ்த்திக்கொள்ளக் கூடாது. தனக்குத்தானே சுற்றமும், தனக்குத்தானே பகைமையுமாகின்றான்." இது கீதையின் கோட்பாடு. ஆத்மனைத் தவிர வேறு சிறந்த நண்பன் ஒருவனுக்கு இல்லை. ஆத்மாதான் இவ்வுலகத்தில் ஒருவனைப் பாதுகாக்கிறது. ஆத்மசொருபத்தினிடத்து நம்மை அர்ப்பணம் செய்துவிட வேண்டும். வாழ்வின் லட்சியம் ஆத்மஞானம் பெறுவதே ஆகும்.

கங்கை பிரமவாரி என்று சொல்லப்படுகிறது. சங்கரர் உட்பட எத்தனையோ மகான்கள் கங்கையைப் போற்றி இருக்கின்றார்கள். புண்ணிய க்ஷேத்திரங்கள் பல கங்கைக் கரையில் அமைந்திருக்கின்றன.

கங்கையைப் போன்று காசியும் புனித இடமாகிறது. மண்ணுலகில் காசியைப் போன்ற புனித இடம் வேறு ஒன்றும் இல்லை. எத்தனையோ மஹான்கள் உடல் உணர்வைக் கடந்து பாரமார்த்திகப் பெருநிலையில் இருந்தவர்கள் காசி என்னும் இப்புனித க்ஷேத்திரத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் மூலம் காசியினுடைய அருள்நிலை ஓங்குவதாயிற்று.

புண்ணிய க்ஷேத்திரங்களையும், புண்ணிய நதிகளையும் அருளை வளர்ப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இளைஞர்கள் ஊக்கமே வடிவெடுத்தவர்களாக இருக்கவேண்டும். தீவிரமாக ஆத்மசாதனை செய்யவேண்டும். சுறுசுறுப்பான உழவுமாடு வாலைத் தொட்டவுடன் குதிக்க ஆரம்பிக்கும். அதுபோன்று இளைஞர்கள் சுறுசுறுப்பே வடிவெடுத்தவர்களாக இருக்கவேண்டும். —சுவாமி துரியானந்தர்

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

3. மறதியும் நினைவும்

கம்பன் காட்டும் இரண்டாவது உவமையும் மிகவும் சூட்சுமமானதாகவே அமைந்திருக்கின்றது :

" மறந்தவர் அறிந்து உணர்வு வந்தனர்கொல் [என்கோ ?"

ஒரு கருத்தை அறிந்து பின்னர் மறந்தவர்கள் மீண்டும் அக்கருத்தை நினைவில் உணர்ந்தால் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்களோ அந்த மகிழ்ச்சியை உவமையாக உரைக்கலாமோ என்று கம்பன் எண்ணிப் பார்க்கிறான்.

சொற்பொழிவாளன் ஒருவன் தான் பேச வேண்டிய கருத்துக்களை மனத்தில் நினைத்துப் பார்த்துக்கொண்டிருக்கின்றான். அற்புதமான கருத்து ஒன்று அவன் நினைவு வானில் மின்னல் எனத் தோன்றுகின்றது. அழகான குழந்தையை ஈன்றெடுத்த தாய்போன்று மகிழ்ச்சிக் கடலில் திளைக்கின்றான். அந்தக் கருத்தை எண்ணி எண்ணிப் பார்த்துக்கொண்டே சொற்பொழிவு அரங்கத்திற்குச் செல்கின்றான். யார் யாரையோ சந்திக்கின்றான். ஏதேதோ பேச்சுக்கள்; அவன் மனத்தில் தோன்றிய அவ் இனிய கருத்தோவியம் சட்டென்று அவன் மனத்திரையினின்றும் மறைந்து போய்விடுகின்றது. மீண்டும் நினைவிற்குக் கொண்டுவர அவன் படாதபாடு படுகின்றான். இழக்கக் கூடாத ஒன்றை இழந்துவிட்டதாக அவன் மனம் குமுறுகின்றான். மின்னலெனத் தோன்றியது மின்னல் போன்று மறைந்துவிட்டதே என்று மனமுடைந்து போகின்றான். இனியும் அந்தக் கருத்துத் தன் நினைவுக்கு வருமா என்று ஏங்குகின்றான். சுற்றியிருக்கும் ஆட்களையும், பேச்சு மேடையையும் வெறித்து வெறித்துப் பார்க்கின்றான். சொற்பொழிவு ஆற்றும் உற்சாகமே குறைந்துபோய்விடுகின்றது. அரக்கத்தனமான மறதி தன் மனத்தைச் சிறைப் பிடித்துவிட்டதாகவே நினைக்கின்றான். உடல் சோர்ந்து, உள்ளம் தளர்ந்து, உணர்வு மங்கிய நிலையிலிருந்த அவன் மனத்திரையில் பளிரென்று ஒரு ஒளி தோன்றுகின்றது. இதோ அந்தக் கருத்து மீண்டும் நினைவுக்கு வந்துவிட்டது. சுற்றுப்புறக் கட்டுப்பாடுகளையெல்லாம் மீறி மகிழ்ச்சி வெள்ளத்தில் குதிக்கின்றான். கை நழுவிய பொருள் திரும்பக் கிடைத்தது போன்ற களிப்பு. அந்தக் களிப்பின் வேகத்தில் கண்களில் நீர் பெருகுகின்றது. உடல் சுறுசுறுப்பாகின்றது. உள்ளம் உவகை கொள்கின்றது. உணர்வு தெளிவடைகின்றது. புது மனிதனாக, உற்சாகத்துடன் தான் பேசவேண்டிய தருணத்திற்காகக் காத்திருக்கின்றான். இத்தகைய மகிழ்ச்சியைத்தான் மறந்தவர் அறிந்து உணர்வு வந்தவர்கள் பெற்ற மகிழ்ச்சியென்று கம்பன் எடுத்துக்கொண்டு, அதனைச் சீதை பெற்ற மகிழ்ச்சிக்கு உவமையாக்க முடியுமா என்று முயல்கின்றான்போலும்!

இந்த அனுபவத்தைத் தேர்வுக்குப் போகும் மாணவர்களும், விரிவுரையாற்ற வகுப்பிற்குச் செல்லும் ஆசிரியர்களும் பெற்றிருப்பார்கள்.

கம்பனே தான் காவியம் எழுதியபோது இத்தகைய மகிழ்ச்சியை அனுபவித்திருக்கக் கூடும். ஒரு பகுதியை எழுதிக்கொண்டிருந்த போது வேறொரு காண்டத்தின் பகுதி ஒன்றினை விவரிக்க அற்புதமான கருத்து ஒன்று அவன் மனத்தில் தோன்றியிருக்கும். அந்தக் கருத்தையே சிறிதுநேரம் மனத்தில் இருத்தி, மகிழ்ச்சியுற்று, தக்க சந்தர்ப்பத்தில் அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மனத்தில் ஒரு மூலையில் அதனை வைத்துவிட்டுக் காவியத்தைத் தொடர்ந்து எழுத ஆரம்பித்திருப்பான். பின்னர், அக்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் காவியத்தை எழுதிக்கொண்டிருக்கும் போது அந்தக்கருத்தையும் சொல்லிவிட வேண்டும் என்ற ஆர்வத்துடன் அதனை நினைவுக்குக் கொண்டுவர முயன்றிருப்பான். ஆனால் அது அவன் நினைவிலிருந்து முற்றிலும் விடுபட்டு மறந்தே போயிருக்கும். அதனால் காப்பிய ஓட்டமே தடைப்பட்டிருக்கும். ஆகா! அரிதிற்கிடைத்த செல்வத்தை இழந்துவிட்டோமே என்று அவன் மனம் பரிதவித்திருக்கும். என்னென்ன முயற்சிகளையெல்லாம் செய்திருப்பான் அக்கருத்தை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்துவிடவேண்டுமென்று! ஊஹூம்! ஒன்றும் பல

னில்லை. நீண்ட நேரம் இந்த வேதனையில் கழிகின்றது; ஏன்! சில நாட்களேகூடக் கழிந்து போயிருக்கலாம். தற்செயலாக அவன் பார்வை ஏதோ ஒன்றின்மேல் படுகின்றது. அவ்வளவுதான்! மறந்துபோன அக்கருத்து மேகத்திரையினின்றும் வெளிப்பட்ட நிலவு போன்று அவன் நினைவுத் திரையில் தோன்று கின்றது; துள்ளிக் குதிக்கின்றான் கவிஞன். அந்தச் சமயம் தான் பெற்ற களிப்பைக் கம் பன் நினைத்துப் பார்க்கின்றான். அந்த மகிழ்ச் சியை எழுத்தால் வருணிக்க முடியாதென் பதை அவன் உணர்வான். ஒவ்வொரு சிந் தனையாளன் வாழ்விலும் இத்தகைய அனுப வம் ஏற்பட்டிருக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும். எனவே இந்த மகிழ்ச்சியையே, அனுமன் காட்டிய ஆழியைக் கண்ட அசோக வனச் சீதையும் அடைந்தாள் என்று சொல் வதில் என்ன தவறிருக்க முடியும் என்று எண்ணிப்பார்க்கின்றான் கம்பன்.

4. பிரிந்த உயிர் திரும்பியது

இனி, கம்பனின் அடுத்த உவமையைப் பார்ப்போம்:

"துறந்த உயிர் வந்து இடை தொடர்ந்தது கொல் [என்கோ?"

மனிதன் உயிர் பிரிந்த பின்னர் உடல் மட் டும் எஞ்சியிருக்கின்றது. சிறிது நேரத்தில் அந்த உயிர் மீண்டும் அந்த உடம்பினுள் புகுந்து விடுகின்றது என்று வைத்துக்கொள் வோம். அப்போது அந்த மனிதன் அடையும் இன்பத்தைச் சொற்களால் விவரிக்க முடி யுமோ? 'உயிர் போகப்போகிறது' என்ற நிலை யில் மனித மனம் என்ன என்னவெல்லாம் நினைத்து ஏங்குகின்றது! மனிதனிடமிருந்து எது பிரிந்தாலும் அவன் வருத்தமுறவே செய் வான். அவனுக்குத் தன் உயிரனைய பொருள் கள் பிரிந்தாலும் மீண்டும் முயன்று பெற்றுக் கொள்ளலாம் என்ற சமாதானம் உண்டு. ஆனல் திரும்பிவராத உயிரே பிரிந்தால் என்ன செய்ய முடியும்? அந்த வேதனையில் அவன் துடிக்கத் துடிக்க உயிர் பிரிந்துபோய் விடுகின்றது. தூக்குத் தண்டனை அளிக்கப் பட்ட கைதியின் நிலை இது தானே! வான்மீகி ராமாயணத்தில், ராவணன் இரண்டு மாதங் கள் தவணை கொடுத்தபோது சீதை தன்னை மரணதண்டனை பெற்ற கைதியின் நிலைக்கு ஒப்பிட்டுப் பேசுவாள். தூக்கு மரத்தில் ஏற் றப்படும் தறுவாயில் அக்கைதியின் மனம் என்ன பாடுபடும்! தண்டனை நிறைவேறிய பின் அக்கைதிக்கு உயிர் திரும்பி வந்துவிட் டாலோ, அவன் அடையும் ஆனந்தத்தை அள விட்டுக் கூற முடியுமா என்ன? மோதிரம் கண்ட சீதையின் மகிழ்ச்சியை இதற்கு ஒப் பிட்டுப் பார்க்கலாமா என்று முயல்கின் றான் கவிஞன். சற்று நேரத்திற்கு முன் சாவின் வாசற்படியில் நின்றவள்தான் சீதை. ராம நாமம் அவளைத் தடுத்து நிறுத்தியது. இப் போது ராமன் பெயர் தாங்கிய மோதிரம் அவளுக்குப் புத்துயிரளிக்கின்றது. எனவே சீதையின் நிலையை விளக்க இந்த உவமை பொருத்தமாகவே இருக்கின்றது.

இந்த மூன்று உவமைகளினாலும் கம்பன் திருப்தி அடையவில்லை என்பதைப் பாடலின் நான்காவது வரி தெரிவிக்கின்றது. சீதையின் மகிழ்ச்சியை இப்படியெல்லாம் வருணித்துப் பார்க்கலாமா என்று முயல்கின்றான் கவிஞன். ஆங்கிலத்தில் "Thinking aloud" என்று சொல்கின்றோமே, அதுபோன்று கம்பன், "இந்த உவமைகளைச் சொல்லிப் பார்ப் போமா?" என்று கவிதையிலேயே தனக்குள் பேசிக்கொள்கின்றான். இறுதியில் "இது உவமிக்க முடியாத மகிழ்ச்சி நிலையாக அல் லவா இருக்கிறது!" என்று வியப்படைகின் றான். கவி தன்னுடைய தோல்வியை நம் மோடு பகிர்ந்து கொள்ளும் முயற்சி இது. ஆனல், அதில் தானே அவனுடைய வெற் றியே அமைந்திருக்கின்றது!

5. இழந்து பெற்ற மணியும் செல்வமும்

அனுமன் காட்டிய ஆழியைக்கண்ட அண் டர் நாயகன் தேவி அடைந்த ஆனந்தத்தை நுணுக்கமான தத்துவ உவமைகளோடு ஒப் பிட்டுக்காட்டிய கம்பன் அவ்வளவு சூட்சும மான உவமைகளை நன்கு புரிந்துகொள்ள முடி யாதவர்களுக்காக, உலக வழக்கில் அமைந் துள்ள ஸ்தூலமான உவமைகளால் அதனை விளக்க முற்படுகின்றான்.

"இழந்த மணி புற்று அரவு எதிர்ந்தது எனல் ஆனுள்"

என்பது ஓர் உவமையாகும்.

நம்நாட்டில் வழி வழியாக வந்த ஒரு கதை

உண்டு. நாகப்பாம்பினிடம் ஒரு ரத்தினம் இருக்கும். இரவில் இரைதேடும்பொழுது நாகம் அந்த மணியை உமிழ்ந்து ஓரிடத்தில் வைத்தால் அந்த மணியின் ஒளி அது இரை தேடுவதற்குப் போதுமான வெளிச்சத்தைக் கொடுக்கும். இரை தேடி முடிந்தபின் அந்த மணியைக் கவ்வித் தன் வாயினுள் வைத்துக் கொண்டு புற்றுக்குப் போய்விடும் நாகம். இந்த நாகரத்தினத்தைப் பெற விரும்புவோர் காடுகளில் நாகம் இவ்வாறு இரைதேடும் சந்தர்ப்பம் பார்த்து ரத்தினத்தைச் சாணத்தால் மூடி எடுத்துக்கொண்டு ஓடிவிடுவார்கள். ரத்தினத்தின் ஒளி நீங்கி இருள் சூழ்ந்துவிடுமாதலால் நாகத்திற்குத் தடுமாற்றம் ஏற்படும். இந்த ரத்தினம் அல்லது மணி நாகத்தின் உயிர்போன்றது. அதனை இழப்பதும் உயிர் இழப்பதும் நாகத்திற்கு ஒன்றுதான். அப்படி இழந்துபோன மணிக்காக ஏங்கி வாடிய நாகம் தன் புற்றிற்குள்ளேயே அந்த மணி இருக்கக்கண்டால் எவ்வளவு மகிழ்ச்சியடையும்! அந்த மகிழ்ச்சியை நாம் கற்பனை செய்து பார்த்து உணரமுடியுமானால் மோதிரம் கண்ட சீதையின் மகிழ்ச்சியையும் நம்மால் உணரமுடியும். மணியை இழந்து பெற்ற நாகமாகச் சீதை உவமிக்கப்பட்டதில் வேறொரு கருத்தும் உண்டு. அரக்கர் அழிவுக்குத் தோன்றியவள்தானே சீதை. எனவே அரக்கரை ஒழிக்கும் ஆலகால விஷமாக அவளைக் கருத இடமுண்டு. ராவணனே சீதையை,

"நஞ்சு தோய்ந்த அமுதம்"

என்று குறிப்பிடுவான். மண்டோதரி சீதையைப்பற்றிப் பேசும்போது,

"சீதை என்ற அமுதால் செய்த நஞ்சு"

என்பாள். இவர்களுக்கெல்லாம் ஒருபடி மேலே சென்று கும்பகர்ணன் சீதையைப் பற்றி,

"திட்டியின் விஷம் அன்ன கற்பின் செல்வி"

என்று குறிப்பிடுகின்றான். சிலவகைப் பாம்புகளின் பார்வையே விஷமாகும். அது போன்றதே சீதையின் கற்பும். கற்புக்கு ஊறுவிளைவிக்கும் நோக்கத்துடன் யாராவது சீதாதேவியைப் பார்த்தால், அவர்களைத் தன் பார்வையாலேயே அழித்துவிடக்கூடிய வலிமையுடையவள் சீதை என்பது கூற்றையும் ஆடல் கொண்ட கும்பகர்ணன் கருத்தாகும்.

மோதிரம் கண்ட சீதையின் மகிழ்ச்சி நிலையைக் கம்பன் இன்னும் சில உவமைகளின் மூலம் விளக்க முயல்கின்றான்.

"பரம்பரைச் செல்வந்தன் ஒருவன் தன் செல்வத்தை இழந்து பின்னர் மீண்டும் அச்செல்வம் வரப்பெற்றால் எவ்வளவு மகிழ்ச்சியடைவானோ,

நீண்டகாலம் குழந்தைப் பேற்றிற்காக ஏங்கிய இல்லக்கிழத்திக்கு மகப்பேறு கிடைக்கப் பெற்றால் அவள் எவ்வளவு ஆனந்தமடைவாளோ,

கண்பார்வை இழந்து வருந்திய ஒருவனுக்குக் கண்பார்வை மீண்டும் கிடைத்தால் அவன் எவ்வளவு களிப்படைவானோ,"

அதுபோன்றே மோதிரம் கண்ட சீதையும் களிப்படைந்தாள் என்கின்றான் கவிஞன்.

6. ரசவாத வித்தை

மோதிரத்தை அனுமன் கையில் கண்ட சீதையின் நிலையை இரண்டு பாடல்களிலும் அதனைக் கையில் வாங்கிக்கொண்ட சீதையின் உள்ளமும் உடலும் அடைந்த உன்னதமான உணர்வுகளை இரண்டு கவிகளிலும், சீதா பிராட்டியிடம் இவ்வளவு மாற்றங்களை ஏற்படுத்திய மோதிரத்தை இரண்டு பாடல்களிலும் கம்பன் வர்ணிக்கின்றான்.

அரக்கர் சிறையில் அகமும் புறமும் அல்லல்பட்டுச் சோர்ந்திருந்த சீதாபிராட்டியின் மனத்திலும் உடலிலும் மகிழ்ச்சியும் பூரிப்பும் ஏற்படுத்திய மோதிரத்தை ரசவாதம் செய்யும் குளிகையுடன் ஒப்பிடுகின்றான் கம்பன். பித்தளைபோன்ற உலோகங்களைத் தங்கமாக்குவது ரசக்குளிகை. மருண்ட மனத்திற்கு மகிழ்வையும், சோர்ந்த உடலுக்குத் தெம்பையும் ஊட்டிய மோதிரத்தை ரசக்குளிகையுடன் ஒப்பிடுவது பொருத்தமானதுதான். அத்துடன் முடிக்கவில்லை கம்பன். இன்னும் பல உவமைகளைச் சொல்லி மோதிரத்தின் சிறப்பினையும், அது ஏற்படுத்திய அற்புதத்தையும் நாம் உணருமாறு செய்கின்றான் கவிஞன். பசியில் வாடிய வறிஞனுக்குக் கிடைத்த அமுதம், இருந்தோம்பி இல்வாழும் அறத்தவரை அடைந்த விருந்து, போய்க்கொண்டிருக்கும் உயிரைத் தடுத்து நிறுத்திய மருந்து என்றெல்லாம் அந்த

மோதிரத்தை வர்ணிக்கின்றான். இறுதியில் இத்தகைய மாற்றங்களைப் பிராட்டியிடம் ஏற்படுத்திய மோதிரத்தைப் பல்லாண்டு பாடி வாழ்த்துகின்றான்.

" இருந்து பசியால் இடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்தும் அமுது ஆகியது; அறத்தவரை அன்மும்
விருந்தும் எனல் ஆகியது; வீயும் உயிர் மீளும்
மருந்தும் எனல் ஆகியது; வாழி மணி ஆழி! "

— உருக்காட்டுப் படலம் 70

7. நன்றியின் சிகரம்:

அனுமன் தந்த மோதிரம் ஏற்படுத்திய மகிழ்ச்சிக்கடலில் திளைத்திருந்த சீதைக்கு, இத்தகைய அரிய செயலைச்செய்த அனுமனைப்பாராட்டுவது எப்படி என்று ஒருகணம் திகைப்பாக இருந்தது. முதன்முதலில் அனுமனை வீரனே! என்று அழைத்த பிராட்டி இப்போது உத்தமனே! என்று அழைக்கின்றாள். சொற்கள் தயங்கித் தயங்கி வெளி வருகின்றன. அணையில் உடைப்பு ஏற்படுவதற்கு முன்னர் நீர் ஓரிடத்தில் கசிந்து வெளி வருவதுபோன்று சீதையின் சொற்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவந்து பின்னர் பெரும் பிரவாகமாகப் பெருக்கெடுத்து ஓடி அனுமனையே திக்குமுக்காடச் செய்துவிடுகின்றன. பத்து மாதங்களாக இரக்கமில்லா அரக்கர் உலகில் அல்லல்பட்ட உள்ளம்; காமுகனின் நஞ்சனைய சொற்களைக் கேட்டுக் கேட்டு வெம்பிப் புழுங்கிய உள்ளம் தனக்கு 'உய்வு' தந்தருளிய வள்ளல் செய்த செயலின் பெருமையை உணர்ந்ததும், உள்ளம் குளிர்ந்து, முதன்முதலாகப் புன்முறுவல் பூத்து அவனைப் பாராட்ட எழுகின்றது.

" கடல் அமிழ்தின் தெளிவு அன்னதோர் " மொழியாளல்லவா ஜானகி! அந்த அமுதப் பிரவாகம் இதோ பொங்கி வருகின்றது:

" மும்மையாம் உலகம் தந்த
முதல்வற்கும் முதல்வன் தூதாய்ச்
செம்மையால் உயிர்தந்தாய்க்குச்
செயல் என்னல் எளியது உண்டே?
அம்மையாய், அப்பனாய
அத்தனே! அருளின் வாழ்வே
இம்மையே மறுமைதானும்
நல்கினை இசையோடு " என்றாள்.

" பாழிய பணைத்தோள் வீர!
துணை இலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே! யான்
மறு இலா மனத்தேன் என்னில்
ஊழி ஓர் பகலாய் ஓதும்
ஆண்டெலாம், உலகம் ஏழும்
ஏழும் வீவு உற்ற ஞான்றும்,
இன்று என இருத்தி " என்றாள்.

— உருக்காட்டுப் படலம் 72, 73.

உலக இலக்கியங்களில் இப்படியொரு உணர்வுச்சூழலில் பூத்த கருத்து மலர்களைக்காண்பது மிகமிக அரிதாகும். கம்பராமாயணத்திலே இப்பாடல்கள் மிகச்சிறப்பானவையாகப் பாராட்டப்படுவதில் வியப்பில்லைதான். இப்பாடல்களின் கருத்தை உணர்ந்து கொள்ள முயல்வோம்:—

" மூன்று உலகங்களையும் படைத்த பிரம்மாவையே ஈன்ற முதல்வனாகிய திருமாலைப் போன்ற ராமபிரானின் தூதனே! அறப் பண்புடன் என் ஆருயிர் காத்த உத்தமனே! உனக்கு என்ன கைம்மாறு நான் செய்ய முடியும்? இம்மையிலும் மறுமையிலும் நான் புகழோடு வாழ வழிசெய்த நீயே எனக்குத் தாயாகவும், தந்தையாகவும், தெய்வமாகவும் இருக்கின்றாய். உலகையும் உயிர்களை உய்விக்க வந்த அருளின் உருவமாகவே நீ காட்சியளிக்கின்றாய்!

"வலிமை பொருந்திய பெரிய தோள்களையுடைய வீரனே! துணை ஒருவருமின்றித் தனிமையில் வாடிய என் வருத்தத்தைப் போக்கிய வள்ளலே! நான் என் மனதில் குற்றம் இல்லாதிருப்பது உண்மையானால், இப்பதினான்கு உலகங்களும் அழிந்துபோகும் மகாப்பிரளய காலத்தில் கூட இறவாமல் நீ இன்று போல் சிறப்புடன் வாழ்வாயாக."

அனுமன் சிரஞ்சீவியானான். அன்பு உள்ளத்தின் நன்றி அனுமனுக்கு அழியாத வாழ்வை அளித்தது. அனுமனின் இந்தச் செயற்கரிய செயலைச் சீதை அத்துடன் மறந்துவிடவில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் இதனை நினைவூட்டிக்கொண்டேதான் இருக்கின்றாள்:

"நாடி வந்து எனது இன் உயிர் நல்கினை! நல்லோய்"

— சூடாமணிப்படலம் 84

"ஆழிகாட்டி என் ஆருயிர் காட்டினாய்"

— பிணிவீட்டுப் படலம் 34

இவ்வாறெல்லாம் அனுமனின் சேவையை நினைத்துப் பேசுகின்றாள் சீதை. அரக்கரிடம் அனுமன் சிறைபட்டு, வாலில் தீமூட்டப்பட்டு அலைக்கழிக்கப்படுகின்றான் என்பதைத் திரிசடை மூலம் கேள்வியுற்ற பிராட்டியின் மனம் பட்ட பாட்டைக் கம்பன் விவரிக்கின்றான்:

"தன் உயிர் தேய, கன்று பிடியுறத் தீங்குஉறு
தாயைப் போல, தளர்ந்து மயர்ந்தனள்"

— பிணி வீட்டு படலம் 36

கன்றுக்குத் துன்பம் வந்ததைப்பார்த்த தாய்ப் பசு போன்று அனுமன் சிறைபட்டதைக் கேட்ட சீதை அல்லலுற்றாள் என்கின்றான் கம்பன்.

யுத்தகாண்டத்தில் மாயா ஜனகப் படலத்தில் ராவணன் ஜனகனைப் போன்று மாயையில் உருவம் செய்து சீதையின் முன் நிறுத்தி அச்சுறுத்துகின்றான். அது மாயை என்று அறியாத சீதை தந்தைபடும் துன்பத்தைக் கண்டு தவிக்கின்றாள். தந்தை அரக்கரிடம் சிறைபட்டது மிதிலையிலுள்ளவர்க்குத் தெரியுமோ என்றும் அப்படியே தெரிந்தாலும் தந்தையை அவர்கள் எப்படி விடுவிக்க முடியும்? அவர்களிடம் அனுமன் இருக்கின்றானே? என்று புலம்புகின்றாள் பூமாதேவியின் மகள். அனுமனைப் பற்றிய எண்ணம் அவள் மனத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

பின்னர் மீட்சிப் படலத்தில் ராவணவதம் முடிந்த செய்தியைச் சீதையிடம் தெரிவிப்பதற்காக அனுமன் அசோகவனம் வருகின்றான். ராவணவதத்தை உற்சாகத்துடன் தேவியிடம் வெளியிடுகின்றான். சீதை மறுமொழி ஏதும் பேசாமல் மௌனமாக இருக்கின்றாள். 'ஏன் இந்த மௌனம்?' என்று வினவுகின்றான் மாருதி. அதற்குப் பதில் சொல்லும் முறையில் சீதை அனுமனுக்கு இரண்டாவது முறையாக மிகப் பெரிய பேற்றினை அளிக்கின்றாள்:-

"சில நாட்களுக்கு முன் எம்பிரான் நாமம் சொல்லி என் உயிரைக் காத்தாய். நொந்து கிடந்த என் மனத்திற்கு உவகையூட்டி ஆழி காட்டி என் அல்லலைத் தீர்த்தாய். இந்த அரக்கருலகம் மண்ணோடு மண்ணாகும் என்றும், என் ஆவி நாயகனை நான் காணப்போகும் நாள் அதிவிரைவில் வரும் என்றும் உறுதி கூறிச் சென்றாய். நீ பேசிய வண்ணமே செய்து காட்டியிருக்கின்றாய்! அஞ்சனைச் செல்வனே! நீ செய்திருக்கின்ற உதவியையெல்லாம் நினைத்துப் பார்க்கின்றேன்! பேச நா எழவில்லை! நீ செய்திருக்கின்ற உதவிக்குப் பிரதியாக இம்மூன்று உலகங்களையும் தரலாம்! ஆனால் அவையும் உன் உதவிக்கு ஈடாகமாட்டா! மேலும் அவை அழியும் தன்மையன! உன்னை என் தலைதாழ்த்தித் தொழுவதே பொருத்தமானது ஆகும்."

சீதாப்பிராட்டியின் இவ் எண்ணக்குவியல்களைக் கவிதையில் கொடுக்கின்றான் கம்பன்:

"உலகம் மூன்றும் உதவற்கு ஒரு தவி
விலை இலாமையும் உன்னினென்; மேல்அவை
நிலை இலாமை நினைந்தனென்; நின்னை என்
தலையினால் தொழுவும் தகும், தன்மையோய்!"

— யுத்த காண்டம் மீட்சிப் படலம்-28

இறுதியாக, ராவண வதம் முடிந்து ராமன், சீதை, இலக்குவன் முதலியோர் புஷ்பக விமானத்தில் அயோத்தி நோக்கி ஆகாய வீதியில் சென்று கொண்டிருக்கும்போது ராமன் சீதையிடம் பூமியில் தெரிகின்ற இடங்களையெல்லாம் காண்பித்து விவரித்துக் கொண்டே செல்கின்றான். அவற்றைப் பார்த்துக்கொண்டே வந்த சீதைக்கு அனுமனை ராமன் சந்தித்த இடத்தைத் தெரிந்து கொள்ள ஆவல் ஏற்படவே, தானே ராமனிடம் அனுமனைச் சந்தித்த இடம் எது என்று கேட்கின்றாள்:

"அனுமன் தோன்றிற்று எது" என,
அனங்கை நோக்கி, "இற்று" என ராமன்
[சொன்னான்"

— யுத்தகாண்டம் மீட்சிப் படலம்-172.

[இற்று: இங்கு]

அனுமனைச் சீதை மறக்க முடியாது. அவன் செய்த உதவி அத்தகையது. அதற்காகச் சீதை அனுமனுக்கு அளித்த சிரஞ்சீவிப் பட்டமும், தன்னால் வணங்கத் தக்கவன் அனுமன் என்ற பெருமையும் நன்றியின் சிகரங்களாகக் கருதப்படத் தக்கவையேயாகும். சுந்தரகாண்டத்தின் மிகச் சிறந்த பகுதியான கணையாழி சமர்ப்பணமும் சீதையின் நன்றிப் பெருக்கும் என்றென்றும் நம் இதயத்தில் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை.

சமூக நலன்

(சுவாமி ஸதானந்தர்)

2. மானுடப்பண்பு

வடிவத்தில் எல்லாரும் மானுடர்களாக இருந்தாலும் சுபாவம், அறிவு, திறமை, ஆசாபாசங்களில் மனிதர்களுக்குள் வித்தியாசங்கள் இருக்கின்றன. பசு என்கிற முறையில் எல்லாப் பசுக்களும் ஒன்றுதான். ஆனல் அவை தரும் பயனில்—பால் கறவையில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. ஒரு லிட்டர் பால் முதல் இருபது லிட்டர் பால் வரை பல்வேறு அளவைகளில் பால் கறக்கின்றன. அவைகள் தரும் பாலின் அளவை வைத்துத்தான் மாட்டிற்கு விலை நிர்ணயம் ஆகிறது. பால் அதிகம் கறக்கும் பசுவின் கன்று கிடாரியாக இருந்தால் விலை அதிகம். காங்கேயன் பசுவின் காளைக் கன்றுக்குத்தான் மதிப்பு அதிகம். உழைப்புக்கு அது மிகவும் பயன்படும். நோய் இல்லாத ஆரோக்கியமான லக்ஷணமான பசுவாக இருந்தால் விலை அதிகம். எல்லாப் பசுக்களும் பசு இனம் என்கிற முறையில்தான் ஒன்று; அதன் தரத்துக்கேற்ப அதைப் பாதுகாக்கிற முறை வித்தியாசப்படும். இதை நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். கரும்பு இனத்தில் sugar contents—சர்க்கரைச் சத்து அதிகம் உள்ள ரகம் உற்பத்தி பண்ண இடையருத ஆராய்ச்சியும் முயற்சியும் ஏராளமான பொருள்செலவும் செய்யப்பெற்று வருகின்றன. எண்ணெய் வித்துக்களில் oil contents—எண்ணெய்ச்சத்து அதிகமாக உள்ளரகங்களைப் பெருக்க முயல்கிறோம். பசு இனத்தில் பால் வளம் பெருக கூடுதல் பால் கறக்கும் இனங்களை விருத்தி செய்ய முயல்கிறார்கள். அதிகம் ராசி காணும் தான்ய ரகங்களை விருத்தி பண்ணப் பார்க்கிறார்கள். எல்லாம் சரி. மானுடரில் மானுடப் பண்பு, சீலம், குணம், ஓங்கி வளரும்படியான திட்டம், பேச்சு, எண்ணமாவது இன்றைய வாழ்க்கையில் உண்டா? இவ்விதத்தில் சிந்தனை எழுவதாகக் கூடக் காணோம். நீ மட்டும் என்ன நல்லவன், நீ நல்லவனாக ஏன் இருக்கிறாய்? என்று கேட்கிறமுறையில் இன்றைய போக்கு உள்ளது. துரியோதனன் நல்லவனைத் தேடிப் போனான். ஒருவனையும் காண முடியவில்லை. இவ்விதம் மஹாபாரதத்தில் படிக்கிறோமே அந்த முறையில் இன்றைக்கு மனப்பான்மை இருந்து வருகிறது. மானுடப்பண்பு வளர என்ன செய்யலாம்?

சில நல்ல பண்புகளைப் பற்றித் தெரிந்து கொள்வோம். கடலில் ஒரு கப்பல் புயலில் சிக்கித் தவிக்கிறது. மூழ்குகிற நிலை. அப்போது முதலில் பாதுகாப்புக்கு உரியவர் குழந்தைகள், பெண்பாலர், வயோதிகர். இவர்களுக்குப் பந்தோபஸ்து ஏற்பாடு செய்து விட்டுத்தான் மற்ற ஆண்பிள்ளைகள் தற்பாதுகாப்புக்கு வழி தேட வேண்டும். சாகநேர்ந்தால் தாங்கள் தாம் சாவார்கள். இது பண்பு. ஒருவன் ரோட்டில் சுமைதூக்கிக்கொண்டு போகிறான். அவனைத் தொந்தரவு செய்யாமல் மற்றவர்கள் ஒதுங்கிப் போவது பண்பு. சுமை தூக்குகிறவன் வேகமான வண்டி வாகனங்களுக்கு இடைஞ்சலாய் இல்லாமல் ஓரமாகப்போவது அவனது பண்பு. குருடர், வயோதிகர் ஆகியவர்களுக்கு இடைஞ்சல் பண்ணமல், முடிந்தால் உதவி செய்வது நம் பண்பு. தங்களால் போக்குவரத்துக்கும் ஜன நடமாட்டத்துக்கும் இடைஞ்சல் இல்லாமல் பார்த்துக் கொள்வது அவர்களுடைய பண்பு. ஒருவன் கத்தி கேட்டால் அதை விரித்துக் கத்தியின் கூர்முனையைத் தான்பிடித்துக்கொண்டு வாங்குகிறவன் ஆபத்தின்றிப் பிடிக்குமாறு பிடியை அவனிடம் நீட்டுவது பண்பு. இதைச் சுருக்கிச் சொன்னல் நலன் பிறருக்கு இருக்கட்டும் என்று ஒவ்வொருவரும் நினைத்தால் எல்லாருக்கும் நலன் தானே அமைந்து விடுகிறது. சுயநல மனப்பான்மை போய்ப் பொதுநல மனப்பான்மை வரவேண்டும்.

இன்றைக்குரோட்டில் நடக்கிறவர்கள், சைக்கிளில் போகிறவர்கள், கட்டை வண்டிக்காரர்கள், வெறுமனே நின்று பேசுகிறவர்கள் யாருமே தங்களால்பிறருக்குஇடைஞ்சல்வேண்டாம் என்று கருதுகிறதாகத் தெரியவில்லை. பஸ், கார் முதலியன வேகமாகப் போவதற்கென்றே அமைக்கப்பட்டவை. அவற்றில் மக்

கள் போகின்றார்கள். அவற்றிற்கு ஒதுங்கி வழி விடுவது பண்பு. புகை பிடிக்கலாகாது என்று பஸ்களில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் ஓட்டுனர் தன் ஆசனத்தில் அமர்ந்து புகை பிடிக்கின்றார். பிரயாணிகள் உள்ளே புகை பிடிக்கின்றனர். புகை பிடிக்காதவர்களும் புகை பிடிக்கிறவருக்கு நிகராக அப்புகையைச் சுவாசிக்க நேரிடுகிறது. பஸ் நிலையம், ரயில் பிளாட்பாரங்களில் கண்டபடி எச்சில் துப்பாது இருப்பது நல்ல பண்பு. பழம், கடலை தோல்களை ரயில் பெட்டியிலும் பிளாட்பாரங்களிலும் போடாது இருப்பது நல்ல பண்பு. பொது இடங்களில் தண்ணீர், காபி சாப்பிடும்போது எச்சில்படுத்திச் சாப்பிடாமல் டம்ளரைத் தூக்கிச் சாப்பிடுவதே நன்மையானது. பெரு நோயாளிகள் தாங்களாகவே பொது ஜனக் காட்சியிலிருந்து விலகி இருக்கவேண்டும். இந்த வியாதி என்னோடு போகட்டும், வேறு யாருக்கும் வந்துவிடலாகாது என்கிற எண்ணம் மேலான பண்பு ஆகும். ரயிலில் டிக்கட் எடுத்தல், வண்டியில் ஏறுதல் ஆகிய கும்பல் இருக்கும் இடங்களில் பொறுமை, நிதானம், ஓர் ஒழுங்குப்பாட்டுடன் நடத்தல் மிக அவசியம். எல்லாரும், இருக்கிற இடத்துக்குள் சௌகரியப்படுத்திக் கொள்வோம் என்கிற எண்ணம் வேண்டும். இவைகள் எல்லாம் சிறு விஷயங்களாகத் தோன்றலாம். ஆனால் சிறு விஷயத்தில் வராத ஒழுங்கு, சுயநலத் தியாகம் வேறு எதில் வந்துவிடப் போகிறது! சுயநலம் மிகக் கொடிய மனமாசு ஆகும். அது போகாமல் ஆத்மசாதனத்தில் முன்னேற்றம் சாத்தியமில்லை.

பெரும்பாலான சர்க்கார் ஊழியர்களோ சரியாக உழைப்பதில்லை. கடமை உணர்ச்சி, வாங்குகிற சம்பளத்துக்காவது உழைக்க வேண்டும் என்கிற உணர்ச்சி, தேசபக்தி, மத உணர்ச்சி, இன உணர்ச்சி, மொழி உணர்ச்சி ஆகிய எந்த உணர்ச்சியினாலாவது ஆட்கொள்ளப் பட்டவர்களாகக் காணோம். உழைப்பு, கடமை உணர்ச்சி குன்றினால் சர்க்கார் நிர்வாகம் ஒழுங்கற்றுப் போகும். மாணவர்களை வழிநடத்தவேண்டிய ஆசிரியர்கள் சங்கம் அமைத்துக் கொண்டு போராடுகிறார்கள். உண்ணாவிரதம் எவ்வளவு புனிதமான சொல். விரதம் என்பது ஆத்மசாதனங்களில் ஒன்று. அதன் தூய்மை கெடாமல் உண்ணாவிரதம் என்று காந்தி அதை ஓர் அரசியல் நீதிப் போராட்டம் ஆக்கினார். ஆனால் இன்றைய மக்கள் ஒரு சாப்பாட்டு வேளைக்கும் அடுத்த சாப்பாட்டு வேளைக்கும் இடையில் உள்ள ஐந்து அல்லது ஆறுமணி நேரத்தை உண்ணாவிரதம் என்று ஆக்கிக் கேலிக்கூத்தாக்கிவிட்டார்கள். சர்க்கார் கண்ணிருந்தும் குருட்டுச் சர்க்காராக இருக்கிறது. சர்க்காருக்கு எல்லார் தயவும் வேண்டும். தன் குற்றங்களுக்குச் சமாதானமும் ஆதரவும் வேண்டும். ஆகையால் சர்க்கார் எப்படிப் பிறர் குற்றங்களைக் கண்டிக்கமுடியும்? சர்க்கார் ஊழியர்களோ பெரும்பாலானோர் ஊறிப்போன சோம்பேறிகள். தானே திருந்திக்கொள்கிற சக்தியற்றவர்கள். இனி, கடைசி வழி பொதுமக்களின் நடவடிக்கை ஆகும். நம் பொதுமக்களோ தேசபக்தி இல்லாதவர்கள். பொதுக்கூட்டங்களில் ஆள் தெரியாமல் கும்பலில் பஸ் கொளுத்துவார்கள், கண்ணாடி உடைப்பார்கள். ஆனால் தனி மனிதனின் அதிகாரத் திமிரை, சோம்பேறித்தனத்தை, தவறான போக்கை நேருக்கு நேர் கண்டிக்கத் தைரியம் அற்றவர்கள். இனித் திருத்தம் எப்படி வரும்? தீமையைத்தீமை, தவறானது என்று உணர்கிற மனப்பான்மைகூடப் போய்விட்டது. எந்தத் தவறுக்கும் சமாதானம் செய்துகொள்கிற பொல்லாத மனப்பான்மை, கொலைகாரனுக்கு அமைந்த துஷ்ட மனப்பான்மை வந்துவிட்டது. கடைசி வழி இயற்கையின் நடைமுறைதான் இருக்கிறது. அதுதான் கடவுள். தன் வினை தன்னைச் சுடும். பாபத்தையும் பாதரசத்தையும் ஜீரணிக்க முடியாது. தன் தவறுக்கேற்றபடி இவ்வுலகில் அவன் துன்ப துயரங்களை, நோயை, போட்டி, பொறாமையை, அவமானங்களை அடைந்து வெகுபாடுபடுவான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே. முன்னே செய்த வினையே இங்ஙனம் திரும்பி வந்துள்ளது என்பவைகளையெல்லாம் நினைத்துப் பாருங்கள். தன்னைச் சமாதானப்படுத்திக்கொள்ளலாம். அரசாங்கத்தை

ஏமாற்றலாம், மக்களை ஏமாற்றலாம். கடவுளை, இயற்கை நியதியை ஏமாற்ற முடியாது. அவனவன் வினைக்கேற்ற பயனை அனுபவித்தே ஆக வேண்டும். அதிலிருந்து தப்பமுடியாது.

உலக நடைமுறை இங்ஙனம் இருக்க மக்கள் எல்லாரும் ஒன்று என்கிற புதிய கூப்பாடு போடுகிறார்கள். முன் எப்போதும் இல்லாத அபார அன்புஉள்ளம் படைத்தவர்கள் போன்று இவர்கள் தென்படுகிறார்கள். வடிவத்தில் ஒன்று, மக்கள் இனம் என்பதில் ஒன்று. ஆனால் குணநலன்களில் வேறுபாடுகள் உண்டு. இந்தக் குணநலன்களை, அறிவு, வல்லமைகளை வளர்க்க வேண்டுமா வேண்டாமா? இந்தக் குணநலன்களை வளர்க்க எந்த அளவு பாடுபட வேண்டும்? நல்லது, கெட்டுவிடாமல் இருக்க எவ்வளவு பாதுகாப்பு வேண்டும் என்பதை எண்ணிப்பாருங்கள். குணநலன்களைப் பாதுகாக்கவே வர்ணாச்ரமதர்மம் என்கிற நியமங்களைஏற்படுத்தினார்கள்.வர்ணம்என்பதுசமூகத்திற்குத் தேவையான நால்வகை அமைப்புக்கள் ஆகும். அறிவு, பண்பு, ஒழுக்கம், சீலம், பக்தி, தியாகம் ஆகியவை கற்றுத்தர, அனுஷ்டானத்தைக்கொண்டுவரக் கல்விச் சாலைகள் இருக்க வேண்டும். அந்தணன், அந்தண தர்மம், செந்தண்மை, சீலம் இவற்றை வளர்க்கவேண்டும். சமூகத்தில் பொதுக் காரியங்கள், கல்வி, நீதி, பாதுகாப்பு,சுகாதாரம்,சாலைஅமைப்பு,போக்குவரத்து இவைகளை நிர்வகிக்க அரசாங்கம் வேண்டும். இவற்றைச் செய்கிறவனை க்ஷத்திரியன் என்று நமது சாஸ்திரம் சொல்கிறது. பொருள் உற்பத்தி, விநியோகம் இவற்றைக் கவனிக்க விவசாயம், வியாபாரம் செய்பவன் வைசியன் என்று சொல்லப்படுகிறான். மேலே குறிப்பிட்ட மூன்று வர்ணத்தாருக்கும் உழைக்கத் தொழிலாளர்கள் தேவை. அவர்கள் சூத்திரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இப்போது யோசியுங்கள். வர்ணதர்மம் ஜாதிச் சண்டையை உண்டாக்க ஏற்பட்டதா என்று சிந்தியுங்கள். காலாந்தரத்தில் எல்லாவற்றுக்குள்ளும் தீமை சுயநலங்கள் புகும். அப்போக்கில் புகுந்ததை வெளியேற்ற வேண்டுமே தவிர அமைப்பையே குலைக்கக் கூடாது. தனிமனிதன் பிரம்மசாரி,(கல்வி கற்கும் பருவம்) கிரஹஸ்தன் (மணம்புரிந்துகொண்டு யாதானும் ஒரு பயன்படும் தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிலை). வானப்பிரஸ்தன் (தன் ஜீவிதத்தின் பெரும் பகுதியைத் தேசநலனுக்கு என்று பயன்படுத்தியாயிற்று. எஞ்சியுள்ள தன் வாழ்நாளைக்கடவுள்பக்தியில் எளிய தூய வாழ்வில், கழிப்பது) சன்யாசம் (முறையாக வாழ்ந்தால் மனது படிப்படியாக பற்றற்ற நிலையை அடைகிறது. அது முடிவான நிலை, அது சன்யாசம்). மனிதன் தன் ஜீவிதத்தை முறையாக எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை இதைவிட வேறு எவ்விதம் வகுத்துக் கொடுப்பது? தனி மனிதனுடைய வாழ்க்கை முறைக்கு ஆச்ரம தர்மம் என்றும் சமூகம் முழுதுக்கும் உள்ள அமைப்புக்கு வர்ணதர்மம் என்றும் பெயர். இவைகளைவிட வேறு சிறந்த முறை இல்லை. இப்போது எந்த வரையறையும் அற்ற,கட்டுமானம் இல்லாத,கூட்டிலிருந்து தப்பிய புலியின் வாழ்க்கைபோன்று உள்ளது. மானுடர் அனைவரும் வடிவந்தில் ஒன்று. குணம்,பண்பு, அறிவு,ஆற்றலில் வேறுபாடுகள் உண்டு. வடிவத்தினால் மட்டும் ஒரு நன்மையும் சிறப்பும் இல்லை. குணங்களே சிறப்பு ஆகும். அவற்றை வளர்க்கவேண்டும். மானுடர் அனைவருக்கும் இந்த விஷயத்தில் விழிப்பு வந்தால் அன்றி எந்தப் பெரிய நன்மையும் கைகூடாது. மத அனுஷ்டானங்கள், வழிபாட்டுமுறைகள் யாதொரு பயனையும் தரா. கெட்டவனை அடக்கியும் பயமுறுத்தியும் தண்டித்தும் நல்வழிப்படுத்த அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் வனவிலங்குகளின் ராஜா சிங்கம், பக்ஷிகளின் அரசன் கருடன், யானைக்குள் ஒரு யானை அரசன்—இப்படி ஆகிவிடும். பண்பே, மானுடரை விலங்கினின்று பாகுபடுத்துகிறது. பண்பை வளர்ப்போமாக. அரசாங்கம் அதற்குத் துணை செய்யுமாக. மானுடப் பண்பை வளர்த்து மானுடர்களாக நம்மை ஆக்கிக் கொள்வது நம் முதல் கடமை ஆகும். அதற்கடுத்தபடிதான் தெய்வநிலை ஆகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது வள்ளுவர் வாக்கு. வாழவேண்டிய முறையில் வாழ்ந்து தெய்வ நிலைக்கு நம்மை உயர்த்திக்கொள்ள முயல்வோமாக. இந்த உயர் நிலை விரைவில் வந்தமைவதாகுக.

ஸ்ரீ சாரதாதேவியாரின் அருள்வாக்கு

நம்முடைய நிஜ சொரூபம் பேரறிவுமயமாக இருக்கிறது. அது தன்னைத்தானே முற்றும் உணர்ந்து ஆனந்தமயமாக இருக்கிறது. பிர பஞ்ச அனுபவம் அப்பேரறிவை மறைத்து வைத்திருக்கிறது. ஆகையால் நாம் நம்மை உணரமுடியாத நிலையில் இருக்கிறோம். நம் உலக அனுபவத்தை எல்லாம் ஒதுக்கித் தள்ளி விடுவோமானால் பேரறிவு தன்னை விளக்கிக் கொண்டிருப்பதை அறியலாம். அப்பொழுது நாம் பகரும் வாக்குகளெல்லாம் அருள் வாக்கு களாகின்றன. ஸ்ரீ சாரதாதேவியார் பேரறிவை முற்றும் உணர்கின்ற அருள் நிலையில் யாண்டும் இருந்துவந்தார்கள். எனவே அவர் வாயி லிருந்து வந்த வாக்குகளெல்லாம் அருள் வாக்குகளாகின்றன. அவருடைய அருள் வாக்குகள் சிலவற்றின் கருத்துக்களை ஈண்டு அறிந்துகொள்ள முயல்வோம்.

மனிதன் அருள் நிலையை அடைவதற்கு இடைவிடாது ஊக்கத்துடனும், சிரத்தையுட னும் சாதனை செய்து வரவேண்டும். இறைவ னுடைய நாமத்தை எவ்வளவுக்கெவ்வளவு ஜபம் பண்ணுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு நலன் உண்டு. ஓயாது சாதனை செய்துகொண் டிருப்பதற்கிடையில் ஈசனுடைய அருளையும் நாடி இருக்கவேண்டும். சுயமுயற்சியும், ஈசுவர னது அருளும் சேரும்பொழுதுதான் ஈசுவரக் காட்சி உண்டாகிறது. ஈசுவர அருளைப் புறக் கணித்தாலும், தன் முயற்சி இல்லாவிட்டா லும் ஈசுவரக்காட்சி பெறமுடியாது. காலத் தைக் கருத்தில் வாங்காது சாதனையில் ஈடுபட வேண்டும். இரண்டு சாதகர்கள் சாதனையில் ஈடுபட்டிருந்தார்கள். நாரதர் ஒரு சமயம் கைலாயத்திற்குப் போகும் வழியில் அவ்விரு சாதகர்களையும் சந்தித்தார். அவ்விருவரும் நாரதரிடம் "எங்களுக்கு எப்பொழுது முக்தி கிடைக்கும்? என்று கைலாசபதியிடம் கேட்டு வரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். நாரதரும் "கைலாசத்திலிருந்து திரும்பி வரும் பொழுது உங்களுடைய விண்ணப்பத்திற்குரிய பதிலைக் கைலாசபதியிடமிருந்து தெரிந்து வருகிறேன்'' என்று கூறினார். சிலநாட்கள் கழித்து நாரதர் திரும்பிவந்தார். சாதகர்களுள் ஒருவரை முதலில் சந்தித்தார். அவர் ஆவ லோடு நாரதரிடம் தம் விண்ணப்பத்திற்குக் கைலாசபதி அளித்த விடையைக் கேட்டார். "தங்களுக்கு இப்பிறவியில் முக்தியில்லை என் றும், அடுத்தப் பிறவியில்தான் உங்களுக்கு முக்தி என்றும் கைலாசபதி கூறினார்'' என்று நாரதர் பகர்ந்தார். அவர் மனம் உடைந்து அடுத்த பிறவிக்குத்தானே முக்தி என்று சாதனையை நிறுத்திவிட்டார். அடுத்த பிற வியில் அடையவேண்டிய முக்திக்கு இப் பிறவியிலிருந்தே சாதனைபுரிவது அவசிய மில்லை என்பது அவருடைய கருத்து. நாரதர் இரண்டாம் சாதகனைச் சந்தித்தபொழுது அவரும், ''தம் விண்ணப்பத்துக்குரிய விடை யைக் கைலாசபதியிடமிருந்து தெரிந்து வந்தீர் களா?" என்று கேட்டார். நாரதர் "இதோ இங்கிருக்கும் இம்மரத்தில் எத்தனை இலை கள் இருக்கின்றனவோ அத்தனை பிறவி களுக்குப் பிறகுதான் உங்களுக்கு முக்தி கிடைக்கும் என்பதைக் கைலாசபதி கூறினார்" என்று பகர்ந்தார். அவருக்கு உள்ளத்தில் ஆனந்தம் பொங்கி எழ அவர் பகர்ந்ததாவது: எனக்கு முக்தி எப்பொழுது வேண்டுமென்றா லும் வரட்டும்; முக்தி உண்டு என்பதைக் கைலாசபதி உறுதி செய்துவிட்டார் அல்லவா? அதுபோதும்" என்று பகர்ந்தார். சாதனை யில் ஆழ்ந்து ஈடுபட்டு அத்தனை பிறவிகளில் செய்யவேண்டிய முயற்சியைக் கிடைத்துள்ள பிறவியிலேயே செய்ததால் அதே பிறவியி லேயே அவருக்கு முக்தியும் கிடைத்தது. இரண்டாம் சாதகரைப்போன்று காலத்தைக் கருத்தில் வாங்காது, கைம்மாறு கருதாது ஈசனுடைய அருளை நாடி முயல்கின்றவர் களுக்கு எல்லா நலன்களும் வந்து அமைகின் றன. விலைக்கேற்ற பண்டங்களைக் கடையில் வாங்குவதுபோன்று நாம் செய்யும் ஜபதபத் துக்குக் கைம்மாறு கருதுவோமானால் அது வியாபார புத்தி ஆகிறது. வியாபார புத்தி உடையவர்களுக்கு உண்மையான பக்தி உண் டாவதில்லை. அயராது முயன்று அவர் அருளை நாடியிருப்பவர்களுக்கு அவருடைய காட்சி கிட்டுகிறது. இக் கருத்துக்களை

ஸ்ரீ சாரதா தேவியார் தம் அருள் வாக்குகளில் வெளியிட்டிருக்கிறார். அவ் அருள் வாக்கு வருமாறு: "கடையில் பண்டங்களை விலைக்கு வாங்குவது போன்று மக்கள் செய்யும் ஜபதபங்களுக்குக் கைம்மாருக ஈசுவரக் காட்சி உண்டாவதில்லை. ஓயாது அவரைப் வழுத்துதற்கிடையில் அவரைப் பெறுவதற்கு அவர் அருளையே நாடி இருக்கவேண்டும்.''

நம்மிடத்திலுள்ள பேரறிவு தம்மைத்தாமே விளக்கிக்கொண்டு மற்ற பொருள்களையும் விளக்கிக் காட்டுகிறது. மேலும் புறப்பொருள்கள் இருக்கின்றன என்பதை அவ் அறிவைக் கொண்டுதான் நாம் அறிய முடிகின்றது. பேரறிவு புறப்பொருள்களின்மீது குவியும் பொழுது புறப்பொருள்கள் புலப்படுகின்றன. பேரறிவு மனதின்மீது குவியும்பொழுது மனதிலுள்ள விகாரங்கள் நமக்கு விளங்குகின்றன. பேரறிவு பேரறிவின்மீதே குவியும் பொழுது அதன் உண்மையான இயல்பு விளங்குகிறது. பேரறிவு உலக அனுபவங்களோடு சேர்ந்து புறப்பொருள்களின் மீது செலுத்தப்படும் பொழுது உலக ஆசை வளர்கிறது. அப்பொழுது நமக்கு உடல் உணர்வும், உலகப் பற்றும் ஏற்படுகின்றன. உடல் உணர்வும், உலகப்பற்றும் ஒழியும்பொழுது பேரறிவு பேரறிவு மீதே செலுத்தப்படுகிறது. வைரத்தைக் கொண்டு வைரத்தை அறுப்பதுபோன்று பேரறிவைக்கொண்டு பேரறிவை அறியும் பொழுது தெய்வப் பற்று அதிகரிக்கின்றது. இக்கருத்தை ஸ்ரீ சாரதா தேவியார் தம் அருள் வாக்கால் சுலபமாக விளக்கி இருக்கிறார்கள். ஸ்ரீ சாரதா தேவியாருடைய அருள்வாக்கு வருமாறு: "உலக ஆசை அறுபடும் அளவு ஈசுவர பக்தி அதிகரிக்கும்."

சூரியன் மேகத்தைத் தோற்றுவிக்கிறது. சூரியனுடைய வெப்பத்தால் கடல் நீர் ஆவியாக மாறி அது மேகமாக உருவெடுக்கிறது. சூரியனால் தோற்றுவிக்கப்பட்ட மேகம் சூரியனையே ஒரு நிமிஷம் மறைத்து வைக்கிறது. காற்றடித்து மேகத்தைச் சிதறடிக்கும்பொழுது சூரியன் காட்சிக்கு வருகின்றான். உலகப் பற்றுக்கள் நம் சொருபத்தை மறைத்து வைத்திருக்கின்றன. ஜபம் என்னும் காற்று வீசினல் அவ்வுலகப்பற்றுக்கள் ஓடுகின்றன. இக்கருத்தை ஸ்ரீசாரதாதேவியார் தம் அருள்வாக்கால் விளக்கி இருக்கிறார். அவ் அருள் வாக்கு வருமாறு: "காற்று மேகத்தைச் சிதறடிப்பது போன்று இறைவனுடைய நாம ஜபம் உலகப் பற்றுக்களை ஓட்டுகிறது."

மனதை ஒரு லட்சியத்தின்கண் நிலைபெற்றிருக்கச் செய்வோமானல் அதற்குத் தியானம் என்று பெயர். தியானத்தின்மூலம் மனே சக்தி ஆத்ம சக்தியாக மாறுகிறது. மனிதனுடைய உயர்வுக்குத் தியானமே அடிப்படையாக இருக்கிறது. ஒருவன் எதைத் தியானிக்கிறனே அதன் இயல்பு அவன் உள்ளத்துக்கு வருகிறது. மனே நாசத்துக்குத் தியானப் பயிற்சி மிக அவசியமானது.

தியானம் பண்ணுவதில் ஒரு முறையுண்டு. முதலில் ஸ்தூல வஸ்துக்களைப்பற்றித் தியானம் பண்ணவேண்டும். இது ஸ்தூலத் தியானம் எனப்படும். பிறகு சிறிது சிறிதாகச் சூட்சும வஸ்துக்களிடத்துத் தியானத்தைத் திருப்ப வேண்டும், இது சூட்சுமத் தியானம் எனப்படும். இதில் பலகாலம் பழகிய பிறகு வஸ்து ஒன்றுமில்லாமலேயே தியானம் செய்வது சாத்தியமாகும். ஈசுவரத் தியானம் பண்ணுகின்ற மனது ஈசுவரமயமாகிறது. ஸ்ரீசாரதா தேவியார் அருள்வாக்கு வருமாறு: "சந்தனத்தைத் தொடுவதால் கைக்கு மணம் வருவது போன்று ஈசுவரத் தியானத்தால் மனம் ஈசுவர மயமாகிறது."

இல்லறத்தாரும் பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கவேண்டும். மேலானதொன்றைப் பெறுவதற்குக் கீழானதொன்றைத் துறந்தாகவேண்டும். ஆத்மானந்தம் வேண்டுமென்றால் உடல் சுகத்தை விட்டு ஒழிக்க வேண்டும். பிரம்மச்சரியம் கடைப்பிடிக்காதவர்கள் தங்களிடத்திலுள்ள ஆன்மசக்தியை விரயம் பண்ணுபவர்களாகின்றார்கள். பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கும் பொழுது தெய்வீக எழில் உண்டாகிறது. மணம் புரிந்து கொண்டவர்கள் பிரம்மச்சரியத்திலிருந்து வழுவலாம் என்று எண்ணி விடக் கூடாது. உடல் சம்பந்தமான ஆசை யாரிடத்திலிருக்கிறதோ அவருக்கு ஆத்மானந்தம் உண்டாகாது. எனவே இல்லறம், துறவறம் ஆகிய இரண்டு நெறிகளில் இருப்பவர்களும் பிரம்மச்சரியத்தைப் பூரணமாகக்

கடைப்பிடிக்க வேண்டும். ஸ்ரீ சாரதா தேவியார் பிரம்மச்சரியத்தைக் குறித்துக் கூறிய அருள் வாக்கு வருமாறு: "இல்லறம், துறவறம் ஆகிய இரண்டு நெறிகளில் வாழ்பவர்களுக்கும் பிரம்மச்சரியம் இன்றியமையாதது. ஏனெனில் உடல் சம்பந்தமான ஆசை ஒழிந்தாலன்றி ஆத்மானந்தம் தோன்றாது."

இறைவனுக்குத் தியாகராஜன் என்பது ஒரு பெயர். அவர் விருப்பு வெறுப்பு இல்லாதவராகின்றார். மனிதன் அந்நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்வானாகில் அவன் தெய்வம் ஆகின்றான். அந்நிலையை அடைவதற்கு அனைத்தையும் துறந்தாக வேண்டும். தியாகத்தின் மூலமாகத்தான் அழியாப் பெருநிலையை அடைய முடியும். ஸ்ரீசாரதாதேவியாரின் அருள் வாக்கு வருமாறு: "கடவுளுக்காக அனைத்தையும் துறப்பவன் நடமாடும் கடவுள் ஆகின்றான்."

ஊழ் அல்லது விதி ஒரு பெரிய சக்தியாகிறது. 'ஊழில் பெருவலி யாவுள' என்று வள்ளுவரும் பகர்ந்திருக்கிறார். விதி என்பது மனிதனுடைய இயல்பு ஆகும். பல ஜன்மாந்தரங்களில் மனிதன் செய்த செயல்களும் எண்ணங்களும் அவனுடைய உள்ளத்தில் பதிந்து இயல்புகளாக வடிவெடுத்திருக்கின்றன. சரீரத்தில் ஏற்படுகின்ற வடு சரீரம் அழிந்ததும் மறைந்துபோகும். ஆனால் உள்ளத்தில் உண்டான இயல்பு ஸ்தூல சரீரம் அழிந்து போகும் பொழுதும் அழிவதில்லை. சூக்ஷ்ம சரீரம் இருக்கும் வரையில் அது வாசனையாக இருந்து ஸ்தூல சரீரத்தை இயக்கி வருகிறது. சூக்ஷ்ம சரீரம் ஒழிந்தால்தான் விதியும் ஒழியும். துறவி மனதை உறுதிப் படுத்துகின்றான். மனம் உறுதியாகும் அளவு விதியின் வேகம் குறைகிறது. மனம் தெய்வத்தின்பால் திருப்பப்படும் பொழுது உலகவாசனைகள் மனதின்மீது செலுத்தும் ஆதிக்கம் குறைகிறது. 'வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க' என்று மணிவாசகப் பெருமான் பகர்ந்துள்ளார். 'விதியை மதியால் வெல்லலாம்' என்பது ஒரு கோட்பாடு. கடவுளை அறியும் மதியைக் கொண்டு விதியை வெல்லலாம். உலகை அறியும் மதியைக்கொண்டு விதியை வெல்ல முடியாது. துறவி தன் வாழ்வைக் கடவுளுக்கென்று அர்ப்பணிக்கின்றான். எனவே அவன் விஷயத்தில் விதி சற்று விலகி இருக்கிறது. விதியைக் குறித்து ஸ்ரீ சாரதா தேவியாருடைய அருள் வாக்கு வருமாறு: "விதி என்னும் தேவதை துறவியைக் குறித்துத் தான் முன் விதித்தவைகளை எல்லாம் தானே துடைத்துவிடுகின்றாள்."

குற்றம் காணுதல் உலகத்தவர்களுடைய போக்கு ஆகும். நலம் கேடு ஆகிய இரண்டும் கலந்தே மனிதனிடத்து இருக்கின்றன. நலம் அதிகமாகவும் கேடு குறைவாகவும் ஒருவரிடம் இருந்தால் அவரை நல்லவர் என்று சொல்லுகின்றோம். கேடு அதிகமாகவும் நலம் குறைவாகவும் இருப்பவரைப் பார்த்துக் கெட்டவர் என்று சொல்லுகின்றோம்.

அருளாளர்கள் ஒவ்வொருவரிடத்திலுமுள்ள நல்லதை மட்டும் பார்க்கின்றார்கள். அவர்கள் யாரிடத்திலும் கேட்டைக் காண்பதில்லை. இதற்கு மாறாக லௌகீகப் புத்தி படைத்தவர்கள் பிறரிடத்திலுள்ள கேட்டை மட்டும் காண்கிறார்கள். பிறரிடத்திலுள்ள நலத்தை லௌகீகப் புத்திபடைத்தவர்கள் காண்பதில்லை. நலத்தைக் கண்டு நலத்தை நினைவூட்டுவதன் மூலம் நாமும் நலன் அடைகின்றோம்; பிறர்க்கும் நலத்தைத் தருகின்றோம். ஸ்ரீ சாரதா தேவியார் கடைசிக்காலத்தில் தம்மைப்பார்க்க வந்த அன்னபூர்ணம்மாள் என்னும் மாதுவைப் பார்த்துக் கூறிய வாக்கு உலகத்தவர்களுக்கு அளித்த கடைசி அருள்வாக்கு ஆகும். அன்னபூர்ணம்மாளுக்கு ஸ்ரீ சாரதாதேவியார் இயம்பிய அருள்வாக்கு வருமாறு: "மகளே, மன அமைதி வேண்டுமானால் யார்மீதும் குறை கூறாதே. உன்னிடத்திலுள்ள குற்றத்தையே கிளறிப்பார். உலக முழுவதையும் உன்னுடையதாக்கக் கற்றுக்கொள். நமக்கு உரியர் என்றும் உரியர் அல்லாதார் என்றும் சொல்லும் வேற்றுமை நிலையில் யாரும் இல்லை. உலகனைத்தும் நம்முடையதே. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்."

ஸ்ரீ சாரதாதேவியாரின் அருள்வாக்குகள் சிலவற்றை இக்கட்டுரையில் ஆராய்ந்தோம். இவற்றை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால் ஸ்ரீ சாரதாதேவியார் அடைந்திருந்த அருள்நிலையை நாமும் அடையலாம் என்பது திண்ணம்.

குறிப்புகள்

பழனியில் ஐக்கிய வழிபாடு

இவ்வாண்டு டிசம்பர் மாதம் 1ஆம் தேதி தபோவனப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும், மாணவிகளும், ஆசிரியர்களும், ஆசிரியைகளும் சுமார் நானூறுபேரும், அன்பர்களும், தாய்மார்களும் சுமார் நூறுபேரும் பழனி மலைக்குச் சென்று வழிபாடு செய்தனர். அன்று காலை எட்டு மணிக்குப் பழனிமலை அடிவாரத்தில் உள்ள சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் மடத்தில் சிற்றுண்டி எடுத்துக் கொண்டனர். காலை ஒன்பது மணிக்கு மலை ஏறத் தொடங்கினர். மலை ஏறும்பொழுது ஸ்ரீ அருணகிரிநாதர் இயற்றிய கந்தர்அநுபூதி பாடல்களை ஓதிக் கொண்டு இறைச் சிந்தனையோடு படி ஏறினர். ஒழுங்குப்பாட்டுடனும், கட்டுப்பாட்டுடனும் ஐந்நூறு பேர் ஒன்றித்த சிந்தனையுடன் கந்தர் அநுபூதி ஓதிக்கொண்டு மலை ஏறியது ஓர் அருள் காட்சியாக இருந்தது. எங்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளாத மற்றப் பக்தர்களும் பக்தியோடு அக்காட்சியைப் பார்த்து மன அமைதி பெற்றனர். சுமார் ஒரு மணி நேரம் அவர்கள் மலையேறிச் சென்றனர். மலைப் படிக்கட்டு ஏறி முடிந்த உடன் மலைமேல் உள்ள ஆலயத்தின் உள் பிரகாரத்தை "கார்த்திகேய, கார்த்திகேய, கார்த்திகேய பாஹிமாம்; சுப்ரமணிய, சுப்ரமணிய, சுப்ரமணிய ரக்ஷமாம்" என்ற நாமாவளி சொல்லிக்கொண்டு வலம் வந்தனர். மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களும் அப்பொழுது வழிபாட்டில் ஈடுபட்டிருந்தன.

பழனியாண்டவர் சந்நிதிமுன் காலை பத்தரை மணிக்கு அனைவரும் அமர்ந்து ஐக்கிய வழிபாடு செய்தனர். ஐக்கிய வழிபாட்டில் நாமாவளிகளும், துதிப்பாடல்களும், பழனி ஆண்டவர் மகிமைகளை வாசித்துக் கேட்டலும் மாறி மாறி நிகழ்ந்தன. பிரமகாயத்ரி ஜபம் யாவரும் சேர்ந்து ஏழுதடவை ஜபித்தனர். சமஸ்கிருதப் பண்டிதர் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை சொல்ல மற்றவர்கள் அவரைப்பின் தொடர்ந்து அர்ச்சனைக்குரிய நாமங்களை சொல்லி முருகனை அர்ச்சித்தனர். இம்முறையில் ஒருமணி நேரம் ஐக்கிய வழிபாடு நிகழ்ந்தது. அர்ச்சனை முடிந்ததும் ஐந்து நிமிடங்கள் ஐந்நூறு பேரும் சேர்ந்து முருகனைத் தியானித்தனர். நாமஜபம், அர்ச்சனை, காயத்ரி ஜபம், துதிப்பாடல்கள், தியானம், ஆகிய முறைகளைக் கையாண்டு முருகனைப் பக்தர்கள் முறையாக உபாசித்து முருகனுடைய அருளைப் பெற்றனர். ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு வருகின்றவர்கள் இறைச் சிந்தனையைத்தவிர வேறு சிந்தனைக்கு இடம் தராது வழிபாடு செய்கின்ற முறையைப் பொதுமக்களுக்கு எங்கள் கூட்டத்தினர் அன்று காட்டித்தந்தனர். இம்முறையில் எத்தனைபேர் ஆலயத்திற்கு வந்து வழிபாடு செய்கின்றார்களோ, அந்த அளவுக்கு ஆலயத்தில் அருள் சக்தி ஓங்கும். வழிபடுபவர்கள் அருளைத் தாங்கள் அடைவதன்மூலம் ஆலயத்தின்கண் அருளைப்பெருக்குதல் வேண்டும். ஆலய வழிபாட்டின் ஒப்பற்ற பயன் இதுவேயாம்.

அன்று தண்டாயுதபாணிக்கு அபிஷேக ஆராதனைகளும் சிறப்பாக நடந்தன. அபிஷேகத்துக்குப் பயன்படுத்தப்பட்ட பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம் அன்பர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்பட்டன. தண்டாயுதபாணியை ஆண்டி கோலத்தில் பார்த்து உள்ளத்தில் அவ் அற்புத தோற்றத்தைப் பக்தர்கள் நிலைநிறுத்திக் கொண்டார்கள். ஆடம்பர வாழ்க்கையில் மனம் சென்றுகொண்டிருப்பது மாறி அமைந்து எளிய தூய வாழ்க்கையில் மனம் திருந்தி அமைவதற்கு அக்காட்சி பயன்படுகிறது.

பகல் பன்னிரண்டரை மணிக்குச் சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் மடத்தில் உணவு தயார் செய்யப்பட்டிருந்தது. சுமார் ஐந்நூற்று ஐம்பது பேர் சமாராதனையில் பங்குகொண்டனர். அனைவரும் பந்தியில் அமர்ந்து நாம ஜபம் சொல்ல உணவு பரிமாறப்பட்டது. பிரமார்ப்பணம் மந்திரம் ஓதிய பிறகு அனைவரும் உணவு எடுத்துக்கொண்டனர்.

ஆண்டுதோறும் பழனி தண்டாயுதபாணிக்கு அபிஷேகமும், அன்பர்களுக்கு அன்னதானமும் நிகழவேண்டுமென்று விரும்பிய நல்லாசிரியர் ஒருவர் அவர்தம் வாழ்நாளில் ஈட்டிய செல்வத்

தின் ஒருபகுதியை நிலைத்த நிதியாகத் தபோவனத்தில் வைத்துள்ளார். அந்நிதியில் வரும் வட்டியைக்கொண்டு தபோவனம் இக் கைங்கரியத்தைச் சென்ற ஆண்டு முதல் சிறப்பாக செய்து வருகிறது. "எண்ணிய முடிதல் வேண்டும், நல்லவே எண்ணல் வேண்டும்" என்ற பாரதியாரின் கோட்பாடு அவர் விஷயத்தில் முற்றிலும் நிறைவேறிக்கொண்டு வருகிறது. அவர் நல்ல எண்ணம் எண்ணிவிட்டு இவ் உலகத்தைவிட்டு மறைந்துவிட்டார். அந்த எண்ணம் இன்று செயலாக நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

மாணுக்கர்கள் இவ்வழிபாட்டில் ஈடுபடுவதன்மூலம் அவர்கள் தங்கள் உள்ளத்தை தூய்மையும், பக்தியும் உடையதாக்குகிருர்கள். பள்ளிப் படிப்பில் இருந்து அவர்கள் இந்த நற்பயனைப் பெறமுடியாது. இத்தகைய வழிபாட்டின் மூலமாகவே அவர்களுடைய உள்ளம் செப்பனிடப்படுகிற செயல் நிகழ்கிறது. கல்வியில் உள்ளத்தைப் பண்படுத்துகின்ற வழிபாடும் சேர்ந்து அமையும்பொழுதுதான், அது பூரணக் கல்வியாகும்.

சுவாமி விவேகானந்தர் அத்தகைய பூரணக் கல்வி பெற்றவராக இருந்தார். நம்முடைய சிறுவர் சிறுமிகளையும் பூரணக் கல்வி பெறுவதற்கு நாம் வழி வகுப்போமாக.

செய்திகள்

நிகழ்பவை

டிசம்பர் மாதம் 16ஆம் தேதி புதன்கிழமையன்று முற்பகல் திருச்சி உறையூரிலுள்ள கலைப் பள்ளியில் நடைபெறும் பாவை விழாவை முன்னிட்டுஒருமாதம்நிகழும்தொடர்சொற்பொழிவு விழாவுக்கு **ஸ்ரீமத் துருவானந்த சுவாமிகள்** தலைமை வகித்துத் துவக்கிவைப்பார்கள்.

டிசம்பர் மாதம் 17ஆம் தேதி வியாழக்கிழமை ஸ்ரீசாரதா தேவியார் ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் இருபத்துநான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனையும், நண்பகல் ஒருமணி நேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள். அன்று திருச்சி பொன்மலை ஸ்ரீசாரதா பஜனை மண்டலியினர் நடத்தும் ஸ்ரீ சாரதாதேவியார் ஜயந்தி விழாப் பூஜையில் மாலை 6-30 மணியிலிருந்து இரவு 8-30 வரை **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** கலந்துகொண்டு "அன்னையின் அருள்வாக்கு" என்பதுபற்றிப் பேசுவார்கள்.

20-12-81 ஞாயிற்றுக்கிழமையன்று கோவை ஜில்லா குமரன் குன்று ஸ்ரீ கல்யாண சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

டிசம்பர் மாதம் 25ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீவிவேகானந்த வித்யாவன குருகுலப் பழைய மாணவர்கள் சங்கம் தபோவனத்தில் கூடும். அன்று கிறிஸ்து ஜயந்தியை முன்னிட்டு மாலை 6 30 மணியிலிருந்து இரவு 7-30 மணிவரையிலும் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்களும், பழைய மாணவர்களும் ஐக்கிய வணக்கம் செய்வார்கள்.

ஜனவரி மாதம் 6ஆம் தேதி புதன்கிழமையன்று வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் உபவாசமிருந்து இருபத்து நான்கு மணி நேரம் அகண்டநாம பஜனையும், ஸ்ரீமத் பகவத்கீதை முழுவதும் ஒருமுறை பாராயணமும் செய்வார்கள்.

ஜனவரி மாதம் 7ஆம் தேதி வியாழக்கிழமையன்று பிற்பகல் 4 மணிக்குமேல் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பொங்கல் விடுமுறைக்காக அவரவர்கள் ஊருக்குப் புறப்படுவார்கள்.

ஜனவரி மாதம் 13ஆம் தேதி புதன்கிழமையன்று முற்பகலில் திருச்சி உறையூர் கலைப் பள்ளியில் நிகழும் பாவை நிறைவு விழாவுக்கு **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஜனவரி மாதம் 15ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று காலை 7-00 மணியிலிருந்து பகல் 2-00 மணிவரையில் கோவை ஜில்லா மருதமலை 19வது ஆண்டுப் படித்திருவிழாவும், மருதமலை அருணகிரிநாதர் கிருத்திகைக் கழகத்தின் 26வது ஆண்டு நிறைவு விழாவும் நிகழவிருக்கின்றன. அவ்விழாக்களுக்கு **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** தலைமையேற்று ஆசியுரை வழங்குவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை பிரசார விலை ரூ. 16-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ... 6-00
இராமாயணம் ,, ... 5-00
தினசரி தியானம் ,, ... 4-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ... 5-50
கர்மயோக விளக்கம் ... 10-00
ஞானயோக விளக்கம் ... 8-00
ராஜயோக விளக்கம் ... 8-00
பக்தியோக விளக்கம் ... 6-00
பரமஹம்சரின் பெருமை ... 6-00
விவேகானந்த விவரணம் ... 4-00
விவேகானந்த உபநிஷதம் ... 4-00
கடவுளின் வடிவங்கள் ... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ... 3-50
அனுஷ்டான வேதாந்தம் ... 3-00
எதிர்கால இந்தியா ... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) 2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம் ... 2-00

தாயுமானவர் இயற்றிய

கருணாகரக் கடவுள் விரிவுரை ... 3-50
பரிபூரணானந்தம் ௸ ... 3-00
சின்மயானந்த குரு ௸ ... 3-00
ஆனந்தமானபரம் ௸ ... 3-00
சுகவாரி ௸ ... 3-00
மௌனகுரு வணக்கம் ௸ ... 3-00
எங்கும்நிறைகின்றபொருள் ௸ ... 2-50
பரசிவ வணக்கம் ௸ ... 1-00

பஜனைப் பாடல்கள் ... 2-50
கண்ணன் என்னும் கடவுள் ... 2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ... 1-50
விபீஷணன் சரணாகதி ௸ ... 1-50
பரமஹம்சர் பாமாலை ... 1-50
அமரநாத யாத்திரை ... 1-25
சந்நியாசி ... 1-25
இறைவணக்கம் ... 1-00
குழந்தைகளின் களிக்கூடம் ... 1-00
சகோதரி நிவேதிதை ... 1-00
காயத்ரீ ... 1-00
இராவண தத்துவம் ... 1-00
வாலி மோட்சம் (நாடகம்) ... 1-00
தவப்புதல்வர்கள் ,, ... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,, ... 1-00
தானவீரன் கர்ணன் ,, ... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ... 1-00
பிரஹ்லாதன் ,, ... 1-00

மார்க்கண்டேயன் (நாடகம்) ரூ. 1-00
தபோபலன் ,, ... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும் ... 1-00
நோய்க்கு இடம் கொடேல் ... 1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்) ... 0-80
நன்மக்களைப் பெறுதல் ... 0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) ... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ... 0-75
*ஆலய வழிபாடு ... 0-75
*சக்தி தத்துவம் ... 0-70
*சிவதத்துவம் ... 0-70
*மனிதனது நிஜசொரூபம் ... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ... 0-60
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ... 0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ... 0-60
*சூரிய நாராயணன் ... 0-50
*முருகக்கடவுள் ... 0-50
*விஷ்ணு தத்துவம் ... 0-50
தெய்வீக மகிமைகள் ... 0-50
சைவன் யார்? ... 0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது? 0-50
*கணபதி ... 0-40
வர்ணாச்ரம தர்மம் ... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ... 0-30
கந்தர் அநுபூதி ... 0-25

The Bhagavad Gita (10th Imp.) ...20.00
Sri Lalitambika Sahasranama Stotram ...10-00
The Indian National Education ... 8-00
Ramakrishna Lives Vedanta ... 8-00
Facets of Brahman or The Hindu Gods ... 5-00
Daily Divine Digest (DELUXE) ... 4-50
Daily Divine Digest (Ordinary) ... 2-50
Mahabharata (with plastic cover) ... 6-00
Ramayana (do) ... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover) ... 4-00
Sri Vishnu Sahasranama Stotram ... 4-00
The Bhagavad Gita (Small Size) ... 4-00
Siva Sahasranama Stotram ... 3-50
Bheeshma The Superman ... 3-50
Hinduism Hosts Christianity ... 3-00
Holy Bible—In the Light of Vedanta ... 1-50
Reminiscences of Master Mahashaya ... 1-50
*Introducing the Gita ... 1-50
The Garland of Paraaparam ... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami ... 1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதைக்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் ரூ. 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ தாயுமான சுவாமி தபோவனம்

லக்ஷ்மிபுரம், வெளிப்பட்டணம், ராமநாதபுரம்-623 535.

குருபூஜையும் அந்தர்யோகமும்

1982 ஜனவரி 19, 20 தேதிகளில்

தை மாதம் விசாக நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் மஹாசமாதி நிகழ்ந்தது. ஆகையால் ஆண்டுதோறும் குருபூஜை தை மாதம் விசாக நக்ஷத்திரத்தன்று நிகழ்ந்து வருகிறது. 1982ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் தேதி செவ்வாய்க்கிழமை இவ்வைபவம் நிகழும். அன்பர்களும் தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள் நிகழ்ச்சி முறை வருமாறு :

19—1—82 காலை

மணிமுதல்	மணிவரை	
4-30		திருப்பள்ளி எழுச்சி
6-00		உஷாபூஜை
7-30	9-00	ஸ்படிகலிங்கத்தின் வாயிலாகத் தாயுமான சுவாமிக்கு அபிஷேகம் அதே வேளையில் பஜனையும் நடைபெறும்
9-00	9-30	தாயுமானவர் பாடல் சமர்ப்பணம்
9-30	11-30	சிவ சஹஸ்ரநாம அர்ச்சனை, தனித்தனியாகப் பூ சாத்தி வணங்குதல்
11-45	12-00	நிவேதனம், தீபாராதனை
12-15		மகேஸ்வர பூஜை, அன்னப் பிரசாதம் வழங்குதல்
		மாலை
4-00	5-00	பஜனை
5-00	8-00	ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமையில் தக்க பேச்சாளர்களைக்கொண்டு அறவுரை

அந்தர்யோகம்

1982ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் தேதி புதன்கிழமை காலை 5-00 மணிமுதல் அன்று இரவு 7-30 மணிவரை அந்தர்யோகம் நிகழும். இதில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் முற்கூட்டியே ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறைக்கு எழுதி அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும். அனுமதி பெற்றவர்கள் உணவுச் செலவிற்கு ரூபாய் எட்டு ஸ்ரீ தாயுமான சுவாமி தபோவனத்தில் நேரில் செலுத்தவேண்டும். உள்ளூர் அன்பர்களும் தாய்மார்களும் பதிவின்றி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம்.

இங்ஙனம்
சித்பவானந்த

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.